தமிழ்ப் புலவர் வரலாறு

(மூன்றும் பகுதி)

"வித்துவான்"

நா. கனகராஜையர்

இயற்றியது.

பிரசுர கர்த்தர்:

இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,

புத்தக வர்த்தகர், மதுரை.

பதிப்புரிமை] 1930 [விலை அணா 8

முகவுரை

தமிழ்மொழி வழங்கும் நாடு தமிழ்நாடு எனப்படும். இக்காலத்தில் தமிழ் மொழியைத் தம் தாய் மொழியாகக் கொண்டவர், உலகத்தின் பல பாகங்களிலும் வாழ்கின்றனர். ஆயினும், தமிழ் நாடு என்ற சொல்லத் தகுதியுடையது சென்னை இராஜதானியில் ஒரு சிறு பகுதியே. இக்காலத்தில் பிழைப்பின்பொருட்டு அயல் நாடுகளிற் சென்று வாழ்வதுபோல நம் சுதேசமாகிய இந்திய நாட்டிலும் பல பகுதிகளிற்போய் நம்மவர் குடியேறி வாழ்கின்றனர்; இந்திய நாட்டைச் சுற்றியுள்ள சிறு சிறு தீவுகளிலும் சென்று வாழ்கின்றனர்.

பூர்வ காலத்திலும் இவ்வண்ணமே தமிழர் இந்திய நாடு முழுவதிலும் பல பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். ஆயினும், அவர்கள் தென்னாட்டிலே மிகுதியாய் இருந்ததால், வேங்கடம் என்னும் திருப்பதி மலைக்கும் குமரிக்கும் இடைப்பட்ட இடத்திலேயே வாழ்ந்தார்களென்பது பழைய நூல்களால் அறியப்படுகிறது. பல்லாயிர வருடங்களுக்கு முன்பு இந்நாட்டில் வாழ்ந்திருந்த நம் முன்னோர் வரலாற்றையும் வாழ்க்கை முறையையும் ஒருவாறு நாம் உணர வேண்டுமாயின், அக்காலத்திலும், அதற்குச் சற்றுப் பிற்பட்ட காலத்திலும் வாழ்ந்திருந்த நம் நாட்டுப் புலவர்கள் கருணைமிகுந்து நமக்கெனவைத்துப் போன புதையல்களாகிய செய்யுள் நூல்களை நன்குஆராய

வேண்டும். அவ்வாறு உண்மை யுணர்தற்கு ஆழ்ந்தகன்ற கல்வியும், கூர்மையான அறிவும், தளர்விலா ஊக்கமும், சிதைவிலாப் பொறுமையும், உள்ளத்துள் ஊறும் பாஷாபிமானமும், சிந்தையில் நிறைந்த தேச பக்தியும், சற்றும் சலியாது சத்தியத்தை ஆராயும் சரித்திரப் பயிற்சியும் வேண்டும். இவ்வளவு சாதனங்களேயும் பெறப் பல்லாண்டு முயற்சி செய்யவேண்டுவது அவசியமாம். இவற்றைத் தேடி அவ்வுண்மை நிலேகளேத் தருவப்புகுமுன்பு அப்புதைபல்களின் வாயில் வரை நம்மை அழைத்துச் செல்லுமாறு ஒரு சிறந்த துணையைப் பெற வேண்டும். அத்துணை யாதெனில், நம் நாட்டின் பூர்வ நாகரிகத்தை நாம் உள்ளவாறு அறிய வெளியிட்டருளிய பரமோபகாரிகளாகிய புலவர் பெருமக்களது வரலாறுகளை ஒருவாறு உணர்தலேயாம். 'இம்முயற்சி மிகவும் பெரிதும் அருமையுடையதும் ஆகுமே ! இஃது அறிவிலும் ஆண்டிலும் அனுபவத்திலும் மூத்த பெரியவரே செய்தற்குரியதாம்,' என்று கருதி யமையலாகாது. ஏனென்றால், ஊக்கமும், துணிவும், உறுதியும், முற்போக்குமே தம் செல்வமாய்க் கொண்ட இளைஞர் அறியவியலாத பெரும்பொருள் உலகத்தில் ஒன்றும் இல்லையன்றோ? பண்டைய நூல்களாகிய நம் முன்னோர் புதையலுக்கு இடப்பட்ட பூட்டுக்களைத் திருநீக்கித் திறக்கும் திறவு கோல்கள் களங்கமற்ற சிறுவருள்ளங்களே யாகையால், அவ்வுள்ளம் கொள்ளலாம்படி அவரனைவரும் நம் நாட்டுப் பூர்வீக வரலாறு அறிவதற்குப் பெருந்துணையாகிய புலவர் வரலாறுகளை நன்கு உணர வேண்டும்.

இந்நோக்கம்பற்றி இந்நாள் வெளி வந்துள்ள பல புத்தகங்களாலும் புலவர் சரித்திரத்தைச் சிறுவர்கள் அறிவது சிரம சாத்தியமாயிருப்பதால், சுருக்கமாகவும் அவர் உளங் கொள்ளத் தக்கவாறும், அநாவசியமான விவரங்களை விலக்கி, இச்சிறு புத்தகம் எழுதப்படுகின்றது. தமிழ்ப் புலவர்களை முற்காலத்தினர், இடைக் காலத்தினர், பிற்காலத்தினர் என்று மூன்று பகுதியினராக வகுக்கலாம்.

சங்க காலப் புலவரே முற்காலப் புலவர் ஆவர்; கம்பர் காலப் புலவர் இடைக்காலப் புலவர் ஆவர்; வில்லிபுத்தூரர் காலம் முதல் சிவஞான முனிவர் காலம் வரை இருந்தவரே பிற்காலப் புலவர். இவ்வகுப்புக்குட்பட்ட சங்க காலத்திற் சிறந்த சில புலவர் வரலாறு கூறும் முதல் தொகுதியில் இந்நூல் மூன்றாம் பகுதியாம். இதனுடன் இத்தொகுதி முடிவு பெற்றது.

நா. கனகராஜையர்

உரிமையுரை

செந்தமிழை யோர்ந்துணருஞ் சிந்தையுள்ள மாணவர்க்
செந்தமிழின் நாவலர்தம் சீரளக்கும்—இந்தவுரை [குச்
நூலுரிமை யாக நவின்றேன்யான் இஃதவர்க்கோர்
மாலுரிமை யென்றே மதித்து.

பொருளடக்கம்

பொருள்		பக்கம்
1.	மோசி கீரனார்	1
2.	சீத்தலைச் சாத்தனார்	7
3.	இளங்கோவடிகள்	27
4.	பெருந்தலைச் சாத்தனார் ...	49
5.	கோவூர் கிழார்	74
6.	மாறோக்கத்து நப்பசலையார் ...	91
7.	உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்	107

தமிழ்ப் புலவர் வரலாறு

(மூன்றும் பகுதி)

---

1. மோசி கீரனார்

மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகெனப்
பேசிய புலவர் மோசி கீரனார்
புலத்திறம் தெரிந்து புகலுவம் சிறிதே.

மோசி கீரனார் என்ற புலவர் பாண்டிய நாட்டவர் என்பது அறிவுடையார் சிலர் கருத்தாம். இப் புலவரது குலமும் குடியும் இன்னவென விளங்கவில்லை யாயினும், பெயர்ப்பொருளை யாராயும்போது, வேளாள ராயிருக்கலாம் என்று சிலர் ஊகிப்பர். மோசி என்பது கீரனார் என்ற பெயர் வாய்ந்த இப்புலவரது ஊர்ப்பெயர் என்று சிலர் குறிக்கின்றனர். ஏணிச் சேரி முடமோசி யார், கருங்கோழி மோசியார் என்றுள்ள பண்டைப்புலவர் பெயர்களை நோக்கும்போது, கீரனார் பெயர்க்கு முன் உள்ள மோசி என்பதும் ஒருவர் பெயராகவே யிருக் கும் என்று ஊகிக்கலாம். கீரனார் பலர் உளராதலால், அவர் தொகுதியிலிருந்து இன்னாரெனப் பிரித்தறிய, இக்கீரனார்க்குத் தந்தையார் பெயர் சார்த்தி, மோசியார் மகனார் கீரனார் என்று பொருள்பட, மோசி கீரனார் என்ற பெயர் வந்திருக்கக் கூடும்.

குறுந்தொகையில் ஒரு செய்யுள் செய்த புலவர் பெயர் படுமாத்து மோசி கீரன் கொற்றன் என்று வருகிறது. படுமாற்றூர் என்ற ஊர்ப்பெயர் ஏடெழுதுவோர் பிழையால் படுமாத்து என்று ஆயிருக்கலாம். இவ்வாறு கொள்ளப்படின், படுமாற்றூர் என்பது மோசி கீரனாரது ஊர்ப்பெயர் என்பது உணரப்படும். கொற்றன் என்பது அவர் மகனார் பெயர் எனக் கருதத் தக்கதாம். படுமாற்றூர் என்பது சிவகங்கைக்கருகில் உள்ள படமாத்தூர் என்று தற்காலம் வழங்கும் ஊராய் இருக்கலாம் என்று நுண்மாணுழை புலமுடையார் சிலர் கூறுகின்றனர்.

இப்புலவர் இயற்றிய செய்யுட்களாய் நற்றிணையில ஒன்றும், குறுந்தொகையில் இரண்டும், அகநானூற்றில் ஒன்றும், புறநானூற்றில் ஐந்தும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும் ஆகப் பத்துச் செய்யுட்கள் தற்காலத்திற் காணக் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு இவர் வரலாற்றை ஆராய்ந்து சுருக்கி யெழுதுவோம் :

ஒரு காலத்தில் இப்புலவர் பெருமான் தகடூர் எறிந்த பெருஞ்சேர லிரும்பொறை யென்ற சேரனைக் காணச் சென்றார். அரிசில்கிழார் என்ற பெரும்புலவரைத்தனக்கு அமைச்சராய்க் கொண்டவன் எனவும், அதியமானொடு போர் புரிந்து தகடூரைக் கைக்கொண்டவன் எனவும் அவனைப்பற்றிக் கேள்வியுற்ற இப்புலவர், நேரில் அவனைக் கண்டு புகழ்ந்து பாடிப் பரிசில் பெற விழைந்தது பொருத்தமே. இவர் சென்ற காலத்தில் அவன் அரண்மனையில் இருக்கவில்லை. அரசியற் பொறுப்பைப் பற்றிய ஏதோ வொரு முயற்சியின்பொருட்டு அவன்

வெளியேபோயிருந்தான். அவன் வரும்வரைகாத்திருக்க வேண்டியிருந்ததால், அரண்மனையில் வீர முரசத்தை வைத்துப் பூவும் புகையும் இட்டுப் போற்றும் கட்டில் ஒன்றைக் கண்டு, அச்சமயம் முரசம் அங்கு இல்லாமை யால் அக்கட்டில் அதன் பொருட்டு அமைந்ததென வறி யாது, அதன்மேல் ஏறிப் படுத்துத் தூங்கினர். அக்கா லத்தில் முரசுகட்டில் அரசராலும் குடிகளாலும் பெரிதும் போற்றப்படுவதாகையால், எவரும் அதன் அருகிற் சென்று அதன்மேல் ஏறத் துணியார். இவ்வுண்மையை யும் நம் புலவர் அறியார். இவர் அவ்வாறு உறங்கிக் கொண்டிருக்கையில் சேரலிரும்பொறை திரும்பி வந் தான்; முரசு கட்டிலின்மேல் ஒருவர் படுத்துறங்கு வதைக் கண்டான். அவன் எந்தச் சமயத்திலும் ஆத் திரம் எழாமல் மனத்தை அடக்கிக்கொண்டே விசா ரணை செய்யும் ஆற்றல் வாய்ந்தவனாதலால், பதற்ற மின்றி அக்கட்டிலின் அருகில் வந்தான்; புலவர் முகத் தைக் கூர்ந்து நோக்கினன்; அறிவின் விளக்கம் அங்கு விளங்குவதைக் கண்டான்; அவருடைய முகத்தோற்றத் தாலும் உடையாலும் அவர் தன் நாட்டவர் அல்லர், அந்நிய நாட்டவரே யென்ற உண்மையை அறிந்தான்; அறிந்ததும், 'இந்நிலையில் இப்புலவர்க்கு நாம் என்ன செய்யலாம்?' என்று எண்ணமிடுவானாயினன். உறங்கு வாரை எழுப்பலும் ஆகாது. உபசாரம் செய்தலும் வேண்டும். ஆகையால், இவர்தம் உறக்கத்துக்கு இடை யூறு நேரிடா வண்ணம், அக்கட்டிலின்மேல இவர் அருகில் அமர்ந்து, இளங்காற்று உண்டாகும்படி விசிறியொன் றெடுத்து விசிறுவானாயினன். இந்த உபசாரத்தைப்

பெற்ற புலவர் நடந்து வந்த இளைப்பாலோ, முன்னால் நன்கு உண்டிபெருமயக்கத்தாலோ சிறிது அதிகமாகவே தூங்கித் திடீரென்று விழித்துக்கொண்டார்; அருகிலே முடி புனைந்த மன்னன் தமக்கு விசிறிக்கொண்டிருந்த காட்சியைக் கண்டார்; நெஞ்சு துணுக்குற்றார்; மயங்கினார்; நாக்குழற, இன்னது சொல்வது என அறியாராய் நின்றார். இந்நிலை கண்ட அரசன் முக மலர்ச்சியோடு இவரைப் பார்த்துக் கையமர்த்தி, "புலவரேறே, இன்னும் சிறிதுபொழுது படுத்திருந்து, வந்த விளைப்பு மாற்றிக் கொள்ளலாமே!" என்று இனிய மொழிகளாற் கூறினன். அதைக் கேட்ட புலவர், உடனே பின் வரும் செய்யுளைப் பாடினர்:

" * * * * * *

குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
யறியா தேறிய வென்னைத் தெறுவர
விருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
யதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே, வியலிடம் கமழ
இவணிசை யுடையோர்க் கல்ல தவணது
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகோல்
வலம்படு குரிசில்நீ யீங்கிது செயலே?"*

* புறநானூறு—செய்யுள், 50.

இச்செய்யுளில் எண்ணெய் நுரை முகந்தது போன்ற மென்பூம்படுக்கை என்று அக்கட்டிலைக் கூறியது ஆய்ந்தின்புறற்குரியது. விசிறியால் வீச மனைமுள்ள காற்று எழுந்தது என்ற கருத்துப் படப் பாடியிருப்பதும் இருபாற்படுக்கும் வாய் வாள் என்று வாளைப்பற்றிக் கூறியதும் கவனிக்கத் தக்கன.

பொதுப்பட எல்லா அரசர்க்கும் குடிகளுக்கும் பயன்படும்படி இவர் பாடியுள்ளதொரு பாடல் தமிழுலகுள்ளளவும் இப்பெரியாரை நாம் மறவாதிருக்கச் செய்யும். அச்செய்யுளில் அரசனை உயிரெனவும் குடிகளை உடலெனவும் கூறி, அரசனே தன் குடிகளாகிய உடலுக்கு உயிரென்ற உண்மையை அறிய வேண்டும் என்று வற்புறுத்துகின்றார். அது வருமாறு:

"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்;
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே."*

தற்காலத்திற் கோங்கணம் என்று கூறப்படும் நாடு முன்னாளில் கோண்கானம் என்ற பெயரால் வழங்கியது. கொண்கான நாட்டில் வேளாளர் தலைவன் ஒருவன் இருந்தான். அவன் சிறந்த கொடை வள்ளல் என்று கேட்டு, மோசி கீரனார் அவனிடம் சென்று, மூன்று பாடல்கள் பாடினர். அவற்றுள் உள்ள அருங் கருத்துக்கள் சில இங்கு எடுத்துப் பாராட்ட வுரியன வாம்.

* புறநானூறு - செய்யுள் 186

"திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்தர்."*

'மாந்தர், நிறைந்த நீர் உள்ள கடலருகு சென்றாலும், அதில் உள்ள நீர் பருக உதவாதாகையால், அருகில் நல்ல நீர் உள்ள சிறு கிணறும் எங்கேனும் உண்டோ என வினவுவர். அதுபோலவே, அரசர் பலர் அருகில் இருப்பினும், கொடுக்கும் குணம் உடைய பிறரையே புலவர் அடைவர்.' என்றார்

"ஈ யென இரத்தல் அரிது; நீ நல்கினும், நல்காய் ஆயினும், பாடல் எனக் கெளிதே," என்றது ஊன்றி யுணர்ந்து இப்புறற் குரியதாம்.

கொண்கானத்துக் குன்றம் இரப்போர்க்கீதலும் எதிர்ப்போரைத் தகைத்தலும் ஆகிய இரண்டு நன்மை யுடையது என்று கூறியுள்ளதும் புலவரது பெருமை யைக் குறிக்க வல்லது.

இப்பெரும்புலவர் பாண்டி நாட்டவர் என்று மதிக்கப்பட்டவராயினும், சேர வேந்தனையும், கோண் கானங் கிழானையும் பாடியிருப்பது கொண்டு, பெரும் பாலும் சேர நாட்டிலேயே சஞ்சாரம் செய்துகொண் டிருந்தவர் என்று அறியலாம். இத்தகைய நல்லோர் வாக்கில் வரும் நல்ல கருத்துக்களை அறிதற்பொருட் டேனும் நாம் இவரது வரலாற்றை ஆராய வேண்டுவது அவசியமாம். இவ்வாறு தமிழ்த் திருப்பணி புரிந்து இப்புலவர் பெருமான் புரவலர்க்கும் புலவர்க்கும் விருப் புக்குரியராய் வாழ்ந்திருந்து, பிறகு இறைவன் திருவடி நிழல் சேர்ந்தார். இவரது மதம் இன்னதென இவர் செய்யுட்களால் அறிதற்கில்லை.

* புறநானூறு—செய்யுள், 154.

2. சீத்தலைச் சாத்தனார்

மணிமே கலையெனும் மாப்பெருங் காப்பியம
இயற்றமிழ் வளம்பெற வியற்றி யளித்தருள்
சீத்தலைச் சாத்தனார் சிறப்பினைச் சிறிது
நாத்தலை நிறுத்தி நவிலத் துணிதுமே.

மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்ற புலவர், திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றிய காலத்தே மதுரை நகரில் வாழ்ந்திருந்த கடைச் சங்கப் புலவருள் ஒருவராவர். கூல வாணிகன் என்ற அடைமொழியை உடையராயிருப்பதால், அந்நாளில் மதுரை மாநகரில் தானிய வியாபாரியாயிருந்த வணிகரொருவரது வழியிலே வந்தவராக இவர் மதிக்கத் தக்கவராவர். இவரும் தம் குலத் தொழில் செய்து சிறப்புற்றிருக்கலாம். புலமையின் நலத்தைப் பிறரிடம் தேர்ந்து இன்புறும் இயல்பு இவரிடம் உண்டென்பதை வள்ளுவனார் வாக்கை இவர் எடுத்தாண்டிருக்கும் இயல்பால உணரலாம். சீத்தலை என்ற அடைமொழி இவர்க்குப் பொருந்துவதுபற்றி இரு வகை வரலாறுகள் வழங்குகின்றன:

'சேந்தலை, முகத்தலை, கழாத்தலை என்பனபோலச் சீத்தலை என்பது ஓர் ஊர்ப் பெயராகும். பெருஞ்சாத்தனார் முதலிய புலவரின் வேறாக அறியும்பொருட்டு இப் புலவர் ஊர்ப்பெயர் சார்த்திச் சீத்தலைச் சாத்தனார் எனப்

பட்டார். சீத்தலை என்னும் ஊர் திரிசிராப்பள்ளி ஜில்லா பெருமளூர்த் தாலூகாவில் உள்ளது. இதுவே இவரது பிறப்பிடமாக வேண்டும். இவர் மதுரையிலே போய்க் கூல வாணிகம் செய்து வாழ்ந்து வந்தார் இது நற்றிணைப் பதிப்பாளர் அறுதியிட்ட உறுதியுரையாம். சீத்தலை என்ற ஊர் மலை நாட்டில் உள்ளது என்று மணிமேகலைப் பதிப்பாசிரியர் கூறுவர். அவ்வூரில் உள்ள ஐயனார் பெயரே இப்புலவர்க்கு இடப்பட்ட பெயராம் என்றும் இப்பெரியார் கூறுவர் இக்கொள்கையைப் பிறர் கூற்றாக ஆண்டுள்ள இப்பெரியார் வேறொரு வரலாறும் கூறுவர் :

சாத்தனார் சொற்பொருளாராய்ச்சியிலே மிகச் சிறந்த புலவராதலால், சங்கத்திலே அரங்கேற்றும் பொருட்டுப் புலவர் கொண்டு வரும் நூல்களிலே குற்ற வாராய்ச்சி செய்வர்; குற்றங்கள் காணுந்தோறும் மனம் வருந்தி, 'இதையும் கேட்க நேரிட்டதே!' என்று தலையிற் குத்திக்கொள்வர். அவ்வாறு பல்காலும் குத்திக் கொண்டதால், இவர் தலை சீப்பிடித்த தலையாயது. அதனால், இவர் சீத்தலைச் சாத்தனார் எனப்பட்டார் இக் கருத்தை யுட்கொண்டே அக்காலத்துச் சங்கப் புலவருள் ஒருவராகிய மருத்துவன் றமோதரனார் பின் வருமாறு பாடினர்:

" சீந்திநீர்க் கண்டந் தெறுசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்தில் தீர்வுசாத் தற்கு.''

இவ்வரலாறு வெகுகாலமாகப் புலவர்களால் அங்கீகரிக்

கப்பட்டு வந்ததே. சீத்தலை என்றது ஊர்ப்பெயர் என்பது பின்னரெழுந்த கொள்கையேயாம்.

இனி இவ்விரண்டு கொள்கைகளிலும் உள்ள உண்மையை ஆராய்வோம்: மருத்துவன் தாமோதரனார் கூறிய மருந்து தலைக் குத்துக்கு உதவுவதாம். சிந்தி நீர்க்கண்டம் சுக்கு என்ற இவற்றைத் தேனோடு கலந்து மோந்து பார்த்தல், தலையினுள் உண்டாகும் வலியாகிய குத்து வலிக்கு மருந்தாம். சாத்தனார்க்கு இருந்ததாகச் சொல்லப்படும் தலைக்குத்தோ, வெளிப்புறத்திலே அவர் பலகாலுங் குத்திக்கொண்டதால் நேர்ந்த காயத்தில் உண்டாகிய குத்து வலியாம். இவ்வாறு அமைந்த புண்கள் இருக்கு மாயின், அவற்றிற் சீப்பிடித்து இருத்தல் இயல்புதான். ஒருவர் எத்தனை முறைதான் தாமாகக் குத்திக்கொண்டாலும், தலையிலே காயம் ஏற்பட்டுச் சீப்பிடிக்குமா? அப்படியே சீப்பிடித்திருப்பினும், அதற்கு மருந்து தாமோதரனார் கூறிய மருந்தா? அக் காலத்திலே சங்கத்திலே மதுரை நகரிலே அரங்கேற்ற வேண்டி நூல்களைக் கொண்டு வந்த புலவர்கள், சாத்தனார்க்கு அடிக்கடி தலைக் குத்து அமையத் தக்கவாறு குற்றமே மிக்க செய்யுட்களைச் செய்பவர்களா? கபிலரும் பரணரும் நக்கீரரும் வாழ்ந்த அக்காலத்தில் இவ்வாறு அறிவற்றவர் இருந்திருப்பினும், சங்கத்துக்கு வந்திருப்பாரோ? இன்னோரன்ன பல வினாக்களுக்கு இவ்வரலாற்றை உண்மையென நம்புவோர் விடை கூறுதல் எளிதன்றாம். தாமோதரனார் கூறிய தலைக் குத்துப் புறப் புண்ணால் ஆனதன்றி, உள்ளகத்தமைந்த தலைக் குத்தாகவே இருக்கவேண்டும். சாத்தனார்க்கு இந்நோய்

இயற்கையிலேயோ, செயற்கையாகவோ அமைந்திருக்க வேண்டும். திருவள்ளுவர் வாக்காகிய அமுதத்தைப் பருகியதால், இவர் இன்புற்றது கண்டு, தாமோதரனார் இவர்க்கு அதனால் தலைக் குத்துத் தீர்ந்தது எனக் கூறி யிருக்கின்றார். இக்காலத்திலும் செவிக்கின்பமாக உள்ள கேள்விகளைக் கேட்டலால் தலைக் குத்து முதலிய சில நோய்கள் தீர்தல் இயல்பாகக் காண்கின்றோமாகையால், இவ்வுண்மை யுட்கொண்டே தம் நண்பர்க்கு இருந்த தலைக்குத்துத் தீர்வு இவ்வாறாயது எனத் தாமோதரனார் கூறியுளர். இவ்வாறு கொள்வோ மாயின், 'சீத்தலை யென்பதன் பொருள் என்னை?' என்னும் கேள்வி யெழும். இக்காலத்தில் நாம் அறிந்த வளவில் சீத்தலை யென்பதை ஊர்ப் பெயர் என்றே கருத இடமிருக் கிறது.

மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் எனப்பட்ட இப்புலவரது ஊர் சீத்தலை என்பதா? மது ரையேயோ? மதுரை என்ற ஊர்ப்பெயரை முன்னே சேர்த்திருத்தலால், இப்பெரியார் தம் கால மெல்லாம் மதுரையிலேயே வாழ்ந்து, அந்நகரைத் தந்நகராகக் கொண்டவராவர் என்று ஊகிக்க இடம் தரும் சீத் தலை யென்றவூர் இவர் முன்னோர் வாழ்ந்த வூராக விருக்கலாம். இக்காலத்திலும் மதுரை போன்ற நகரங் களில் இரண்டு மூன்று தலை முறையாக வாழ்ந்து கொண்டிருந்தாலும், சிலர் தம் முன்னோர் ஊரையே தம் ஊராகத் தம் பெயரொடு சார்த்திக் கூறுதல் கேள்வி யுறுகின்றோமன்றோ? இம்முறையிலே இப்புலவரும் சீத் தலை யென்ற வூரிலே வாழ்ந்த ஒரு வாணிகர் குடியிற்

பிறந்து, புலமை சிறந்து, மதுரையிலே வந்து நிலைத்து வாழ்ந்தவர் என்பது விளங்கும். சாத்தனார் என்ற பெயர் பெற்றிருத்தலால், இப்பெயர் ஐயனார் பெயர்களுள் ஒன்றாய் இருத்தல் பற்றி, இவர் முன்னோர் ஊராகிய சீத்தலை யென்பது மலை நாட்டின்கண் உள்ளதாய் இருக்கும் என்று கூறுதல் பொருத்தமே. இக் காலத்திலும் மலைநாட்டில் எங்கும் வணங்கப்படும் தெய்வங்கள் ஐயனாரும் பகவதியுமேயாவர். சாத்தர் என்றே ஐயனார் பெரும்பாலும் கூறப்படுதல் இந்நாட்டில் இக் காலத்திலும் உள்ள வழக்கமாம். இவ்வாறுள்ள பெயரொற்றுமையால், சீத்தலை யென்பது மலை நாட்டுள்ளதோர் ஊர் என்று துணிவோம். இவ்வூர் எங்கிருப்பினும், புலவர்க்கு இருந்ததாய்க் கூறப்படும் சீத்தலை என்ற குறையை நிவர்த்திக்க உதவுவதாகையால், சாத்தனார்க்குப் புகழை விளைப்பதேயாம். சீ + தலை = சீத்தலை என்பது வேறொரு வகையாலும் கூற இடம்படும்: ' அக்காலத்தில் சீழ் என்று வழங்கிய இச்சொல் இவர் பொருட்டுச் சீ என்று ஆயிருக்குமோ ?' என்ற கேள்வியும் எழும் ஆகையால், சீத்தலை யென்பது ஊர்ப் பெயரென்று கொள்ள இதுவும் ஓர் உதவியாம். இதுகாறும் கூறியவற்றால், இப்புலவரது பெயரைப் பற்றிய வரலாறு ஒருவாறு முடிந்தது.

இவர் செய்தனவாக இக்காலத்தில் நாம் காண்பன ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய மணிமேகலையும், புறநானூற்றில் ஒரு செய்யுளும், அகநானூற்றில் ஐந்து செய்யுட்களும், நற்றிணையில் மூன்று செய்யுட்களும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும் ஆகிய இவை

யேயாம். சிலப்பதிகாரத்தில் இப்புலவரைப் பற்றி வழங்கும் வரலாறு வருமாறு :

"மணிமேகலை துறந்தாள் என்பதுணர்ந்து, அத்துற விளைப் பின் வைத்து அதனொடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி, அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையை யுரைத்துழி, அவர், மணிமேகலை பெயரான், அவள் துறவே துறவாக, அறனும் வீடும் பயப்ப ஒரு காப்பியம் செய்தமைத்தனர் எனக் கேட்டு, அவ்வடிகள் விரும்பி, இவ்விரண்டினையும் ஒரு காப்பியமாக்கி உலகின்கண் நடாத்துவான் வேண்டவும், இருவர் செய்தலின் இரண்டாக நடந்தன."

"உரைசா லடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்."—பதிகம்

"தண்டமி ழாசான் சாத்தன் இஃ துரைக்கும்," என்று தொடங்கிக் காட்சிக் காதையில் மதுரையில் நிகழ்ந்த கண்ணகி வரலாறு கூறப்படும்; வரந்தரு காதையிலும் மணிமேகலை துறவு சுருக்கிக் கூறப்படும்.

இவ்வாறு சிலப்பதிகாரத்தில் ஆங்காங்கு வரும் செய்திகளால், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்து மதுரைக் காண்டம் இயற்றச் சாத்தனார் உதவி பெரிதும் பயன்பட்டது என்பது விளங்கும்.

மணிமேகலையில் பதிகத்தி னிறுதியில் வரும்.

"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திறம் மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனன்."

என்ற அடிகளால் சாத்தனார் தாம் மணிமேகலை செய்து இளங்கோ வேந்தரைக் கேட்பித்தனர் என்பது விளங்கும். இவ்வாறு அரசப் புலவரும் புலவரரசரும் ஒற்றுமையோடு ஆராய்ந்து செய்த இரண்டு பெருங்காப்பியங்கள் ஐம்பெருங்காப்பியங்களில் இரு மணிகளாய் விளங்கல் இக்காலத்திலும் அறிவுடையார் அறிந்த உண்மையாம் இப்புலவர் கண்ணகி வரலாற்றை இளங்கோவடிகளுக்கு அறிவித்தார் என்பதை இவ்விருவரும் செய்துள்ள செய்யுட்களாலேயே அறிதலால், அவ்வரலாற்றில் உள்ள சில முக்கியாமிசங்களை இங்கு வெளியிடுகிறோம் :

மதுராபதி யென்னும் மதுரை நகர்த் தெய்வம், மிக்க சினத்தோடு மதுரையை விட்டு நீங்கும் கண்ணகியின் முன் தோன்றிக் கோவலன் இறந்ததற்குக் காரணம் அவனது வினைப் பயனே யென்று விளக்கிக் கூறிய செய்தியை அங்கு ஒருபால் உறக்க மின்றிப் படுத்திருந்த சாத்தனார் கேட்டார். கேட்ட இத்தெய்விகச் செய்தியையும் கண்ட காட்சிகளையும் இளங்கோவடிகளின் மூத்தோனாகிய சேங்குட்டுவேனிடம் அவர் கூறினர். கண்ணகியைப் பின்பற்றி மலை நாட்டுக்கு வந்தாராதலால், இவர்க்கு இத்திருப்பணி புரிய இயன்றது. சாத்தனார் கூறிய செய்தி, “ தீவினைச் சிலம்பு காரணமாகக் கோவலன் கொலையுண்டதும், அரசன்முன் சென்று கண்ணகி சிலம்போடு வழக்கிட்டதும், சிலம்பை அரசன் தேவி முன் உடைத்து வஞ்சினம் கூறியதும், மதுரை நகரைச் சுட்டதும், அரசனும் தேவியும் அரியணையிலேயே இறந்ததும், கண்ணகி வஞ்சி நாடு அடைந்

ததும் ஆகிய இவையேயாம். சிலப்பதிகார வரலாற்றுக்கு இவை முக்கியமான செய்திகள் என்பதில் ஐயமுண்டோ ?

இதனால், சாத்தனார் மணிமேகலை இயற்றிய பேருபகாரம் புரிந்ததன்றிச் சிலப்பதிகாரம் இயல்வதற்கும் முக்கிய காரணராய் இருந்தனர் என்பது விளங்கும். இப்பரம உபகாரி செய்த மணிமேகலைச் செய்யுள், 'சிந்தைக்கினிது ; செவிக்கினிது ; வாய்க்கினிது ;' என எவராலும் பாராட்டப்படுவதாகையால், அதன் மூலம் இவர் உலகிற்குச் செய்த உதவியினை ஒருவாறு அளக்க முயல்வோம் :

இரண்டாயிரத்தைஞ்ஞூறு ஆண்டுகட்குமுன் நம் நாட்டிலே தோன்றி வளர்ந்து உலகெல்லாம் பரவிய பௌத்த மதத்தின் உண்மைகளை உள்ளவாறு உலகுணர எளிய நடையில் உணர்த்தும் பண்டைத் தமிழ்ச் செய்யுளாய் இக்காலத்தில் நாம் காண்பது மணிமேகலை என்ற பெருங்காப்பியமே யென்பது தமிழராவார் அனைவரும் அறிந்ததே. இக்காப்பியத்தைச் செய்த புலவர் அக்காலத்து மக்கள் மதப் போராட்டம் இன்றி ஒரு நாட்டில் ஒற்றுமையாய் வாழ்ந்த உண்மையைப் பலபடத் தெரிவித்துளர். இச்செய்யுளால் உலகம் உணரும் உண்மைகள் பல. அவற்றுள் புலவரது புலமைத்திறத்தை விளக்கும் சிலவற்றை இங்கே கூறுவோம் :

மணிமேகலைப் பதிகத்திலே சம்பாபதி என்ற ஒரு தெய்வத்தைப்பற்றிக் கூறுகிறார். இத்தெய்வத்தின் உருவம் மனத்திலே உதிக்குமாறு,

" இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளி மேனி விரிசடை யாட்டி."

என்றார். பாரத தேசம் முழுமைக்கும் அதி தேவதை யாய் இக்காலத்துத் தேச பக்தர்களால் மதித்துப் பாராட்டப்படும் பாரத தேவி என்ற தெய்வத்தை இப் புலவர் சம்புத் தீவக் காவற்றெய்வம் சம்பாபதி என்று கூறி வருணித்தது இவ்வாறு ஆகும். இளங்கோவடி களும் சிலப்பதிகாரத்தில் கட்டுரை காதையில், மதுரா பதி என்ற தேவியை,

" சடையும் பிறையுந் தாழ்ந்த சென்னிக்
குவளை யுண்கட் டவளவாண் முகத்தி
கடையெயி றரும்பிய பவளச்செவ் வாய்த்தி
யிடைநிலா விரிந்த நித்தில நகைத்தி
இடமருங் கிருண்ட நீல மாயினும்
வலமருங்கு பொன்னிறம் புரையும் மேனியள்
இடக்கை பொலம்பூந் தாமரை யேந்தினும்
வலக்கை யஞ்சுடர்க் கொடுவாள் பிடித்தோள்
வலக்கால் புனைகழல் கட்டினும் இடக்கால்
தனிச்சிலம் பரற்றுந் தகைமையள்............
பொதியிற் பொருப்பன் குலமுதற் கிழத்தி."

என்று பாடியிருத்தல் இங்குக் கவனிக்கத் தக்கது. இக் காலத்தில் பாரத மாதாவின் ஸ்வரூபம் என்று பங்கிம் சந்திர சட்டர்ஜி, சுப்பிரமணிய பாரதியார் முதலிய புல வர்கள் கூறும் கூற்றுக்களுக்கும் இவற்றுக்கும் உள்ள ஒற்றுமை ஆராய்ச்சிக்குரியதாம்.

மணிமேகலையில் விழாவறை காதையில்,

"நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்."

என்று பாடியது, இப்புலவர் பௌத்தரேயாயினும் பிறர் தெய்வங்களைத் தூஷிக்கும் சிறுமை யில்லாத பெருந்தன்மை வாய்ந்தவர் என்பதை விளக்குவதோடு, அக்காலத்தில் அந்நாட்டில் பௌத்த மதத்தைக் காட்டிலும் சைவமதமே தலையெடுத்திருந்தது என்ற உண்மை யையும் உரைத்தவாறும்.

மத வாதியரும், தருமோபதேசகரும், பிறரும் தத்தமக்குரிய இடங்களிலே இருந்து தத்தமக்கேற்ற திருப்பணி புரிதலையும் அழகுற இப்புலவர் கூறியிருப்பது பாராட்டற்குரியது:

"பற்று மாக்கள் தம்முட னாயினும்
செற்றமும் கலாமும் செய்யா தகலுமின்."

என்ற இதனைக் காட்டிலும் சிறந்த உபதேசம் ஒன்று உண்டோ?

ஊரலருரைத்த காதையில்,

"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்கா
தின்னுயிர் ஈவர்; ஈயா ராயின்,
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்;
நளியெரி புகாஅ ராயின், அன்பரோ
டேனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்."

என்ற மூவகைப் பத்தினிப் பெண்டிர் இயல்பைத் தெரிவித்திருத்தல் நம் புலவர்க்கு உலகமுள்ள வளவும் புகழ் விளைவிப்பதாம்.

புத்த மதத்தின் முக்கியக் கொள்கைகளை,

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம் ;
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம் ;
பற்றின் வருவது முன்னது; பின்ன(து)
அற்றோர் உறுவ(து) அறிக."

என்று கூறித் துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்ற வாய்மைகள் இவை யென விளங்க வைத்தார். ஐவகைச் சீலம் என்ற ஒழுக்கச் சிறப்பையும் இங்குக் கூறியுளர்.

மலர்வனம் புக்க காதையில், விளிப்பறைபோகாது மெய்புறத்திடூஉம் பளிக்கறை மண்டபத்தையும், அதனு ளிருக்கும் புத்த பாத பீடிகையையும் பற்றிக் கூறியவை ஆராய்ந்தின்புறத் தக்கன.

" செய்வினை சிந்தை யின்றெனின் யாவதும்
எய்தாது."

என்ற ஒரு கொள்கையை இங்கு விளக்கினர். இக் காதையிற் களிமகனையும், மையலுற்ற மகனையும், பேடி யையும், உண்ணா நோன்பியையும் இயற்கை நலந் தோன்ற வருணித்தது ஆய்ந்தாய்ந்து இன்புறற்குரியது.

பளிக்கறைபுக்க காதையில், மதங்கொண்ட யானை யைக் கடலில் வழியறியாது ஓடும் நாவாய்க்கு நிகராகக் கூறியதும், மணிமேகலையை வகைவரிச் செப்பினுள் வைகிய பாவைக்கு நிகராகக் கூறியதும், சுதமதி உதய குமரனுக்கு அறிவு விளங்க,

“ வினையின் வந்தது; வினைக்கு விளைவாயது;
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது;
மூப்புவிளி வுடையது; தீப்பிணி யிருக்கை;
பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்;
* * * *
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து,
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்.''

என்று கூறுவதாய் அமைத்ததும்ஆய்ந்தின்புறற்குரியன.

மணிமேகலா தெய்வம்வந்து தோன்றிய காதையில், சங்க தருமன் என்ற புத்த பிக்ஷுவைப்பற்றி வருணித்ததும், புத்த தேவனை, “தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்,'' என்று கூறியதும், பிறவும் கவனித்தற்குரியன.

அடுத்து வரும் தொடர்ந்த வரலாறுகட்கேற்ப இடையிடையே புத்த தேவனைப் பிறர் வாக்காலேனும் இவர் புகழ்ந்து மகிழ்வதால், மத விஷயத்தில் இவரது மனப்பான்மை விளங்கும். அந்தி மாலையை வருணிப்பதாக,

“ குவளை மேய்ந்த குடக்கட சேதா
முலைபொழி தீம்பால் எழுதுகள் அவிப்பக்
கன்றுநினை குரல மன்றுவழிப் படர.''

என்று பாடியது எவர் மனத்தையும் உருக்கும்.

சுடுகாட்டை வருணிப்பதும் பிறவும் ஆங்காங்கு இருந்து பார்ப்பது போலவே தோன்றும்.

மத விஷயங்களை வாதப் பிரதிவாதங்களோடு விளக்கமுறத் தெரிவிப்பதும், தர்க்க வுண்மைகளை வெளி

யிடுவதும், எளிய நடையில் அமைந்த அகவற் பாவில் இப்புலவரைப்போல வேறு எப்புலவராலும் இயலா.

மணிமேகலையின் சுவையை ஒருவாறு வெளிப் படுத்த இங்குச் சில காட்டப்பட்டனவாயினும், முழு வதும் ஆராய்ந்து வேண்டும் உண்மையை உணர்ந்து கொள்ள மாணுக்கர்களே முயல்வார்கள் என்றே எதிர் பார்க்கப்படும்.

இனி இப்புலவர் பெருமான் தமிழகத்துக்கும் தமிழ் மொழிக்கும் இயற்றியிருக்கும் திருப்பணியைப் பற்றிச் சிறிது ஆராய்வோம் :

“ மந்தா கினியணி வேணிப் பிரான்வேங்கை மன்னவநீ
கோந்தார் குழல்மணி மேகலை நூனுட்பங் கோள்வதெங்
[ஙன் ?
சிந்தா மணியுந் திருக்கோ வையும்எழு திக்கோளினும்
நந்தா வுரையை யெழுதலெவ் வாறு ? நவின்றருளே.”

என்ற சிவப்பிரகாசர் வாக்கு இங்குக் கவனிக்கத் தக்கது.

பசுவின் சிறப்பை விளக்கக் கருதி ஜீவகாருணியம் மேலிட்ட உள்ளத்தோடு பின் வருங் கருத்தை அமைத் துள்ளார்:

“ விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டுச் சிறந்ததன் றீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
இதனெடு வந்த செற்றம் என்னை ?”

உலகத்திற் சிறந்ததோர் அற்புதச் செயல் நிகழு மாயின், அஃது இந்திரனது பாண்டு கம்பலத்தைத் துளக்கும் என்று கூறுவர்; தேவ லோகத்தைக் காட்டிலும் பூலோகமே சில காரணங்களாற் சிறந்தது என்று பின் வருமாறு உரைத்துள்ளார் :

"எண்டேச் செய்வினை ஆண்டுநுகர்ந் திருத்தல்
காண்டகு சிறப்பினுங் கடவுள ரல்லது
அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரும் இல்லாத் தேவர்நன் னாடு."

சரித்திரத் தொடர்ச்சியோடு பொருத்திச் சில தெய்வங்களைப் புகுத்தித் தெய்விகச் செயல் பலவற்றை விளக்குவது இவ்வாசிரியர்க்கு இயல்பாம். கந்திற்பாவை, சம்பாபதி, சிந்தா தேவி, மணிமேகலா தெய்வம் முதலிய தெய்வங்கள் இப்புலவரால் மணிமேகலை வரலாற்றுட் பிணைக்கப்பட்டிருப்பது, ஆராய்ந்தின்புறத் தக்கது. கற்பின் சிறப்பினைப்பற்றி வேறு எப்புலவரும் கூறாத வாறு இவர் அமைத்திருத்தல், எத்தகையவரையும் இன்புறுத்தாதிராது.

ஆதிரை என்ற கற்பரசி, தன் கணவன் உடைகலப் பட்டுக் கடலகத்து இறந்தான் என்று கேள்வியுற்றுச் சுடலையிலே தீ மூட்டி, "என் கணவன் சென்ற விடத்துக்கு யானும் செல்வேன்," என்று கூறித் தீயின்மேல் ஏறினள். உண்மையில் அவள் கணவன் இறவாமை யால்,

"படுத்துடன் வைத்த பாயற் பள்ளியும்
உடுத்த கூறையும் ஒள்ளெரி யுறாஅ(து)

ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலில்
சூடிய மாலையும் தோன்னிறம் வழாது
விரைமலர்த் தாமரை யொருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருந்தனள்."

என்று கூறுவர்.

பரசு ராமன் க்ஷத்திரியரை நாசஞ் செய்து வந்த காலத்தில், சோணாட்டில் அரசு பூண்டிருந்த வேந்தன் ஒருவன் தன் கணிகை மகன் ககந்தன் என்பானை அரசனாக்கிச் சென்றனன். அக்ககந்தன் ஆண்டு வரும் நாளையில், அவன் மகன் கற்புடைச் செல்வியாகிய மருதியென்பாளை மனைப்புறத்தே கண்டு, 'நீ வா,' என்று கூறி அழைத்தனன். அப்பெண்மணி சதுக்கப் பூதத்தினிடம் முறையிட்டனள். அச்சந்தர்ப்பத்தில் அப்பூதத்துக்கும் மருதிக்கும் இடையில் நிகழ்ந்த சம்பாஷணை மிகவும் சுவையுடையது:

மருதி கூறியது:

"மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்.
புக்கேன் பிறனுளம் புரிநூன் மார்பன்
முத்தீப் பேணும் முறையெனக் கில்லென
மாதுய ரெவ்வமொடு மனையகம் புகாஅள்
பூத சதுக்கம் புக்கனள் மயங்கிக்
'கொண்டோற் பிழைத்த குற்றந் தானிலேன்;
கண்டோன் நெஞ்சிற் கரப்பெளி தாயினேன்;
வான்றரு கற்பின் மனையறம் பட்டேன்;
யான்செய் குற்றம் யானறி கில்லேன்;

பொய்யினை கொல்லோ பூத சதுக்கத்துத்
தெய்வம் நீ?' எனச் சேயிழை யரற்றலும்,''

சதுக்கப் பூதம் கூறியது :

" மாபெரும் பூதந் தோன்றி, 'மடக்கொடி,
நீகேள்,' என்றே நேரிழைக் குரைக்கும்:
'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்!
பிசியும் நொடியும் பிறர்வாய்க் கேட்டு
விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
கடவுட் பேணல் கடவியை யாகலின்,
மடவர லேவ மழையும் பெய்யாது;
நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறர்நெஞ்சு சுடூஉம் பெற்றியும் இல்லை ;
ஆங்கவை யொழிகுவை யாயி னாயிழை
ஓங்கிரு வானத்து மழையும்நின் மொழியது ;
பெட்டாங் கொழுகும் பெண்டிரைப் போலக்
கட்டா துன்னையென் கடுந்தொழிற் பாசம் ;
மன்முறை யெழுநாள் வைத்தவண் வழூஉம்
பின்முறை யல்ல தென்முறை யில்லை.''

கற்புடைப் பெண்டிரது பெருமையை விளக்கவும் அவரது இயல்பைத் தெரிவிக்கவும் இவ்வாக்குக்களைக் காட்டிலும் சிறந்தவை வேறெவையேனும் உளவோ ?

பௌத்த மதக் கொள்கையைப் பெரிதும் விவரித்துரைக்கும் மணிமேகலை நூலை இப்புலவர் இயற்றிய

தனாலேயே இவர் பௌத்தரா யிருக்கலாம் என்று கருதக் கூடும். ஆயினும், இவர் அக்காலத்தில் நாட்டிலே பயின்றிருந்த பல் வகை மதங்களையும் நன்கு உணர்ந்தவர் என்பது இவரது வாக்கால் அறியப்படும்.

உலகத்தார் பொதுவாக அறிதற்குரிய நீதிகளும், பல மதங்களின் தத்துவக் கருத்துக்களின் நுட்பங்களும் இப்புலவர் பெருமான் வாக்கில் அமைந்த அழகு, மிகவும் பாராட்டற்குரியது:

"பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது."
"நல்லறஞ் செய்தோர் நல்லுல கடைவர்;
அல்லறஞ் செய்தோர் அல்லுல கடைவர்."
"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்;
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்;
பற்றின் வருவது முன்னது; பின்ன(து)
அற்றோ ருறுவ(து) அறிக."
"வினையின் வந்தது; வினைக்கு விளைவாயது;
* * * *
மக்கள் யாக்கை யிது."

இவைபோன்ற எளிய நடையில் அமைந்த அருங்கருத்துக்கள் பலவுள.

இப்புலவர் பெருமான் மதம் யாதோவென ஆராய்ந்து ஒருவாறு துணிவோம்: சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள் தம் நூலுள்ளே அவ்வவ்வமயங்களுக் கேற்பப் பலவகை மதக்கொள்கைகளை விரித்துணர்த்தி, அவ்வவற்றுக்குரிய கடவுளர் துதியும் மனவுருக்கம்

அமையக் கூறியிருக்கின்றாராயினும், அவற்றால் அவர் இன்ன மதத்தினராய் இருக்கலாம் என்று இன்னும் துணிதற்கில்லை. அதுபோலவே, இப்புலவர் பெருமானும் தாம் பாடவெடுத்துக்கொண்ட பெருங்காப்பியத்தின் தலைவியாகிய மணிமேகலையின் மதக் கொள்கையை உரிய விடங்களில் வேண்டு மளவு விளக்கிப் போகின்றாராகையால், தமது கொள்கை இன்னதெனவெளியிட்டுளர் என்று துணிதல் பொருத்த மாகாது. ஆயினும், பிற மதங்களோடு ஆராய்ந்து எல்லாவற்றினும் சிறந்தது பௌத்த மதமே என்று தோன்றுமாறு மணிமேகலை வாக்காற் பிறப்பட்டகாதைகளிற் கூறியிருத்தலால், அவ்வாறு கண்டிக்கப்பட்ட மதங்களுள் ஒன்று தமதாயிருந்திருக்குமாயின், எளிதில் அதனை அங்ஙிலை பெற விட்டிருத்தற்கில்லை. மணிமேகலையின் சரித்திரத்தோடு சம்பந்தமுள்ள வளவில் பௌத்த மதப் பெருமையை விளக்குவதோடு விடாமல், சரித்திரப் போக்குக்கு அவசியமற்ற இடங்களிலும் அம்மதத்தின் நுட்பமான கருத்துக்கள் சிலவற்றை அவற்றின் போக்கில் தமது மனம் பற்றுக்கொண்டிருப்பது தோன்ற இவர் கூறுவாராதலால், இவர் பௌத்தர் என்றே துணிதல் வேண்டும். புத்த தேவர் புகழை எவர் வாக்காலேனும் அடிக்கடி கூறல் வேண்டும் என்ற அவா இவர்க்குண்டு என்பதைப் பின் வரும் அடிகளால் அறியலாம்:

"உயிர்க ளெல்லாம் உணர்வுபா ழாகிப்
பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த
வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்க
நீயோ தோன்றினை நின்னடி தொழுதேன்."

இவ்வடிகள் புத்தாவதார வைபவத்தை எத்துணை அழகுற விளக்குகின்றன!

“ உலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
இன்பச் செவ்வி மன்பதை யெய்த
அருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையின்
காமற் கடந்த வாமன்.”

இவ்வடிகள் புத்ததேவர் பிறப்பின் பெருமையை உள்ளவாறு விளக்குவன. இவ்வாறு இன்னும் பலவுள.

ஆயினும், சுதமதி தன் தந்தையைப்பற்றிக் கூறுவதாக,

“மறைவளர் தருஉம் அழலோம் பாளன்.”

என்றதும், மகனை யிழந்த கோதமை கூறுவதாக,

“தீத்தோழி லாட்டியேன் சிறுவன்.”

என்றதும், பார்ப்பனி மருதி கூறுவதாக,

‘புரிநூன் மார்பன் முத்தீப் பேணும்முறை.”

என்றதும் இவ்வருந்தமிழ் நாவலர்க்கு வைதிக விருத்தியிலே வெறுப்பு இன்மையை விளக்குவனவாம். பௌத்தரேயாயினும், யாகாதிகளை இயற்றும் வேதியரைஉள்ளவாறு புகழ்ந்தது இவரது மனத்தின் செம்மையை விளக்கும்.

அந்நாளில் வழங்கிய வடமொழித் தருக்க நூல்களிலும் மதாந்தரக் கிரந்தங்களிலும் இவர் சிறந்த பயிற்சி பெற்றவர் என்பது, சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதையாலும், தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதையாலும் விளங்கும்.

இனி இவர் பாடியுள்ள பிறசெய்யுட்களைப் பற்றிச் சிறிது கூறுவோம்: நற்றிணையில் மூன்றும், குறுந் தொகையில் ஒன்றும், அகத்தில் நான்கும், புறத்தில் ஒன்றும் இவர் பாடிய பாடல்களாம். அவற்றுட் புறத் தில் உள்ள செய்யுள் பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ் சிய நன்மாறனைப் பாடியது:

"ஆரந் தாழ்ந்த அணிகிளர் மார்பில்
தாள்தோய் தடக்கைத் தகைமாண் வழுதி
வல்லை மன்ற நீநயந் தளித்தல்
தேற்றாய் பெரும பொய்யே யென்றும்
காய்சினந் தவிராது கடலூர் பெழுதரும்
ஞாயி றனையைநின் பகைவர்க்குத்
திங்கள் அனையை எம்ம னோர்க்கே."

இச்செய்யுள் நம்புலவரது இயற்கை நலந் தோன் றச் செய்யுட்செய்யும் இயல்பை நன்கு விளக்கும். மணி மேகலையில் உள்ள நடைக்கும் இவர் பாடிய பிற செய் யுட்களின் நடைக்கும் சிறிது வேற்றுமை யிருப்பது உய்த்துணர்வார்க்கு விளங்கும். இவரது காலம், இளங் கோவடிகள், சேரன் செங்குட்டுவன், கிள்ளி வளவன், சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் முதலிய அரசர் வாழ்ந்த காலமாம். இவரோடு ஒத்த காலத்துப் புலவர் பலர் என்பது இவரது திருவள்ளுவ மாலைச் செய்யுளா லும், மருத்துவன் றாமோதரனார் செய்யுளாலும் விளங் கும். இப்பெரியார் பெருமை விரிப்பிற் பெருகும்.

புறநானூறு—செய்யுள், 59.

3. இளங்கோவடிகள்

சேரர் குடிக்கோரு திலகமா யிலகிச்
சிலப்பதி காரச் செய்யுள் செய்த
இளங்கோ வடிகள்சீர் இயம்பத் துணிதுமே.

சேர பரம்பரையிலே அருங்கலை விநோதராய் இருந்த அரசர் பலர். ஆயினும், பெரு நூல்கள் செய்த ஆசிரியர்என்று பெயர்படைத்தவர் மிகச் சிலரே. கலித்தொகையிற் பாலைத் திணைச் செய்யுள் பாடிய பெருங்கடுங்கோ என்பார், ஒரு சேர வரசர். இவர் நற்றிணையிற் பத்தும், குறுந்தொகையிற் பத்தும், அகத்திற் பதினொன்றும், புறத்தில் ஒன்றும் ஆக முப்பத்திரண்டு செய்யுட்கள் பாடியிருக்கிறார்; புறத்திற் பேய் மகள் இளவெயினி என்ற பெண் புலவராற் பாடப்பட்டும் இருக்கிறார். மருதம் பாடிய இளங்கடுங்கோ என்பார் எந்தப் பெருநூலிலே மருதத்திணை பாடினார் என விளங்கவில்லையாயினும், பெயர் ஒற்றுமையால், இவரது இளவலாய் இருக்கலாம் என்று ஊகிக்கப்பட்டவர். பிற்காலத்தில் ஐயனரிதனார் என்ற ஒரு சேர வரசர் பரம்பரையினர் பன்னிரு படலத்தின் வழி நூலாகப் புறப்பொருள் வெண்பா மாலை பாடியுள்ளார். தனிச் செய்யுட்கள் சில செய்த வேறு சில அரசரும் உளர். இவ்வெல்லா வேந்தரைக்காட்டிலும் சேர குலத்துக்குச் சிறந்த புகழை விளைத்துத் தம் பெயரை உலகில் என்றும் அழியாது

சிறத்திபவர் இளங்கோவடிகள் என்ற பெரியாரே யாவர். இவரது அருமைத் திருப்பணியே இந்நாளைய புலவர் ஒருவரால்,

“ நெஞ்சை
அள்ளுஞ் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு.”

என்று புகழப்பட்டுள்ளது. இப்புலவர் பெருமான் இயற்றியருளிய சிலப்பதிகாரமும், அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையும் இந்நாளில் அகப்படவில்லையெனின், பண்டை நாளில் நம் நாட்டில் வழங்கிய முத்தமிழ் இலக்கண நுட்பங்கள் நமக்கு இந்நாளிலே சிறிதும் அறிவதற்கின்றி மறைந்துபோயிருக்கும் ஆதலால், இவ்வரசப் புலவர் செய்த திருப்பணியைப் பாராட்டும் கருத்துத் தமிழர் உள்ளத்தில் எழுமாயின், அஃது இவர் இயற்றிய பெருநன்றிக்குச் சிறிதும் கைம்மாறுகாதேனும், நன்றி மறத்தலாகிய பாவத்தினின்று அவர்களைக் காக்க உதவும்.

சேர பரம்பரையிலே சிறந்த சீர்த்தி படைத்திருந்த அரசருள் சேரலாதன் என்பான் ஒருவன். அவன் மைந்தர் இருவராவர். அவருள் சேரன் செங்குட்டுவன் என்பான் மூத்தவனவன். இளையவர் இளங்கோவென்றே வழங்கப்பட்டனர். இளங்கோவா யிருந்தவர் இளங்கோவடிகள் ஆகிய வரலாறு பின் வருமாறு கூறப்படும்:

“குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்
சேரலாதற்குத் திகழொளி ஞாயிற் றேழ்பரி நெடுந்தேர்ச்

சோழன்றன்மகள் நற்சோணை யீன்ற மக்கள் இருவருள் முன்னோன் தன்னைப் பின்னரியற்றிப் பின்னோன் றன்னையும் பெருநரம்பாகென அன்னவர் தம்மோடு தென்னர் செம்பியர் தன்னடிபோற்றத் தமனிய மண்டபத்துச் சிங்கஞ் சுமந்த பொங்கணை மீமிசை உவரித்திரையிற் கவரியிரட்ட வேந்தனிருந்துழிச் சார்ந்த நிமித்திகன் அடிமுதல் முடிவரை நெடிதுநோக்கி, ‘இன்றோள் கழியப் பொன்றிணியுலகம் சேர்தி நீ,’ எனச் சேரலற்குரைத்து. அவன் மைந்தரை நோக்கி, நந்தாச் செங்கோல் அந்தமில் இன்பத் தரசாளுரிமை இளையோற் குண்டென, உளைவனன் வெகுண்டு அழுக்காற் றொழுக்கத் திழுக்கும் நெஞ்சினன் கண்ணெரி தவழ அண்ணலை நோக்கும் கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச் செங்குட்டுவன் தன் செல்லல் நீங்கப் பகல்செல்வாயிற்படியோர் தம்முன் அகலிடப் பாரம் அகல நீக்கிச் சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்தந்தமில் இன்பத் தரசாள் வேந்தாயினு னென்பது.”

இவ்வாறு இவ்வரலாறு உரைத்தவர் அடியார்க்கு நல்லார். “குணவாயிற் கோட்டத் தரசு துறந்திருந்த குடக்கோச்சேரல் இளங்கோவடிகள்,” என்று பதிகத்தில் வரும் அடிகளுக்குப் பொருள் கூறுமுகத்தான், இத்துணையும் கூறினர். இதனால், செங்குட்டுவன் தந்தை சிங்காதனத்தில் வீற்றிருக்கையில் அங்கு வந்த ஒரு நிமித்திகன் அவன் விரைவிலே விண்ணுலகு சேர்வன் என்றும், இளங்கோ வேந்தர் அரசுரிமை பெறத் தக்கவர் என்றும் கூறினன் என்பதும், அது கேட்ட செங்குட்டுவன் மனம் புகைந்து வெறுப்புக் கொள்ள, அவன் நிலையைக் கண்ட இளங்கோ உடனே தமக்குள்ள அரசுரிமையைத் துறந்து, துறவறம் பூண்டு, குண வாயிற் கோட்டத்தி லிருந்தார் என்பது மறியப்

படும். குண வாயில் என்பது திருக்குண வாயில் என்ற தோர் ஊரென்பர் அவ்வுரையாசிரியர்.

இனி, 'இக்கதையைப் பதிற்றுப் பத்தினுள் அஞ் சாம்பத்தின் முடிவில் 'வடவ ருட்கும்' என்னுங் கவியி னுள்ளும், வாழ்த்தின்கண்ணும், வரந்தரு காதைக்கண் ணும் காண்க,' என்று அவரே கூறுவர்.

"வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்"

என்று செங்குட்டுவன் அங்குக் கூறப்படுகிறான். இங்கு நெடுஞ்சேரலாதன் எனப்படுவோன், பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தின் தலைவனாகிய இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனே. அவன் உதியஞ் சேரல் என்ற சேரன் மைந்தனும். முரஞ்சியூர் முடி நாக ராயர் வரலாற்றில் இவ்வுதியஞ்சேரல் சரித்திரத் தொடர்பு இயன்றவளவு விளக்கப்பட்டுளது.

பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தின் பதிகத்தில் சேரன் செங்குட்டுவன் தாயின் பெயர் சோழன் மணக் கிள்ளி என்று கூறப்படுகிறது. அடியார்க்கு நல்லார், 'திகழொளி ஞாயிற்று ஏழ்பரி நெடுந்தேர்ச் சோழன்றன் மகள் நற்சோணை என்பாள் செங்குட்டுவனுக்கும் இளங் கோவுக்கும் தாய்,' என்பர். பதிற்றுப்பத்திற் சோழன் பெயர் இன்னதெனப் படவில்லை. அடியார்க்கு நல்லார் உரையால் அவன் பெயர், 'ஆதித்தன்' என்று இருக்க லாமோ என்று ஊகிக்கக்கூடும். மணக்கிள்ளி என்பதும் நற்சோணை யென்பதும் ஓர் அரசிக்கு வழங்கிய இரண்டு

பெயர்களாய் இருக்கலாம். இவ்வாறு பிற்காலத்தி லிருந்த சோழராஜ பத்தினியர் இரண்டு மூன்று பெயர்கள் பெற்றிருந்தார் என்பது சாஸன ஆராய்ச்சியாளராகிய து. அ. கோபிநாத ராயர் எழுதிய சோழ வமிச சரித்திரத்தால் தெளியப்படும்.

இங்கே காட்டிய குறிப்புக்களால், உதியஞ்சேரல் மகனாகிய இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், சோழர் குடியிற் பிறந்த பெண்ணருங்கலமாகிய மணக்கிள்ளி யென்பாளை மணந்திருந்தான் என்பதும், அவட்கு நற்சோணையென்ற வேறொரு பெய ருண்டென்பதும், அவள் ஈன்ற மக்களுள் மூத்தவன் கண்ணகி கோயில் எடுப்பித்த சேரன் செங்குட்டுவன் என்பதும், இளையோர் அவன் மன வெறுப்புக் காரணமாகத் துறவு பூண்ட இளங்கோவடிகள் என்பதும் விளங்கும்.

செங்குட்டுவன் கடல்பிறக்கோட்டிய என்ற அடைமொழி பெற்றவன்; " கடவுட் பத்தினிக் கல்கோள் வேண்டி ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை இன்பவருவிக் கங்கை மண்ணினன்," என்று பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்தின் பதிகத்திற் புகழப்பெற்றவன். ஆகையால், இவன் வாழ்த்துக் காதையிலும் வரந்தரு காதையிலும் இளங்கோவடிகளாற் புகழப்பட்டது இயல்பேயன்றோ?

சிலப்பதிகாரத்தின் மூலம் விளங்கும் இளங்கோவடிகள் வரலாற்றுப் பகுதிகள் பின் வருவனவாம்:

பதிகத்தில், " திருக்குண வாயிற்கண்ணே அரசபோகத்தைத் துறந்து தவவுருத் தாங்கியிருந்த குடநாட்டு அரசன் செங்குட்டுவன் இளவலாகிய இளங்கோவடிகளுக்குக் குறவரெல்லாந்திரண்டு சென்று, 'எம

தூர் மலைப் பக்கத்து வேங்கை மரத்து நிழற்கண்ணே வந்து நின்றாள் ஒரு மாபத்தினி. அவள் பொருட்டுத் தேவர் வந்து ஈண்டி, அவள் கொழுநனைக் காட்டி, அவ ளோடும் அவர் எம் கண் காண விண்ணகம் போயது ஓர் அதிசயமாயிருந்தது. அதனை நீ அறிந்தருள்வாயாக,' என்றவளவில், அங்ஙனம் அருகில் அமர்ந்திருந்த தண் டமிழ்ப்புலவராகிய கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார், 'யான் அதனை யறிவேன்,' என்று கூறத் தொடங்கினர்: 'புகார் நகரத்துப் பிறந்தகோவலன் என்பானொரு வணி கன் அவ்வூரில் வாழ்ந்த நாடகக் கணிகையாகிய மாதவி யோடு இன்புற்று வாழ்ந்து, தன் பொருள் வளமிழந்து, தன் மனைவி கண்ணகி யென்பாளது சிலம்பினை விற்றல் வேண்டி, மதுரை நகர்க்கு வந்தனன். அச்சிலம் பைக் கொண்டு மாடமலி மறுகில் விலை கூறிச் சென்று, ஒரு பெரும்பொற்கொல்லனைக்கண்டு, அவனிடம் காட் டினன். அப்பொற்கொல்லன் தான் முன்பு அரசன் தேவி சிலம்பைக் களவாடிய குற்றத்தை மறைத்தற் காகக் கோவலனை அங்கு நிறுத்தி, 'இச்சிலம்பு, கோப் பெருந்தேவிக்கே தகுவது; யான் அரசனிடம் காட்டி வருவேன்,' என்று கூறிச் சென்றான். வினை விளை கால மாதலால், பாண்டியன் பொற்கொல்லன் சொற்கேட்டுக் காவலரை அழைத்து, 'கோவலனைக் கொன்று, அச் சிலம்பினைக் கொணர்க,' எனக்கட்டளையிட்டான். அவ் வாறு அரசன் செங்கோல் நெறி பிழைத்ததால், தன் கற்பு என்னும் தீயினால் மதுரை நகரைச் சுட்டெரித்த மாபெரும்பத்தினி ஆகும் இவர் கூறிய பெண்ண ணங்கு,' என்று கூறினர். அது கேட்ட இளங்கோவடி

கள், "வினை விளை காலம் என்றதன் காரணம் என்னை?" என்று வினவினர். அதற்குச் சாத்தனார், "ஐய, கேண்மின்: யான் மதுரை நகரில் உள்ள வெள்ளியம்பலத்தில் நள்ளிரவில் துயின்றுகொண் டிருந்தேன். அப்பொழுது அங்கு மிக்க துயரடைந்த வீர பத்தினியாகிய கண்ணகி முன்பு மதுரை மாதெய்வம் வந்து தோன்றி, 'சினை மிக்கதால் மதுரை நகரை எரித்த பத்தினியே, யான் கூறுவன் கேள்: சிங்கபுரத்துச் சங்கமன் என்ற வணிகன் மனைவி கூறிய சாபம் பலித்ததாகலின், முன்னை வினைப் பயத்தால் நீயும் நின் கணவனும் இத் துயர் அடைந்தீர். நீ நின் நாயகனை தேவருருவினன்றி, மானிடர் வடிவத்தில் இனிக் காணுதல் இயலாது,' என்று கூறிய கட்டுரையைக் கேட்டேன்," என்றார். இச்செய்தி கேட்ட இளங்கோவடிகள், "அரசியல் பிழைத்தோர்க்கு அறத் தெய்வமே கூற்றுவதும், புகழ் மிக்க பத்தினியை உயர்ந்தோர் வணங்குவதும், ஊழ் வினை பிழையாது வந்து பயனை ஊட்டும் என்பதும் சிலம்பு காரணமாக அமைந்துள்ளதால், சிலப்பதிகாரம் என்ற பெயரால் யாம் ஒரு காவியம் இயற்றுவோம்," என்று சாத்தனாரையும் உளப்படுத்திக் கூறினார். சாத்தனார், "இக்காவியம் முடி மன்னர் மூவரது புகழையும் விளக்க வுரியதாகையால், உள்ளத் துறவு பூண்ட அடிகள் நீரே அருளுக," என்று கூறினர். அவ்வாறே இளங்கோவடிகள் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என்று அமைத்துச் செய்தனர். அதனைச்சாத்தனார் கேட்டு இன்புற்று, உலகிற் பரவ உதவி செய்தனர்," என்ற செய்தி வருகிறது.

த-பு-ப-3. பா-3.

வாழ்த்துக் காதையில் இளங்கோவடிகள் வாக்கில் அமைந்தவை:

"குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன் கொங்கர் செங்களம் வேட்டுக் கங்கைப் பேரியாற்றுக்கரை போகிய செங்குட்டுவன் ஆரிய நாட்டரசோட்டி அவர் முடித்தலை அணங்காகிய பேரிமயக் கற்சுமத்திப் பெயர்ந்து போந்து, நயந்த கொள்கையிற் கங்கைப் பேரியாற்றிருந்து நங்கைதன்னை நீர்ப்படுத்தி, வெஞ்சினந்தரு வெம்மை நீங்கி, வஞ்சிமா நகர் புகுந்து, கடவுண் மங்கலஞ் செய்த பின்னாள், தேவந்தியும், ஐயையும், அவள் மகளும் கோமகள்தன் கோயில் புக்கு, நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவற்குச் சிறப்புரைப்பார்மன்."

பிறகு செங்குட்டுவன் கண்ணகியின் தெய்வக்கோலம் ஒளியுருவத்திலே கண்டான் என்றுகூறப்படுகிறது.

வரந்தரு காதையின் இறுதியில் இளங்கோவடிகள் தாமே தம் வரலாறு கூறுகின்றார். அவர் கூறும் வரலாறு செய்யுள் நடையில் இங்குத் தரப்படும்:

"வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னவன் நின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியுள்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்

'தந்தேன் வரம்'என் றெழுந்த தோர்குரல்.
ஆங்கது கேட்ட வரசனும் அரசரும்
ஓங்கிருந் தானையும் உரையோ டேத்த
வீடுகேண் டவர்போல் மெய்ந்நெறி விரும்பிய
மாடல மறையோன் றன்னொடு கூடித்
தாழ்கழல் மன்னர் தன்னடி போற்ற
வேள்விச் சாலையின் வேந்தன் பெயர்ந்தபின்
யானுஞ் சென்றேன் என்னெதிர் எழுந்து,
தேவந் திகைமேற் றிகழ்ந்து தோன்றி,
'வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழல் இருந்தோய் நின்னை
அரசுவீற் றிருக்கும் திருப்பொறி யுண்டென்
றுரைசெய் தவன்மேல் உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்லல் நீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்
தந்தமி லின்பத் தரசாள் வேந்(து),'என்
றென்றிற முரைத்த விமையோர் இளங்கொடி
தன்றிற முரைத்த தகைசால் நன்மொழி.''

இங்கு இறுதிப் பகுதியில், தேவந்தியின்மேற் கண்ணகி தேவி ஆவேசித்து, இளங்கோவடிகள் துறந்தமைக்குக் காரணமாகவுள்ள இளம்பருவ வரலாறு கூறினள் என்று அடிகள் வாக்காகவே அமைந்ததை அறியலாம். தாம் இயற்றியருளிய சிலப்பதிகாரக் காவியத்தின் சிறப்பை இப்பெரியார் இங்குக் காட்டிய இறுதி

யிரண்டடிகளிற் பின்வருமாறு தெரிவித்தது ஆராய்ந்து இன்புறற் குரியது:

"என்திறம் உரைத்த இமையோர் இளங்கோடி
தன்திறம் உரைத்த தகைசால் நன்மொழி."

கண்ணகி வரலாறு கூறிய உயர்ந்த சொற்பொருட்டுறை நயம் பொருந்திய காவியம் என்பது இதன் கருத்து. இனி நூலின் இடையிலே இவரது குண மாண்புகள் விளங்குமாற்றை ஆராய்வாம்:

"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரிய(து):
அடிகள் நீரே அருளுக."

என்று கூல வாணிகன் சாத்தனார் கூறியதற் கேற்பச் சிலப்பதிகாரத்தை இயற்றத் தொடங்கிய சேரர் குலத் தோன்றலாகிய இளங்கோ வேந்தர் தம் உள்ளத் துறவின் மாண்பை இரண்டு வழிகளால் விளக்கினர்: தாம் சேரர் குடியிற் பிறந்திருந்தும், பாண்டியர் புகழும் சோழர் சிறப்பும் தமது குடிப்பெருமையிற் சிறிதும் குறையாவண்ணம் அமைத்ததொன்று; எத்தேவரைத் துதிப்பினும் அவ்வத் தேவரைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டோர் துதிப்பதைக்காட்டிலும் உருக்கமுற நயம் படத் துதித்திருப்பது மற்றொன்று. இவ்விரண்டு காரணங்களால் இவரது உள்ளத் துறவின் மாண்பு விளங்குதலால், இவற்றை உரிய முறையால் அகச் சான்றுகளைக் கொண்டு ஆராய்ந்து விளக்குவோம்:

புகார்க் காண்டத்தில் முதற்கண் உள்ள மங்கல வாழ்த்துப் பாடலில் திங்கள், ஞாயிறு, மழை யென்ற மூன்றையும் சோழர் புகழொடு ஒட்டிப் புகழ்ந்து வாழ்த்திக் காவிரிப்பூம்பட்டினமாகிய புகார் நகரத்தை,

"பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்."

என வாழ்த்தினர். பிறகும், பொதியம், இமயம் என்ற மலைகளையும், குடிகள் தம் நாட்டில் வளமும் நல்லரசும் இல்லையென்று அயல் நாடுகட்குச் சென்று வாழா வண்ணம் அமைந்த புகார் நகரத்தையும், அம்மூன்றிடங்களிலும் உயர்ந்தோர் வாழுங் காரணத்தால் நன்கு வாழ்த்துவாராய்,

"பொதியி லாயினும், இமய மாயினும்,
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை
ஒடுக்கங் கூறா ருயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே."

எனப் பாடினர். பொதியிலுக்கும் இமயத்துக்கும் இடைப்பட்ட நாடு, சோழநாட்டரசர் ஆட்சிக் குட்பட்டது என்பது தோன்ற, அவ்வரசரது புகார் நகரம் இவற்றோடு சேர்த்துப் புகழ்ந்துரைக்கப்பட்டது.

பாண்டிய மன்னனைப்பற்றி இவ்வாறேபுகழ்வாராய்,

"செங்கோற் றென்னவர் காக்கும் நாடென
எங்கணும் போகிய இசையோ பெரிதே."

எனவும்,

"திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கண்ஆ யிரத்தோன் திறல்விளங் காரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி."

எனவும் வாழ்த்திப் பாடினர்.

தம் முன்னோனாகிய சேரவேந்தனைப்பற்றி, அவன் சோழனையும் பாண்டியனையும் எதிர்த்துப் போர் செய்யக் கருதிய காலத்தில், "சோழ பாண்டியரையன்றி நினது வஞ்சினத்து முன் எதிர்ப்பார் உளரோ?" என்ற கருத்துப்படப் பாடியருளினர்.

"மண்டிணி ஞாலம் ஆள்வோன் வாழ்க."

எனவும்,

"வீங்குநீர் ஞாலம் ஆள்வோன் வாழ்க."

எனவும்,

"தோடார் போந்தை தும்பையோடு முடித்துப்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன்."

எனவும்,

"முதுநீர் ஞாலம் அடிப்படுத் தாண்ட
அரசே வாழ்க."

எனவும் பாடியிருக்கின்றார்.

இவற்றால் முடி கெழு வேந்தர் மூவரையும் அவரவரது பெருமை விளங்க அவரவர்க்குத் தக்க இடங்களில் அமையுமாறு புகழ்ந்து வாழ்த்தியது விளங்கும். தம் குடிப் பெருமையே பெரிதாய்க் கருதியிருப்பாராயின், பிற அரசர்களை இவ்வாறு புகழ்ந்திருத்தல் கூடுமோ?

இனி இப்புலவர் பெருமான் வாக்கில் வந்துள்ள கடவுள் வாழ்த்து வகைகள் பல வாகையால், அவற்றுள் வகைக்கொன்று காட்டி, ஒன்றுக்கொன்று பக்திச்சுவை யிற் றாழ்வுபடா தென்பதைத் தெரிவிப்போம்:

" திங்கள்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழ லிருந்த
ஆதியில் தோற்றத் தறிவனை வணங்கி,"

இவ்வாழ்த்து அருகக்கடவுளை மனமுருகித் துதிப்பதாய் அமைந்துள்ளதும், அக்கடவுளின் திருவுருவம் உள்ள வாறு விளக்க வல்லதாயிருப்பதும் கவனிக்கத் தகும்.

" ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்."

இது மஹிஷாசுர மர்த்தனியாகிய துர்க்கா தேவியை *உருக்கமுறப் புகழ்ந்து, மறைமேன் மறையாய் ஞானக் கொழுந்தாய் இருப்பதாய்க் கூறித் துதித்தது.* சாக்தேய *மதத்தர் தாம் வழிபடுந் தேவியை இதைக் காட்டிலும் அழகுறத் துதிக்க வியலுமோ?*

"மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே ;
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.

" பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுங் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே ;
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே.

6061a

" மடந்தாழ நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே ;
நாராய ணாவென்னா நாவென்ன நாவே."

கிருஷ்ண பரமாத்துமாவைத் துதிக்க எழுந்த இச் செய்யுள், குலசேகராழ்வார், பெரியாழ்வார் முதலிய பெரியார்கள் அருளிச் செயல்கள் போலச் சுவைபட அமைந்திருப்பதும், பிற நயங்களும் கவனித்து இன்புறற்பாலன. உலகம் படைக்கும் பிரமனை உந்திக்கமலத்துள் அடக்கிய பெருமானை, 'உலகமெல்லாம் உந்தியுடை விண்ணவன்,' என்றதும், ஆரணந் தேடரிய பொருளாகிய அவன் அடியார்க்கு எளியவன் என்பது விளங்க, 'ஆரணந் தொடர்ந்து முழங்கப் பஞ்சவர்க்குத் தூது நடந்தான்,' என்றதும், மூன்றுலகங்களும் தன் மூன்றடியளவுக்குப் பற்றா வண்ணம் அளந்த திரிவிக்கிரமனேயாயினும், தம்பியொடு காட்டுக்கு நடந்து சென்று தேவர் இடுக்கண் தீர்த்த செல்வன் என்றதும், பிற மகிமைகளை அமைத்ததும் இங்கு ஆராய்ந் தின்புறற்குரியன.

மும்மன்னரையும் ஒரு நிகராய் மதித்த இளங்கோவடிகள் என்ற இப்பெரியார் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன், கோவலனைக் கொல்வித்த குற்றத்தாற் கொடுங்கோலன் ஆயினான் எனினும், அவன் தன் ஆட்சிக் காலம் எல்லாம் செங்கோலனாகவே சிறந்திருந்தானாகையால், அவன் குடிக்கு நேர்ந்த பழியை நீக்கப் பெரிதும் முயன்றார். வாழ்த்துக் காதை

யில் இம்முயற்சி நன்கு புலப்படுகின்றது. சேர சோழ பாண்டியரை அக்காதையில் வரிப்பாட்டுக்களால் ஒரு நிகராய்ப் புகழ்ந்துள்ளதும் கவனித்து இன்புறத் தக்கது. வேங்கடமலை, அழகர்மலை எனுந் திருமாலிருஞ் சோலை மலை என்ற இரண்டு திருப்பதிகளிலும் கோயில் கொண்ட திருமாலை மாங்காட்டுப் பார்ப்பான் வாய் மொழியால் விவரித்த அமைதியும் ஆராய்ச்சிக்குரியது. புகார் நகரத்தில் உள்ள கோயில்களைப் பற்றிக் கூறி வரும்போது, 'பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்,' என அருகியின் கோயிலையும், 'அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்,' என முருகப்பிரான் கோயிலையும், 'வால்வளை மேனி வாலியோன் கோயில்,' எனப் பல ராமன் கோயிலையும், 'நீலமேனி நெடியோன் கோயில்,' எனத் திருமால் கோயிலையும் பற்றித் தெரிவித்திருக் கின்றார். 'பிறவா யாக்கைப் பெரியோன்,' என்று இவர் கூறியது, சிவபிரானுயிருக்கலாம். சீத்தலைச் சாத்தனார் இந்நகரத்தைப்பற்றிக் கூறுகையில்,'நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப் பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறாக,' என்று கூறியதும் இங்குக் கவனிக்கத் தக்கது. அடிகளார் மதுரை நகரத்தைப்பற்றிக் கூறுகையில், 'நுதல்விழி நாட்டத்திறையோன், உவணச் சேவலுயர்த் தோன், மேழிவலனுயர்த்த வெள்ளை, கோழிச் சேவற் கொடியோன்,' என்ற தேவர்களின் கோயில்களைப்பற்றி முறை வகுத்துக் கூறியிருத்தலால், அவர்க்கும் அதுவே கருத்து என்று அறியலாம்.

இவ்வாறு பல வகை ஆலயங்களையும் கூறிய இப் புலவர் இந்நகரங்களிற் சமணர்க்குரிய ஆலயங்கள்

இருப்பதாகக் கூறுவது கவனிக்கத் தக்கது. பலராமனை ஒரு தெய்வமாக வைத்து வணங்கும் வழக்கம் இந் நாளில் இல்லையாயினும், அந்நாளில் தமிழ் நாட்டில் இருந்ததென்பதே இவ்வாசிரியர் திருவாக்கால் நாம் அறியும் உண்மையாம். மணிமேகலையிலும், மதுரைக் காஞ்சியிலும் புகார் நகரத்தும் மதுரை நகரத்தும் சமணப் பள்ளிகளும் புத்தர் மடங்களும் இருந்ததாகக் கூறப்பட்டுளது.

மேலே காட்டிய பல காரணங்களால் இளங் கோவடிகளார் மனத் தூய்மை விளங்கும் தேவர் பலர் என்றும், அவருள் உயர்வு தாழ்வு உண்டு என்றும் கருதும் சிறியர் போலாது, தமது உள்ளத்துறவின் சிறப்பால் இப்பெரியார் எல்லா மதத்தவரும் வழிபடுங் கடவுளரை ஒரு நிகராகவே கருதியிருந்தார் என்பதும், எவர்க்கும் எந்நாட்டுக்கும் எக்காலத்துக்கும் இறை வன் ஒருவனே என்று உணர்ந்திருந்தார் என்பதும் விளங்கும்.

ஆனால், இப்பெரியார் அடிகள் என்ற சிறப்புப் பெயர் பெற்றதாலும், 'குண வாயிற் கோட்டத்தரசு துறந்திருந்தார்,' என்ற சந்தர்ப்பத்தில் கோட்டம் அருகன் கோயில் என உரையாசிரியரால் கூறப்படுவ தாலும், கவுந்தியடிகள் வாக்காலும் பிற வழிகளாலும் சமணர் வழிபடு கடவுளைச் சிறப்பித்துப் பலவாறாகப் புகழ்ந்திருத்தலாலும், சமணராகவே கருதப்படவேண் டும் என்று சில அறிஞர் துணிவர். ஆயினும், தம் முன்னோனாகிய செங்குட்டுவன், "ஆனேறூர்ந்தோன்

அருளிற்றேன்றி மாநிலம் விளக்கிய மன்னவன்,'' என இவரால் மாடல மறையோன் வாய்மொழி கொண்டு புகழப்படுவதாலும், 'ஆடகமாடத் தறிதுயிலமர்ந்தோன் சேடங்கொண்டு சிலர் நின்றேத்தத் தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள் வண்ணச் சேவடி மணி முடி வைத்தலின், ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத் தாங்கினன்,' என்று சொல்லப்படுவதாலும், செங்குட்டுவன் சைவமதப்பற்று மிகுதியும் உடையவன் என்பது புலப்படுவதால், அடிகளும் சைவ மதத்தவரே யாதல் வேண்டும் என்று சிலப்பதிகாரப் பதிப்பாசிரியராகிய தமிழ்ப் பெரும்புலவர் துணிவர். பின்னவர் கூற்றுக்குக் கோயில்களை முறைப்படுத்துகையில் சிவாலயத்தை முதற்கண் அமைத்த அடிகளது முறை வைப்பு ஒரு வகையால் உதவியாம். அடிகள் சைவரேயாயினும், சமணரே யாயினும், எவரெவர் எத்தெய்வங் கொண்டாலும் அவ்வத் தெய்வமாய் வந்து அருள் பொழியும் பரம்பொருளை உள்ளவாறு தெளிந்து உள்ளத்துட் கண்டு களித்தவர் என்பது அவரது வாக்கால் எங்கும் விளங்கக் காண்கிறோம்.

எப்பொருளைக் கூறினும், அப்பொருளைக் கண்ணிற் காண்பது போன்ற உணர்ச்சி உண்டாகுமாறு செய்யுள் செய்யும் ஆற்றல் பெரும்புலவர்க்கே உளது. இப்புலமை படைத்தாருள் இளங்கோவடிகளும் சாத்தனும் தலை சிறந்தார் என்பது இவ்விருவர் பெருங் காப்பியங்களை ஆராய்ந்தார் அறியும் உண்மையாம்

இப்புலவர் பிரானது கவித்துவ மகிமையை அளந்தறிய நுண்மாணுழை புலமுடைய பேரறிஞரே வல்லவ

ராவர். ஏனெனில், கவிஞனமைதி கூறத் தொடங்கிய இப்புலவர், அரங்கேற்று காதையில்,

" இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறியத்
தமிழ்முழு தறிந்த தன்மைய னாகி
வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்தில்
நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்து
* * * *
* * * *
மாற்றோர் செய்த வசைமொழி யறிந்து
நாத்தொலை வில்லா நன்னூற் புலவன்."

என்று கூறியுளர். இவ்விலக்கணம் அனைத்தும் மேலும் சிறந்த குணங்களும் இவ்வரசப் புலவரிடம் அமைந் திருந்தன என்பது சிலப்பதிகாரத்தைப் பன்முறை ஆராயும் பாக்கியம் பெற்றோர் அறிவர்.

நகர வருணனை பிற்காலத்துப் புலவர் புராண கவி களில் இருப்பதுபோலன்றி, இவரது வாக்கில் எங்கும் தன்மை நவிற்சியாய் இருப்பது ஆராய்ந்து இன்புறற் குரியது.

" சீதக் களபச் செழுஞ்சேற்றல்—வீதிவாய்
மானக் கரிவழுக்கும் மாவிந்தம். "

என்பது புகழேந்தியார் பாடிய நகர வருணனை. உயர்வு நவிற்சியில் எவரும் இதற்குமேற் போத லியலாது. ஆனல், நம் புலவரோ, புகார், மதுரை, வஞ்சி என்ற மூன்று நகரங்களையும் வருணிக்கத் தொடங்கி, அந் நாளிலே இந்நகரங்கள் இவ்வண்ணந்தான் இருந்தன என்று நாம் மனத்தால் அறியத் தக்க வண்ணம் இயற்

கையை யொட்டி வருணித்திருப்பது, நம்மனோர் பண்டை நாள் நாகரிகத்தையும், அறிவு, கைத்தொழில் முதலியவற்றால் அந்நாளில் நம்மவர் அடைந்திருந்த நிலையையும் நன்குணர உதவுவதாம். யவனர் முதலிய அயலவர் நம் நாட்டிற் பண்டைநாளிலே அடிமைகளாய் நமர் இட்ட சேவகம் செய்து வந்தனா என்பது, இத் தகைய பெரியார் திருவாக்காலன்றி, வேறு எவற்றால் நாம் அறியக் கூடும்? பல வகைக் காலங்களையும் உரு வகப்படுத்தி வருணிப்பதிலும், மனித வாழ்வின் உயர்வு தாழ்வுகளை உள்ளவாறு உய்த்துணர்ந்து சித்திரிப்பதி லும் இப்புலவரை வெல்வார் எவரே? இயற்கை வருணனை மேனாட்டுக் கவிஞரிடம் கண்டு கேட்டு இன் புறுவோர், இப்புலவர் வாக்கில் வந்துள்ள புகாருக்கும் மதுரைக்கும் இடையில் உள்ள வழியையும் பிற இடங் களையும் வருணித்திருக்கும் செய்யுட் பகுதிகளைப் பார்க்க நேரிடின், என்ன சொல்லுவரோ! பத்தினிப் பெண்டிர் பெருமையும், செங்கோன்மைச் சிறப்பும், அறிவினால் எத்தகையோரும் பெறுகின்ற மாண்பும் இவ்வரசப் புலவர் வாக்கில் வந்துள்ளதுபோல் வேறு எங்கு வந்துள்ளன? இவ்வரசப் புலவர் புலவரரசரே என்பதற்கு ஐயமுளதோ?

தமிழுணங்கின் தவப் புதல்வராகிய இப்பெரியார் வாழ்ந்த காலத்தைப்பற்றிப் பல விதக் கொள்கைகள் உள. இவரது வாக்கில் வந்த செய்திகளே அப்பல விதக் கொள்கையாளர்க்கும் ஆதாரவாம்.

“ இதுவே பொருளென் றெவரேது
கூறினும் ஏற்பதேது

அதுவே பொருளென் றறிந்துகொண்
டேனப் பொருளெவர்க்கும்
பொதுவேயென் றுலும் பொருந்தும்எல்
லார்க்கும் பொதுவினிற்கும்
மதுவேய் மலர்ப்பொழில் ஆரூரி
னும்வைகும் வைகலுமே.''

என்ற செய்யுளில் உள்ள கருத்து இவ்வாதப் பிரதிவாத விஷயத்தை ஆராய்ந்து உண்மை காணப் புகுவார்க்கு ஒரு வழியால் உதவுவதாம்.

இளங்கோவடிகள் மதம் இன்னதென உறுதிப் படாதவாறு போல, அவரது காலமும் பலவாறு பேசப் படுவது நம்மவர் பெருங்குறையே. ஜோதிஷ சாஸ்திரப் பயிற்சி பெரிதும் உடைய சிலர், இப்புத்தகத்தில் வந் துள்ள சில கால வரன்முறைகளைக் கொண்டு, ஆசிரியர் காலத்தை அறுதியிடப் புக்கனர் அவ்வகுப்பார் ஒன்றே டொன்றெவ்வாத பல கொள்கைகள கூறுகின்றனர்.

இப்புலவர் வாக்கில் வந்துள்ள பின் வரும் செய்தி கள் கவனிக்கத் தக்கன:

" அன்று தொட்டுப் பாண்டியனாடு மழை வறங்கூர்ந்து வறுமை யெய்தி, வெப்புநோயுங் குருவுந் தொடரக்கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல் லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய, நாடு மலிய மழை பெய்து, நோயும் துன்பமும் நீங்கி யது."

" அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய, மழை தொழிலென்றும் மாறாதாயிற்று."

"அது கேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகு வென்பான், நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்ட முந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித் திங்கள் அகவையி னாங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை யெடுப்ப மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப்பிழையா விளையுள் நாடாயிற்று."

"அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தரு மிவளோர் பத்தினிக் கடவு ளாகுமென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே."

இவ்வுரை பெறு கட்டுரையி னுரையில் அடியார்க்கு நல்லார், வெற்றி வேற் செழியன் இளஞ்செழியன் என்பர்; சோணாட்டு உறையூரில் இருந்த அரசன் பெருநற்கிள்ளி என்பர். கொங்கிளங்கோசர், கயவாகு என்ற அரசர் வரந்தரு காதையிலும் கூறப்பட்டுளர். அரும்பத வுரையாசிரியர் கொங்கிளங்கோசர் குறும்பு செலுத்துவார் சில வீரர் என்பர் இக்குறிப்புக்களால் ஆசிரியர் காலம் ஆராயப்படின், இலங்கைச் சரித்திரமாகிய மகா வமிசத்தால் அறியப்படும் முதற்கயவாகுவின் காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டே அடிகளார் வாழ்ந்த காலம் என்பது விளங்கும்.

சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையிற் கூறும் உதய குமரன் தந்தையாகிய கிள்ளி வளவன், பெருநற்கிள்ளியின் வேறோ, இரு பெயருடையானும் ஒருவனேயோ என்பது விளங்கவில்லை. சீத்தலைச்சாத்தனார் காலத்தில் இருந்த பிற புலவர்கள் பாடியுள்ள பாண்டிய சோழ சேர அரசர் பெயர்களும் இப்பெயர்களோடு வைத்து ஆராய்தற்குரியனவாம்.

சாத்தனார் கடைச்சங்கப்புலவர் என்பது யாவரும் அறிந்ததே. இளங்கோவடிகள் அப்பெருமை பெற வில்லையாயினும், திருவள்ளுவர் வாக்கைத் தம் நூலகத்தும் எடுத்தாண்டிருத்தலால், வள்ளுவனார்க்குப் பிற்பட்டவராகவோ, சம காலத்தவராகவோ இருக்கலாம்.

4. பெருந்தலைச் சாத்தனார்

“ குமண வள்ளலைக் குவலய முணரச்
செந்தமிழ்ச் செய்யுள் செய்த நூல்
பெருந்தலைச் சாத்தனார் பெருமையே சுவமே.”

ஆவூர் மூலங்கிழார் வரலாறு கூறும் இடத்தில் அவர் மகனாராகிய பெருந்தலைச் சாத்தனார் வரலாறு பின்னர் விரித்துரைக்கப்படும் என்று கூறியிருப்பதால், இங்கு அப்புலவர் வரலாறு வரையப்படுகிறது. பெருந்தலைச் சாத்தனார் சரித்திரத்தை நாம் அறிய உதவியாயுள்ள கருவிகள் இவர் தந்தையார் செய்யுட்களும் இவர் செய்யுட்களுமே.

பெருந்தலைச் சாத்தனார் பாடிய செய்யுட்கள் என இந்நாளில் நமக்கு அகப்படுபவை எட்டுத்தொகையைச் சேர்ந்த நற்றிணையில் ஒன்றும், அகநானூற்றில் இரண்டும், புறநானூற்றில் ஆறும் ஆகிய ஒன்பதாம். யாப்பருங்கல விருத்தியில் காணப்படும் பின் வரும் சொற்றொடர்கள் இங்குக் கவனிக்கத் தக்கன :

“பெருஞ்சித்திரனார் செய்யுளும், ஔவையார் செய்யுளும் பத்தினிச் செய்யுளும் முதலாக வுடையன வெல்லாம் எப்பாற் படுமெனின், ஆரிடப் போலி யென்றும், ஆரிட வாசகம் என்றும் வழங்கப்படு மென்க. இவைகளெல்லாம் இருடிகளல்லா வேனையோராகி மனத்தது பாடவும் ஆகவும் கெடவும் பாடுநரும் கபிலர், பரணர், கல்லாடர், மாமூலர், பெருந்

தலைச் சாத்தர் இத்தொடக்கத்தாராலும், பெருஞ்சித்திரனர் தொடக்கத்தாராலும் ஆரிடச் செய்யுள்போல மிகவும் குறைய வும் பாடப்படுவன எனக் கொள்க.''

இக்குறிப்பினுல் பெருந்தலைச் சாத்தனுர் புலமைத் திறம் எவ்வாறு மதிக்கப்பட்டது என்பது விளங்கும்.

ஆவூர் மூலங்கிழார் வரலாற்றில் அவர் வாழ்ந்த ஊராகிய ஆவூரைப்பற்றி வேண்டுமளவு குறித்திருக் கிறேம். அங்கு எழுதாது விடப்பட்ட சில விஷயங் கள் இங்கு எழுதப்படுகின்றன. திருஞான சம்பந்த சுவாமிகளாற் பாடல் பெற்ற சிவ தலங்களிற் சோழ நாட்டகத்ததாகிய ஆவூர் என்பது ஒன்றாகும். தேவா ரத்தில் இத்தலம் ஆவூர்ப் பசுபதீச்சரம் எனப்படுகிறது. பசுபதீச்சுரர் என்ற பெருமான் வாழும் கோயிலை உடைமையால், ஆவூர் இவ்வாறு கூறப்பட்டது என அறியலாம். தேவாரத்திலும்,

''புண்ணியர் பூதியர் பூத நாதர்
புடைபடு வார்தம் மனத்தார் திங்கட்
கண்ணியர் என்றென்று காத லாளர்
கைதொழு தேத்த விருந்த வூராம்
விண்ணுயர் மாளிகை மாட வீதி
விரைகமழ் சோலை சுலாவி யெங்கும்
பண்ணியல் பாடல் அறுத ஆவூர்ப்
பசுப தீச்சரம் பாடு நாவே.'' 1.

''எண்டிசை யாரும் வணங்கி யேத்தும்
எம்பெரு மானை யெழில்கோள் ஆவூர்ப்
பண்டுரி யார்சிலர் தொண்டர் போற்றும்
பசுப தீச்சரத் தாதி தன்மேல்

கண்டல்கள் மிண்டிய கானற் காழிக்
கவுணியன் ஞானசம் பந்தன் சொன்ன
கோண்டினி தாவிசை பாடி யாடிக்
கூடு மவருடை யார்கள் வானே.'' 2.

'பாடல் அறாத ஆவூர்,' என்றும், 'பாடல் பயிலும் ஆவூர்,' என்றும், 'பாவியல் பாட லறாத ஆவூர்,' என்றும், 'பண்ணியல் பாடல் அறாத ஆவூர்,' என்றும், 'பத்திசை பாடல் அறாத ஆவூர்,' என்றும், பதிகத் திறுதிச் செய்யுளில், 'ஆவூர்ப் பண்டிரி யார்சிலர் போற்றும் பசுப தீச்சரம்,' என்றும் புகழப்படுவதால் புலமையிற் சிறந்தார் பலர் வாழ்ந்த இடமாம் என அறியப் படுகிறது.

தஞ்சாவூர்க் கல் வெட்டுக்களில் நித்த விநோதவள நாட்டின் உட்பிரிவான ஆவூர்க் கூற்றம் என்றதொரு தொடர் அடிக்கடி கூறப்படுகிறது. விளத்தூர், இரும்பு தல் என்ற வூர்கள் இக்கூற்றத்தைச் சேர்ந்தவை என்று சாசன ஆராய்ச்சியாளர் கூறுவர். இதனால், சம்பந்தர் பாடலை யேற்றுக்கொண்ட சோணாட்டுத் தலமாகிய ஆவூரும் இந்த ஆவூர்க் கூற்றமும் ஒன்றே யாகலாம் எனக் கருதக் கூடும். மூலங்கிழார் தம் ஊர் சோணாட்டுள்ளது என்று கூறியிருப்பதாக அவர் வரலாற்றில் விளக்கியிருக்கிறோம். இவ்விரு பெயரும் ஓரே ஊரின் பெயராய் அமைந்து நம்புலவர் பெருமான் வாழ்ந்த வூராயும் இருந்திருக்கலாம் என அமைவோம். சோணாட்டகத்ததாகிய ஆவூரிலே வாழ்ந்த மூலங்கிழார் வறுமைக்கு வாழ்விடமாயிருந்தவர். அவர் வாக்கிலேயே வந்துள்ள,

" கல்குயின் றன்னவேன் னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியற் குறுமகள்''*

என்ற அடிகளால் அவரது மனையறம் எத்துணைச் சிறப் பினதாயிருந்தது என்பது விளங்கும். கல்லாற் சமைந் ததுபோல் அழியாது உறுதியாய் அமைந்த வறுமைக்கு நிலைக் களமாய் இருந்த அவரது வாழ்விற்கு ஒரு சிறப்பு இருந்தது அஃது அவர் மனைக்கு விளக்காய் அமைந்த மனைச் செல்வியாரது கற்பின் சிறப்பேயாம். அவ்வம்மையார் கல்விக்கடலாகிய தம் தலைவர் வறுமைப் பிணியால் வாடிய காலத்தில் அவர்க்கிருந்த துயரத்திற் செம்பாகத்தின் மிகுதியாகவே வளி மறையாகிய தம் மனையகத்திலிருந்து பொறுத்து வந்தார்.

இவ்வாறு வாழ்ந்திருந்த அகநிறைவாகிய செல்வம் படைத்த இத்தம்பதியர்க்கு இல்லற வாழ்வு சிறக்க அமைந்தது: விளம்பி நாகனார் பாடிய பின் வரும் செய் யுள் இன்னாரது வாழ்க்கைக் கருதியே எழுந்ததோ என நினைக்க இடமுண்டு.

" மனைக்கு விளக்க மடவாள்; மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்; —மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே; கல்விதனக்(கு)
ஓதிற் புகழ்சால் உணர்வு.''†

இந்நான்கு மணிகளும் அம்மனையகத்தில் நிறைந்த போது வேறு எவ்வகைச் செல்வம் அவர்க்கு வேண்டு வதாம்?

* புறநானூறு—செய்யுள், 196.
† நான்மணிக்கடிகை

இத்தகைய பெற்றோர்க்குப் பிறந்த மைந்தர் சாத்தனார் என்னின், இவரது இயற்கை நலமும் செயற்கை நலமும் நம் சொல்லளவில் அடங்குமோ? மூலங்கிழார் தம் மைந்தர்க்குச் சாத்தனார் என்ற பெயர் இட்டது, சாத்தன் என்ற தெய்வத்தைத் தம் ஊரவர் ஆலயம் அமைத்து வணங்கி வந்ததாலே போலும். இளம்பருவத்திலே இயல்பாய் இருத்தற்குரிய அளவைக் காட்டிலும் பெருத்த அளவினதாயிருந்த தலையினை உடையராய் இருந்த காரணத்தால், ஊரவர் பலராலும் சாத்தனார் பெருந்தலைச் சாத்தனார் எனப்பட்டார். அப்பெயரே பிறகு இவர் பெயராய் நாடெங்கும் வழங்கத் தலைப்பட்டது.

பெருந்தலைச் சாத்தனார் தம் தந்தையாரிடமும் பிற பெருமபுலவரிடமும் கற்றற்குரிய இலக்கிய இலக்கண முதலிய நூல்களை யெல்லாம் நன்கு கற்ற பிறகு, தமக்குப் பரம்பரையாய் வந்த கல்விச் செல்வமும் வறுமை வாழ்வும் கொண்டுவாழ்ந்து வருவாராயினர்; இறைவன் திருவருட் செயலால் நல்ல குலத்திற் பிறந்த நற்குண நற்செய்கை சிறந்த ஒரு கற்பரசியையும் மணந்து கொண்டார்; பின்னர் ஆவூரிலேயே தம் முன்னோர் வாழ்ந்த சிற்றில்லகத்திலேயே மன நிறைவோடு வாழ்ந்து வந்தார். தந்தையார் சிவ பதம் சேரலும், குடும்ப பாரத்தை வகிக்கும் பொறுப்பெல்லாம் சாத்தனார் தலையில் ஏறியது. இவர், மலையளவு பொருளைத் தெரிவிக்கும் கடலளவு கலைகளையும் கற்றுத் தம் தலையளவிலும் மனத்தளவிலும் அடக்க வல்லவரா யிருந்தும், குடிப் பொறையை யேற்றுக்கொண்டு, இன்னது செய்யின்

இன்னது விளையும் என்று அறிய வியலாதவராய், வறுமையே மனித வாழ்வோ என எண்ணியிருந்தார். இந்நிலையில் இவர் மனைவியார் இறைவன் அருட்செயலால் ஓர் ஆண் மகவு ஈன்றார்.

தந்தையார் தேடித் தந்த பொருள்களைக் கொண்டு தாயார் தம் உடம்பை நன்கு ஊட்டி நன்னிலையில் வைத்திருப்பினன்றோ இளங்குழவியர்க்கு உணவு பெறலாம் வழிஉளதாகும்? தந்தையாராகியசாத்தனாரும் அவர் மனைவியாம் தாயும் ஒரு வழியாலும் நல்ல உணவு பெற்று வாழ இயலாதிருக்கும்போது, அந்நிலையில் அத்தாய்க்குப் பிறந்த குழவி என்ன செய்யும்? அதுவும் வாடிக்கிடந்தது. அந்நிலை கண்டு மனம் பொறாத சாத்தனார், பரிசில் வாழ்வு சுவைத்துப் பார்க்கப் புறப்பட்டார்; தாம் பிறந்த சோணாட்டகத்தில் அக்காலத்தில் உண்டாகிய சில போர்க் குழப்பங்களால் ஈவார் சுருங்கியதால், கொங்கு நாடு சென்றார்.

கொங்கு நாட்டிலே குமண நாடு என்றதொரு நாடு அந்நாளில் இருந்தது. குமரலிங்கம் முதலிய கிராமங்கள் இந்நாட்டில் இருந்தவை என்பது இக்காலத்தில் அறியப்படும். குமணன் என்ற வள்ளல் இந்நாட்டை அந்நாளில் ஆண்டு வந்தனன். அவன் பெருஞ்சித்திரனார் முதலிய பெரும்புலவர்களாற் பாடப் பெற்றுப் புகழ் படைத்திருந்தான். அவன் இளவல் இளங்குமணன் என்பான், தீயார் சொல்லைக் கேட்டுக் குமணனை நாட்டை விட்டு ஓட்டித் தான் நாடு ஆண்டிருந்தான். அப்பொழுது குமணன் காட்டகத்தில் வாழ்ந்திருந்தான். இளங்குமணன் குமணன் தலை கொணர்வார்க்கு ஆயிரம்

பொன் தருவதாகப் பறையறைவித்திருந்தான். குமணன் இந்நிலையிற் காட்டகத்து வாழ்ந்திருக்கையிற் புலவர் திலகராகிய பெருந்தலைச் சாத்தனார் அவனது வள்ளன்மையைப் பற்றிக் கேள்வியுற்று, அங்கு அடைந்தார். குமணன் இருந்த நிலையைக் கண்டும் தாம் வந்த செய்தியைத் தெரிவிக்க லாயினர்.

"பாணரது வறுமையை ஒழிக்கும் வள்ளலரது குடியிற் பிறந்த வள்ளால், போர்த்திறஞ் சிறந்த குமண மன்ன, சமையல் மறந்த பெரிய அடுப்பில் காளான் பூத்தலால், பசிப்பிணி மிகுந்து வருந்தும் என் மனைவி, இளங்குழவிக்குப் பால் கொடுத்தற்கும் ஆற்றலின்றி வாடி வதங்கிக் கண்ணீர் சொரிந்திருக்கும் நிலையைக் கண்டு பொறாது, இந்நிலையில் உதவி புரியத் தக்க வள்ளல் நீயே என நினைந்து, நின்பால் அடைந்தேன். எனது இக்கால நிலையை அறிந்தாயாயின், உனக்கு இப்பொழுது பரிசில் ஈயும் சக்தியில்லா திருப்பினும், உன்னை வளைத்து வலிந்தேனும் பரிசில் பெறாது விடேன்."

என்ற கருத்தமையப் பின் வரும் செய்யுளைப் பாடினர்:

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅல் இன்மையிற் றோலொடு திறங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி,
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணேன்
மனையோ ளெவ்வம் நோக்கி, நினைஇ,
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண,
என்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையல னடுக்கிய

பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே"*

இச்செய்யுளைக் கேட்ட குமணன் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் உயிரொடு வாழ்வதை விரும்பாதவனாயினன்.

" சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈதல் இயையாக் கடை."

என்பது தமிழ் மறையன்றோ? உடனே அவன் இளங் குமணன் செயலைப்பற்றிப் புலவரிடம் கூறித் தன் தலையைக் கொண்டு போய் அவனிடம் கொடுத்து ஆயிரம் பொன் பெறுமாறு கூறி வாளைக் கொடுத்தனன்.

குமணன் செய்த அசசெயலைக் கண்ட பெருந் தலைச் சாத்தனார், தம் மனைவியை மறந்தார்; மதலையை மறந்தார்; தமமை அங்கு வரச் செய்த தம் வறுமையையும் மறந்தார்; 'இந்நிலையில், குமண வள்ளலுக்கு உதவியாக என்ன செய்வது?' என்பதையே சிந்திப்பாராயினார்; சிறிது நேரத்தில் ஒருவாறு இன்னது செய்வது என்ற துணிவு பெற்றார்; பின்னர்க் குமணனைப் பார்த்து, 'அரசே, எனக்குப் பரிசிலாக ஈந்த நினது தலையை நான் திரும்பி வருங்காறும் காப்பாற்றியிருக்க வேண்டுகிறேன்,' என்று கூறிப் புறம்போயினர்; அருகிலேயிருந்த மாந்தையென்ற வூரில் வாழ்ந்த ஒரு சிற்பியைக் கண்டார். அவன் வேந்தர் மகுடங்களும், வேந்த முகவுருவங்களும், உருவச் சிலைகளும், பிறவும் செய்து

* புறநானூறு - செய்யுள், 164.

தேர்ந்தவன். அவனிடம் தம் கருத்தைத் தெரிவித்துக் குமணன் தலைபோல ஒன்று செய்வித்துப் பெற்றுக் கொண்டார்; அவனை மனமாரப் புகழ்ந்து, பின் வரும் பாடல் பாடினர்:

" மாங்கையிலே வாழும் மகுடத் தியாகியுனக்
கேந்து தழும்போ இரண்டுண்டு:—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்.''

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, அந்தப் பொய்த் தலையை எடுத்துக்கொண்டு இளங்குமணனிடம் சென்றனர். அவன் குமணன் தலை கொணர்ந்திருப்பதாய் வந்த இப்புலவரை வரவேற்று, அப்பொய்த் தலையைப் பார்த்ததும், சகோதர பாசத்தால் தன் தீய நினைவை யிழந்து, துக்கித்துப்புலம்பினன்; புலவரைப் பலவாறும் விசாரிப்பாளுயினன். அவன் மனம் நன்னிலையடைந்தது கண்ட புலவர் பின்வருங் கருத்தமைந்த ஒரு செய்யுளைப் பாடினர்:

'' நிலையற்ற இவ்வுலகிலே தாம் நிலைக்கவேண்டும் என்று கருதினோர் இரப்பார்க்கீதல் முதலிய அறச் செயல்களால் தம் புகழை உலகத்தில் நிறுத்தித் தாம் மாய்ந்தனர். நெருங்குதற்கரிய சிறப்பையுடைய உயர்ந்த செல்வர்கள் வறுமை காரணமாகத் தம்மிடம் வந்து இரப்போர்க்கு ஈயாமையால், பண்டை மாக்களைப்போல உலகத்திலே தொடர்ந்து வரும் பெயர் அற்றவராய் இருந்தனர். தாளின்கண் தாழ்ந்த மணிகள் இரட்டும் புள்ளியமைந்த நெற்றியையுடைய யானைகளைப் பாவலர்க்குக் கொடுக்கும் அழிவற்ற நல்ல இசைபடைத்த தலைவனைப் பாடி நின்றேன். 'சிறப்புடைய ஒரு புலவன் வாடிப்

பெயர்தல் என் நாடிழந்ததினும் மிகவும் துன்பந் தருவதாம்,' என என்னிடம் கூறி, எனக்குத் தலைப்பரிசில் தரும்பொருட்டு என்னிடம் வாள் தந்தனன். ஓடாத ஆண்மை சிறந்த நின் தமையனைக் கண்டு, தன்னிற் சிறந்தது வேறொன்றின் மையால், அவன் அவ்வாறு செய்த உபசாரத்தால் மகிழ்ந்து வருகின்றேன்."

அச்செய்யுள் வருமாறு:

"மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே.
துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க் கீஇ யாமையின்
தொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடில் நல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினும் நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
ஆடுமலி யுவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே."*

இச்செய்யுளைக் கேட்டதும் இளங்குமணன் அறிவு விளக்கம்பெற்றுப் புலவர் உதவியாற் குமணனை அழைப்பித்து வந்து, முடி சூட்டி, நாடாளச் செய்து, நன்னிலைபெற்றான். தலைதந்த புரவலனுக்குத் தம் முயற்

* புறநானூறு—165.

சியால் முடிதந்த புலவர், பெருந்தலைச் சாத்தனார் என்ற பெயர் பெற்றது இயல்பே யன்றோ ?

பின்னர் இப்புலவர் பெருமான் குமணன் தந்த பரிசிலைப் பெற்று, மனமுவந்து தம்மூர்க்குச் சென்று, வறுமைத் துயர் நீங்கிச் சில நாள் வாழ்ந்திருந்தார்.

பிறகு ஒரு சமயம் நள்ளி என்ற வள்ளலின் தம்பி யாகிய இளங்கண்டீரக் கோவும், விச்சிக்கோ என்ற சிற்றரசன் தம்பியாகிய இளவிச்சிக்கோவும் ஒருங் கிருந்து அளவளாவியிருந்த ஓரிடத்தை அடைந்தார். அவ்விருவரும் சிறந்த வள்ளலரது வழியில் வந்தவராயி னும், இளங்கண்டீரக் கோவை அன்பிற் கறிகுறியாக மார்போடு தழுவிக்கொண்டு, மற்றவனைத் தழுவாதிருந் தார். அச்செயலைக் கண்ட இளவிச்சிக்கோ, 'ஐய, புலவ ரேறே, ஒருங்கிருந்த இருவருள் என்னைத் தாம் அன் போடு தழுவிக்கொள்ளாமைக்கு என்ன காரணம் ?' என்று கேட்டனன். அதற்கு மறு மொழியாகப் புலவர் ஒரு செய்யுள் செய்தருளினர்:

"பண்டும் பண்டும் பாடுந ருவப்ப
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
கிழவன் சேட்புலம் படரின் இழையணிந்து
புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோன் ஆகலின் நன்று
முயங்க லான்றிசின் யானே பொலந்தேர்
நன்னன் மருகன் அன்றியும் நீயும்
முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்
பாடுநர்க் கடைத்த கதவி னுமேழை

அணங்குசால் அடுக்கம் பொழியுநும்
மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே.'' *

(இ-ள்) ''முன்னை நாளிலே தம்மை அடைந்து பாடிய புலவர் உவக்குமாறு ஆகாயம் அளாவும் சிகரங்களையுடைய பெரிய மலைச்சாரல்களிலே, தம் கணவர் அயலகம் சென்றிருப்பாராயின் அவரது அறத்தைக் கடைப்பிடிக்கும் இயல்புடைய பெண்டிர் ஏற்றவாறு அணிகளை யணிந்து பிடிகளைப் பரிசிலாகக் கொடுக்கும் புகழ் படைத்த குடியிற் பிறந்த கண்டீரக்கோ னுதலாலே, யான் அவனை விருப்போடு தழுவிக் கொள்ளுதல் பொருத்தமே பொற்றேருடைய நன்னனது மரபிற் பிறந்தாயாத லன்றியும் சிறந்த குணங்கள் பல உடையாயாகையால், நீயும் தழுவிக்கொள்ளத் தக்கவனே யாயினும், பொருள் சிறந்த மொழிகளை அமைத்துப் பாடுவார்க்குப் பரிசில் ஈயும் வழக்கத்தைவிட்டு நும் மலையகத்துக் கதவு அடைக்கப்பட்டதால் நினது குடியினரை எயமவர்பாடா தொழிந்தார். ஆகையால், நான் நின்னை மனமுற விரும்பித் தழுவிக் கொண்டிலேன்.''

இதனால், அந்நாளிலே வாழ்ந்திருந்த புலவர்கள் பழிபட்ட குடியிற் பிறந்தான் ஒருவனை எவ்வாறு அவமதித்திருந்தனர் என்பது விளங்கும். இளவிச்சிக் கோவுக்கு வந்த குறை யென்னவெனில், பரணர் என்ற புலவர் பெருமானாலே தெரிவிக்கப்பெற்ற நன்னன் செய்த பெண் கொலையும், ஔவையார் அருளிச்செய்த,

''இருள்தீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயும் அன்றுநின் குற்றம்—பொருள்சேர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனவிரண்(டு)
ஓட்டைச் செவியும் உள.''

புறநானூறு—செய்யுள், 151.

என்ற பாடலிற் கண்டவாறு அந்நன்னன் புலவர்க்கு ஈயும் வழக்கம் இன்றிக் கதவடைக்கும் இயல்புடையானாயிருந்ததுமாகும். இதனால், ஒரு குடியில் ஒருவன் ஒரு பழி பூண்பானாயின், அவன் வழி வருவாராகிய பிறரையும் அப்பழி பற்றுவதும், அது காரணமாகப் புலவர் பெருமக்கள் அக்குடியினரையே பாடாதொழிதலும் அந்நாள் இருந்த இயல்பு என்பது இனிது விளங்கும். நன்னன் பெண் கொலை புரிந்த வரலாறு அதனைத் தெரிவிக்கும் செய்யுளை இயற்றிய பரணர் வரலாற்றில் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

மற்றொரு சந்தர்ப்பத்தில் கோடை மலைத் தலைவனும், பாண்டியன் படைத்தலைவனுமாகிய கடிய நெடு வேட்டுவன் என்பானிடம் இவர் பரிசில் பெறச் சென்றார் அவன் இப்புலவர் பெருமையை உள்ளவாறு அறியாது, பரிசில் தருவதற்குக் காலந் தாழ்த்தனன். அது கண்டு, அரும்பொருள் அமைந்த பின் வருஞ் செய்யுளைப் பாடினார்:

“ முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே.
விறற்சினந் தணிந்த விரைபரிப் புரவி
உறுவர் செல்சார் வாகிச் செறுவர்
தாளுளம் தபுத்த வாண்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருந,
சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கணந் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ, நோயிலை யாகுக.
ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துக்

கடல்வயிற் குழீஇய வண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா வாங்குத் தேரோ
டொளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே."*

(இ - ள்) "நிறைந்த செல்வமுடைய மூவேந்தராயினும், எம்மைப் பேணாது ஈவதை யாம் விரும்போம். வெற்றியாலே உண்டாகிய கோபம் தணிந்து விரைந்து செல்லும் குதிரையையுடைய போர் செய்ய ஆற்றாது பணிய வந்து அடைந்த பகைவர்க்குப் புகலிடமாய்த் தம் வலி மிகுதியாற் செருக் குற்று எதிர்த்து நின்ற பகைஞர்க்கு முயற்சி கிளரும் உள்ளத் திறுதியைக்கெடுக்கும் வாட்போரிற் சிறந்த படையையுடைய வெண்பூ நிரம்பிய முல்லைவேலி சூழ்ந்த கோடைமலைத் தலைவ, சிறியவும் பெரியவும் ஆகிய புழைகளைக் கெடுத்து விலக்கிய மானினது கூட்டத்தை அழித்த விரைந்து செல்லும் சினமிக்க நாயையும் வலிய வில்லையும் உடைய வேட்டுவனே, பரிசில் வாழ்நரது சுற்றம் இடி முழங்கும் புது மழை பொழிய வேண்டிக் கடலிடம் நீர் எடுக்கத் திரண்டு சென்ற முகிற்கூட்டம் நீர் இன்றிமீளாதவாறுபோலத் தேருடன் விளங்கிய ஒளி விளங்கும் கொம்புகளையுடைய பெருமை மிக்க களிறுகளைப் பரிசிலாகப் பெற்றன்றி மீளா. (எமக்குப் பரிசில் நீட்டித் தாயாயினும்,) நீ நோயின்றி இருப்பாயாக."

இச்செய்யுளில் சில கருத்துக்கள் கவனித்து மறவாது போற்றத் தக்கன :

'முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே.

என்ற அடிகள் ஆவூர் மூலங்கிழார் மைந்தராகிய புல

* புறநானூறு—செய்யுள், 205.

வர் வாக்கில் அன்றி, வேறு எவரது வாக்கில் மனவுறுதி யோடு கலந்து எழும்?

'நோன்சிலை வேட்டுவ, நோயிலை யாகுக.'

என்பது, தந்தையார் சென்ற நெறி பற்றி, அவர் அடி யொற்றி, அரும்புலமை படைத்த மைந்தனார் வாக்கில் அமைந்தது பொருத்தமே.

"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தான்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.''

என்ற பெரியார் வாக்குக்கிணங்க, தமக்குப் பரிசில் நீட் டித்து அவமதித்த கடிய நெடுவேட்டுவன் விரைவிலே தீங்குறுதல் திண்ணம் ஆதலின், அவன் அத்தீங்கு உறாமைக் காக்கும்பொருட்டு இவ்வண்ணம் கூறினார். ஆவூர் மூலங்கிழார் வரலாற்றிலும் இத்தகைய வாழ்த் துரை ஒன்று விளக்கப்பட்டுளது.

இச்செய்யுளின் இறுதி நான்கடிகளில் அமைந்த உவமை எண்ணி யெண்ணியின்புறத்தக்கது. புலவரைக் கடலாகவும் அவரிடம் உள்ள செல்வத்தை அங்கு நிறைந்த நீராகவும் உவமித்து, உலகிற்கு நேரிலே பயன் படலாகாத அந்தவுவர் நீரை முகந்து சென்று உலக வுயிர் அனைத்துக்கும் உதவும் பணிபூண்ட மேகம், உல கத்தார் அறியலாகா வண்ணம் பொருள் நிரம்பி வாழ்ந்துவரும் புரவலரையடைந்து வேண்டும் பொரு ளைப் பெற்றுக்கொண்டு பலர்க்கும் உதவுமாறு அதனைச் செலவிடும் புலவர் பெருமக்களுக்கு நிகராக உவமிக் கப்பட்டது எவ்வளவு பொருத்தமாம்? கடல் தன்

உவர் நீரைப் பிறர்க்குதவ மனமின்றி யிருப்பினும், கால் வீழ்த்து வந்த முகிற் கூட்டங்கள் வாரிக் கொள்ளாமல் விடுவதில்லை. தன்னால் உலகத்துக்கு ஆதற்குரிய பயனை யறியாத புரவலன் ஒருவனிடம் உள்ள பொருளையும் அவ்வண்ணமே அருந்திறம் படைத்த புலவர் பெறாது ஒழியார் என்று கூறியிருப்பது சிறப்புடைத்தேயன்றோ! உலகத்துக்கெல்லாம் நீரை உதவும் மேகம், தான் புகழ் பெறுவதன்றிக் கடலுக்குப் புகழை உதவுவதில்லை. ஈய மனமில்லாப் புரவலரிடம் வலிந்தேனும் பெறும் புலவர் தம் புகழை உலகில் நிறுத்துவதோடு நில்லாமல், இவ்வாறு பரிசில் நீட்டித்துப் பிறகு ஈந்தவர் புகழும் தம்புகழோடு ஒன்றி வளருமாறு அருட்பணி புரிவாராதலால், அவர் மேகத்தினும் சிறப்புடையார் என்பதும் குறிப்பிக்கப்பட்டுளது. 'புரவலரிடம் பெற்ற பொருளைப் புலவர் தாமே அனுபவிப்பதன்றிப் பிறர்க்குக் கொடுப்பதும் உண்டோ?' என்ற வினா எழுமாயின், அதற்கு விடையாகப் பரிசில் பெற்ற புலவர் வாழும் வாழ்வை நன்கு விளக்கும் பின் வரும் செய்யுளைக் காட்டலாம்:

"நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் மென்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே,
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே."*

புறநானூறு—செய்யுள், 163.

(இ - ள்) "நின்னை விரும்பி வாழும் மகளிர்க்கும், நீ நண்பு பூண்ட மகளிர்க்கும், சிறந்த கற்புடைய உன் சுற்றத்தாருக்கும், நின் உறவினராது கடும்பசி தீருமாறு உனக்கு நெடுநாட் பொறுத்த கடன் தந்துதவினர்க்கும், இன்னார்க்கு என்னாமல், என்னோடு ஆராயாமல், இயன்றவளவு நன்றாகக் குடிவாழ்க்கை செய்வோம் என்று கருதாமல், மனைத் தலைவியே, நீயும் எல்லார்க்கும் கொடுப்பாய். முதிரத்துக் கிழவன் குமணன் கொடுத்த இப்பொருளை யெல்லாம் இவ்வாறு நன்கு செலவிடுக"

இதனால், அக்காலத்துப்புலவர் பெருமக்கள் வாழ்க்கை நலம் விளங்கும். இச்செய்யுள் செய்தவர், பெருந்தலைச் சாத்தனார்க்கு மனமொத்த நண்பராகிய பெருஞ்சித்திரனார் என்ற புலவர் தலைவர் ஆவர்.

கடிய நெடுவேட்டுவன், புலவர் பெருமையினை அறிந்து, அவர் தகுதிக்கேற்றவாறு பரிசில் ஈந்து, விடை கொடுத்தான். இச்செய்தியைப் பாராட்டிச் சாத்தனார், அகநானூற்றிலே,

"திருவீழ் மார்பிற் றென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியி னுணர்த்துஞ் சிறுவரை யல்லது
வரைநிலை யின்றி யிரவலர்க் கீயும்
வள்வாய் அம்பிற் கோடைப் பொருநன்."

என்ற அடிகளால் தெரிவித்தனர்.

பின்னர் மூவன் என்ற பெயருடைய தலைவன் ஒருவனிடம் சென்றனர்; அவனிடமும் சில பாடல்கள் பாடினர். அவன், அறிவின் குறையாலோ, நல்லோர் உட

த-பு-ப-3. பா-5.

னுறை பயிற்சி யின்மையாலோ, பெருந்தலைச் சாத்த ஞாது பெருமையை யறியாது, வாளாவிருந்தான்

மனித வாழ்வில் உள்ள குறைகளைக் கண்டு அவற்றைப் போக்கவும், சிறந்த மாண்புகளைக் கண்டு அவற்றைப் பாராட்டி மேன்மேலும் வளர்க்கவும் அவதரித்த புண்ணிய புருஷர்களே புலவர்கள் என்பது எந் நாட்டினர்க்கும் ஒப்ப முடிந்த உண்மையாம் ஆகை யால், தமக்குக் குடித் தொழிலாகவும், உரிமைப் பணி யாகவும், உலக வுயிர்களிடம் கொண்ட அன்பின் கடனா கவும் அமைந்த அப்புண்ணியக் கைங்கரியத்தை இங் கும் பெருந்தலைச் சாத்தனார் இயற்றத் தொடங்கினார் புலவரை அவமதிக்கும் ஒருவனுக்கு அறிவு புகட்டத் தக்க ஆற்றல் புலவர்கண்ணே யன்றி, வேறு எங்கு உளது? அதனால், நம்புலவர் பெருமான் மூவனுக்கு அறிவு பிறக்கும்படி பின் வரும் கருத்தமைந்த செய்யு ளைப் பாடினார்:

"பல வகை வளங்களும் அமைந்த நல்ல நிலங்கள் மிக்க ஊர்களை யுடைய நல்ல நாட்டுக்கு வேந்தே, பல பழங்களையும் கொள்ள விரும்பித் தாம் வாழு மிடமாகிய ஆகாயத்தே பறந்து வந்து, பழம் நிறைந்திருந்த மரத்தில் ஒன்றும் இன்மை யால் ஏமாறி மீளுகின்ற பறவைகளைப் போலப் புலவரால் விரும்பப்படும் குணம் நின்னிடம் உண்டென வெண்ணி வந்து, நின் புகழை விரித்துரைக்கும் பரிசிலேன் யான் வறிது மீளக் கடவேனோ? வாட்போரிற் சிறப்பு வாய்ந்த தலைவனே, நீ ஒன்றையும் ஈந்திலையாயினும், யான் அதன்பொருட்டு வருந் தேன். நீ நோயின்றி வாழ்வாயாக என்றே வாழ்த்துவேன். பெரும்போரை விரும்பும சேயை ஒப்பாய், எனக்கு நீ செய்த

இந்த இளிவரவை நின்னிடம் நெருங்கிப் பயிலுஞ் சிலரன்றிப் பிறர் அறியா தொழிக."

இச்செய்யுளிற் பின் வரும் அடிகள் மிகவும் கவனித்து இன்புறத் தக்கவை:

"பல்கனி நசைஇ அல்குவிசும் புகந்து
பெருமலை விடரகஞ் சிலம்ப முன்னிப்
பழனுடைப் பெருமரந் தீர்ந்தெனக் கையற்றுப்
பெறாது பெயரும் புள்ளினம் போலநின்
நசைதர வந்துநின் இசைநுவல் பரிசிலேன்
வறுவியேன் பெயர்கோ வாண்மேம் படுந,
ஈயா யாயினும் இரங்குவே னல்லேன்.
நோயிலை யாகுமதி பெரும."*

இச்செய்யுளைக் கேட்ட பிறகு அவனும் புலவர் பெருமை யறிந்து ஏற்றவாறு உபசரித்தான்.

பின்னர் ஒரு காலத்தில் பெரும்போர்க் களத்தில் தன் தலைவன் போர் செய்திருக்கத் தான் தனித்திருந்த ஒரு மறக் குடி மகனைக் கண்டு, அவட்கு மகிழ்ச்சி பிறக்குமாறு, வீரர் பெருமையை விளக்கும் சில கருத்துக்களை அமைத்து, ஒரு செய்யுட் பாடினர். அதன் கருத்து வருமாறு:

"வெண்கொற்றக் குடையாகிய பூரண சந்திரன் மேலே ஒளி பரப்பி விளங்கப் படைஞரும் பலரும் சேர்ந்து தங்கின கடல்போன்ற பாசறைக்கண்ணே, புதிய அழிவற்ற படைகளைத் தழுவி வந்த கூற்று வினை வல்ல வீரர்கள் தமர் பிறர் அறியாது மயங்கும் போர்க் களத்தில் தலைவன் பெயரும், தம்

புறநானூறு - செய்யுள், 209.

பெயரும் தோற்றி, 'ஆயுட்காலம் ஒழிந்தார் போர்புரிய வருக,' என்று அறை கூவிக்கொண்டு ஒரு புறத்தே நினைந்து தலைவன் போர் இயற்றி நிற்க, எத்தகைய வீரரும் நாக ஸர்ப்பம் உமிழ்ந்த மாணிக்க மணியை நெருங்க அஞ்சுவதுபோல, அணுகத் துணியாது விலகி நிற்பர். இன்னதாம் நின் தலைவன் வீர மாண்பு.''

நாக ஸர்ப்பம் மணியைக் கக்கி இரை தேடச் செல்லும் என்பதும், அம்மணியின் அருகில் செல்லத் துணிவோர் எவரேயாயினும் அது காண நேரிடுமாயின் உயிரை யுண்ணு தொழியாது என்பதும் நம் நாட்டில் நெடுநாளாய் வழங்கிவரும் செய்தி யென்பதை இப்புலவர் இங்குத் தெரிவித்திருப்பதோடு, அதன் உவமையாக அமைத்து, இம்மறத் தலைவனது பெருமையைப் பாராட்டி யிருப்பதும் கவனிக்கத் தக்கது. இவ்வாறு நம் நாட்டு மறவாது மறச் சிறப்பை அந்நாளி லிருந்த வண்ணம் இன்று யாம் அறிந்து மகிழச் செய்வதும் புலவர் கடமையேயன்றோ ?

நற்றிணையிலும் அகநானூற்றிலும் பாடியுள்ள செய்யுட்களால், இப்புலவர் வரலாற்றிற் சில செய்திகள் விளங்கும். அவை வருமாறு: நற்றிணைச் செய்யுள் அகப்பொருள் பற்றியதாயினும், இளைஞரும் இன்புறத் தக்கவாறு எடுத்துக் காட்டத் தக்கதாக வுளது. அது பாலைத் திணையைப் பற்றியது; தலைவன் இல்லறம் நிகழ்த்தும் நாளில் அறத்தின்பொருட்டும் இன்பத்தின் பொருட்டும் பொருள் தேடக் கருதிச் சிறிது காலம் பிரிந்து செல்லும் பகுதியைக் கூறுவது. சுருக்கமாக அதன் கருத்து வருமாறு:

"நீர் வளம் மிக்க காட்டில் உள்ள கருவிளை மலர்கள் வாடைக்காற்று வீசுவதால், மயிற் பீலியைப்போல அசைய, மழைத்தூவல் உளதாய், ஊரார் அனைவரும் உறங்கும்பொழுதாய் உள்ள நள்ளிரவிலே, நடுங்கு பிணி நலிய, நல்ல அழகு குறைந்து, துன்பம் மிக்க மனத்தினை உடையளாய்த் தன்னை வருத்தும் பிரிவின் துயரால் இளைக்கும் தோளையும் குவளை மலர் மணக்கும் கூந்தலையும் உடைய இனிய மொழியினளாகிய இவளை விட்டுப் பிரிந்து சென்றேனும் முயன்று பொருள் தேடுவம் என்று என் மனம் தூண்டு மாயின், வறுமையான் வரும் இளிவரவு மிகவும் கொடியதே."

இக்கருத்தைத் தெரிவிக்க இதனைத் தம்மனுபவத்தில் அறிந்த இவரன்றி வேறு எவரே உரியவ ராவர்?

அகநானூற்றில், இவர் பாடியுள்ள செய்யுட்கள் இரண்டில் ஒன்று முன்னே ஒரு கருத்தை விளக்க எடுத்துக்கொள்ளப்பட்டது. இங்கு வேறொரு கருத்தை விளக்க மறு முறையும் காட்டப்படும்:

பதின்மூன்றும் செய்யுளில் உள்ள பின் வரும் அடிகள், கவர் பொருள் தருவன:

"தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும்
முனைதிறை கொடுக்கும் துப்பின் தன்மலைத்
தெறலரு மரபிற் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தின் ஆரமும்
இருபே ராரமும் எழில்பெற வணியும்
திருவீழ் மார்பிற் றென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியி னுணர்த்துஞ் சிறுவரை யல்லது
வரைநிலை யின்றி யிரவலர்க் கீயும்

வள்வா யம்பிற் கோடைப் பொருநன்
பண்ணி தைஇய பயங்கெழு வேள்வி."

(இ - ள்.) "தன்னாட்டின்கண் உள்ள தென் கடலிலே பிறந்த முத்தினால் கோக்கப்பட்ட மாலையும், தன் நாட்டுப் பொதிய மலையில் உள்ள போர்க்கள வெற்றியருளும் வலிமை சிறந்த தெறற்கரிய கடவுளைப் பேணிக் குறவர் கொணர்ந்து கொடுத்த சந்தனமும் என்னும் இவ்விரண்டையும் அழகுற அணியும் திருமகள் தங்கும் மார்பினையுடைய பாண்டிய மன்னன் போர்த் தலைவனாகிய குழிகள் வெட்டிப் பிடித்த நெருங்கற்கரிய யானைகளைச் சொல்லால் உணர்த்தும் சிறிது நேரத்திற்குமேல் தன்னிடம் வைத்துக்கொள்ளாமல் இரவலர்க்கு ஈந்து உவக்கும் கூரிய அம்பினையுடைய கோடைப் பொருநன் பண்ணியென்பான் செய்த பயன் சிறந்த வேள்விகள்."

இங்குத் தென்னவனுக்கு முன்னேயுள்ள அடைமொழிகள் பாண்டிய மன்னனுக்குப் பொருந்துவது சிறப்பு; பண்ணி யென்பானுக்கும் பொருந்துவதாய் அமைக்கலாம். கோடைப் பொருநன் என்பதற்கு அகநானூற்றுப் பழைய வுரையாசிரியர் கோட்டூரில் வாழ்ந்த மறவன் என்ற பொருள் செய்திருப்பது கவனிக்கத் தக்கது. கடிய நெடுவேட்டுவன் என்பானைப்பற்றிப் பேசுமிடத்தில் இச்செய்யுளைக் காட்டியது, இஃது அவன் பெயர்க்குப் பொருந்துவதாம் என அறிஞர் பலர் கருதியது கொண்டேயாகும். இங்கு அவன் வேறு இவன் வேறு என அறியவும் இடமிருப்பதாகத் தோன்றுவதும் தெரிவிக்கப்படுகிறது.

'புறப்பாட்டிற் பாடப்பெற்ற கடிய நெடு வேட்டுவன் என்பானும், அகப்பாட்டிற் பாடப்பெற்ற பண்ணி

என்பானும் ஒருவனே; இரு வேறு மறவர் அல்லர்,' என்று துணிந்த அறிஞர் பலர் ஆகையால், அவர்க்குப் பொருத்தமான ஆதாரவுகள் இவையெனக் காட்டுவோம்:

'இரண்டு செய்யுட்களைப் பாடிய புலவரும் ஒருவரே,' என்பது. புறத்தில், 'வெள்ளிவேலிக் கோடைப் பொருந,' என்றார் என்பது அகத்தில், 'கோடைப் பொருநன்,' என்றே கூறியுளர் என்பது.

இரு பெயருடையாரும் வெவ்வேறு மறவர் என்பார்க்கு ஆதாரவு இவையென அச்செய்யுட்களிலிருந்தே காட்டுவோம் :

அகத்தில் தென்னவன் மறவன் என்று கூறப்பட்டிருப்பது.

புறத்தில் அவ்வாறு புகழ்ந்து புலவரால் கூறப்படாமை

அகத்தில் கோடை யென்பதற்கு உரையாசிரியர் கோட்டூர் என்று பொருள் செய்து, அவ்வூரில் வாழ்ந்த பாண்டியன் மறவன் என்றது புறத்தில் கோடை யென்பதற்கு உரையாசிரியர், கோடையென்னும் மலை என்று பொருள் செய்திருப்பது.

புறப்பாட்டின் உரையாசிரியரும் அகப்பாட்டின் உரையாசிரியரும் ஆகிய இருவரும்இப்பாடல்கள் தோன்றிய காலத்தின் வெகு நாட்களுக்குப் பின்பு இருந்தவராகையால், இருவரும் ஒரு புலவர் வாயில் எழுந்த ஓரே சொற்றொடர்க்கு இரு வேறு விதமாகப் பொருள் கொண்டாராயினும், பாடியவர் ஒரு புலவரே யாகையால், அவர் மொழி கொண்டு ஆராயும்போது, இருவர்

பெயராகக் கருதப்பட்ட இம்மறவர் பெயர் ஒருவன் பெயரே யெனவும், கோடைப் பொருநனுக்குக் கடிய நெடுவேட்டுவன் எனவும், பண்ணி யெனவும் இரு பெயர்கள் இருந்தன எனவும் அறியலாம். இன்னும், புறத்தில், "கடுவிசைக் கதநாய் நோன்சிலை வேட்டுவ," என்று வரும் தொடரைக் கொண்டு ஊகித்து, அவனுக்குக் கடியநெடு வேட்டுவன் என்ற பெயரைப் பிற்காலத்தார் அமைத்தார் எனவும், பண்ணி யென்பது அவன் இயற்பெயராய் அகத்தில் வழங்குவது எனவும் அறியலாம்.

இதுகாறும் கூறிய பல வகை வரலாறுகளால், பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் பெருமான் கொங்கு நாட்டிலும், பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும் சஞ்சரித்து, ஆங்காங்கிருந்த பல புரவலரைக் கண்டு பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்து வந்தார் என்பதும்; அவர் பிறந்தது சோழ நாடேயாயினும், அக்காலத்தில் அவரது பெருமையை யறிந்து ஆதரிப்பார் இல்லாக் குறையாலோ, வேறு எக்காரணத்தாலோ, சோழ நாட்டுப் புரவலரைப் பாடிய பாடல்கள் இந்நாள்வரை நமக்குக் கிடைக்கவில்லை யென்பதும் விளங்கும்.

இப்புலவர் குமணனையும் இளங்குமணனையும் பற்றிப் பாடிய செய்யுட்களின் ஆதரவு கொண்டு, இந்நாளிலே சிறந்த புலவர் மரபிலே தோன்றிய புலவர் திலகரும் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய மதுரகவிகளை ஆசுகவிகளாய் இயற்றவல்ல பெரியாரும் ஆகிய மு. ரா. கந்தசாமிக் கவிராயர் இயற்றி உலகிற்

குதவிய குமண சரித்திர காவியம் அறிஞர் பலர்க்கும் பெருவிருந்தாய் விளங்குவது இங்குக் குறிப்பிடத் தக்க விஷயமாம். குமண நாட்டிலே தற்காலம் வாழ்வாராகிய வேறொரு புலவரும் குமண சரித்திரச் செய்யுள் செய்திருப்பதாக அறிகின்றோம். இவ்வள்ளலார் புகழை நாம் இன்று அறிய உதவியபெருந்தகையாளர் நன்றியை மறத்தல் நம்மவர்க்கு இயலுமோ ?

5. கோவூர் கிழார்

புரவலர்க் கறிவுரை புகன்றருள் கோவூர்
கிழாரேனும் புலவர்சீர் கிளத்தத்
துணிந்தனங் கலைமகள் துணைத்தாள் துணைக்கோடே.

சோழ நாட்டிலே, கோவூர் என்ற சிற்றூரிலே, வேளாண் குடியிலே, புலமைக்கும் அறிவுக்கும் நாவன்மைக்கும் உலகுபுகழ்குணம்பிறவற்றுக்கும் உறையுளா யிருந்ததொரு மரபிலே, கோவூர் கிழார் என்ற பெரும்புலவர் பிறந்தார். கோவூர் என்ற இவ்வூர் எங்குளது என்பது இந்நாளில் அறியப்படவில்லை. இப்புலவர் பெருமான் அந்நாளிலேஉறையூரிலிருந்து சோணாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்த சோழன் நலங்கிள்ளி என்பானிடம் பெருநண்பு பூண்டிருந்தார் என இவர் பாடிய செய்யுட்களால் அறியப்படுவதால், இவர் பிறப்பிடமாகியகோவூர் உறையூருக்கருகில் இருந்திருக்கலாம் என ஊகிக்கக் கூடும். இப்புலவர் வரலாறு இப்புத்தகத்தின் அளவுக்கு ஏற்ற வண்ணம் சுருக்கமாய் உரைக்கப்படும்:

நாவலர் தலைவராகிய இவரது வரலாற்றை அறிதற்குதவியாய் இந்நாளில் நமக்குக் கிடைக்கும் ஆதாரவுகள் இவரியற்றியவையாய் எட்டுத்தொகை நூல்களில் நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றும், புற

நானூற்றிற் பதினேந்தும், திருவள்ளுவமாலையில் ஒன்று மாக உள்ள பதினெட்டுச் செய்யுட்களேயாம் அச் செய்யுட்களைக் கொண்டு, இவரது வரலாறு இங்கு ஒருவாறு கூறப்படும்:

இளம்பருவத்திலே தம் ஊரகத்திலும் அடுத்த வூர் களிலு மிருந்த பல பெரியோர்களை அடுத்து, அந்நாளில் வழங்கிய இலக்கண இலக்கியங்களையும் பிற சாஸ்திரங் களையும் நன்கு பயின்று தெளிந்த இப்புலவர் திலகர், கல்வி யறிவொழுக்கங்களாற் சிறந்து ஆன்றமைந்த புல வர் பலரோடு உடனுறை வாழ்வும் பெற்று, நற்குணங் கள் பலவற்றுக்கும் உறையுளாக விளங்கினர் அக் காலத்தில் உறையூரிலிருந்து சோணுட்டின் ஒரு பகு தியை ஆண்டு வந்த நலங்கிள்ளி யென்பான், தன்னுட் டகத்து வாழும் இப்புலவரது பெருமையைப் பலர் வாய்க்கேட்டறிந்து, தன் அவைக்களத்துக்கு அழைப் பித்து, உரிய மரியாதைகள் செய்து, அவைக்களப் புல வருள் தலைவராக்கிக் கொண்டான். அவ்வாறு அவன் செய்த சிறப்புக்கு மனம் மகிழ்ந்த புலவரும் அவன் இசை விளங்கப் பல பாடல்கள் பாடினர்:

கோவூர் கிழார் இவ்வாறு நலங்கிள்ளியொடு வாழ்ந்து வருநாளையில் அவர் செய்த அருட்பணிகள் பலவாம். அவற்றுட் சில இங்குக் கூறப்படும்:

சோழர் குடியிலே பிறந்த நெடுங்கிள்ளி என்ற அரசனுக்கும் இந்நலங்கிள்ளிக்கும் இடையில் அடிக்கடி சிறியவும்பெரியவுமாய்ப் பல போர்கள் நிகழ்ந்தன. நலங் கிள்ளி போர்த்திறம் சிறந்த புரவலனுகையால், நெடுங் கிள்ளியே ஒவ்வொரு முறையும் தோல்வி பெற்றுன்.

ஆயினும், 'இயன்றவரை முயல்வோம்,' என்றெண்ணி, அவன் உறையூர்க்கருகில் இருந்ததும், பெருந்தலைச் சாத்தனாரும் அவர் தந்தையாரும் வாழ்ந்ததும் ஆகிய ஆலூர் என்ற ஊரில் இருந்த கோட்டை ஒன்றைக் கைப் பற்றிக்கொண்டு, உள்ளே புகுந்து கதவை அடைத்துக் கொண்டான். அவனிடம் போர்வினைஞர் பலர் இருந்தனர். தன்னருகிலேயே ஓர் ஊரில் அரணுக்குள்ளே ஒடுங்கிய நெடுங்கிள்ளியை எதிர்த்துப் போராடி வெல்வது தனது கடமையாம் என நலங்கிள்ளி எண்ணினன்; எண்ணியவாறு நிறைவேற்றக் கருதி, அந்த ஆலூர் அரணை முற்றுகை யிட்டான். அப்பொழுது கோவூர் கிழாரும் அவனுடன் வந்திருந்தார். கதவு அடைத்த அரணுக்குள் இருந்த நெடுங்கிள்ளி அகத்திருந்த உயிர்கள் பலவும் படும்பாட்டை யறிந்தும் வெளி வந்திலன் இந்நிலையைக்கண்ட கோவூர் கிழார் போரினை ஒருவாறு முற்றுவிக்க எண்ணிப் புலவர்க்குள்ள உரிமையால், அரணுக்குள்ளே புகுந்து, நெடுங்கிள்ளியைக்கண்டு, பின்வருமாறு பேசினார்:

"அரசே, களிறுகள் பிடிகளோடு கூட்டமாய்ச் சென்று நீர் நிலையில் நீராட வில்லை; நெய்யொடு கலந்து நெல்லஞ் சோற்றைப் பெருங்கவளமாகக் கொண்டு உண்ணவும் இல்லை; தம்மைக் கட்டியிருக்கும் பெருந்தூண்கள் தளருமாறு நிலத்தின்மேற்புரளும் கையுடன் வெய்துயிர்த்து நின்ற நிலை நிற்கவும் ஆற்றாது சுழலுகின்றன. அவை இடி முழக்கம்போல முழங்கும். பால் பெறாமையாற் குழவிகள் அழும். பெண்டிர் பூக்களைப் பெறுதலறுந்தலை முடிப்பர். நல்ல மனையகங்களில் வாழ்வார், நீர் பெறாக் குறையாற் பெருங்குரலெடுத்துக் கூப்

பிடுவர். இன்ன துயரங்கள் நின் கண்ணெதிரே தோன்றவும், நினது முயற்சியில்லாக் குறையாலும் மனத் தளர்ச்சியாலுமே இவை நேர்ந்தன என்பதை அறியாது, இவ்விடத்தில் நீ மன வமைதி யுடையவன்போல இனிது அமர்ந்திருத்தல் எம் போல்வார்க்குப் பெருந்துன்பம் தருவதாம். பகைத்தவர் நெருங்குதற்கரிய வலிமை படைத்த பெருங்குதிரைத் தலைவனே, நீ அறத்தைக்கருதுவாயாயின், இவ்வரண் நினதன்றே என்று கூறிக் கதவைத் திறப்பாயாக. வீரமுடையவனாயின், போர்புரியும் துணிவோடு கதவைத்திறந்து வெளிவருக. அவ்வாறன்றி இவ்விரு திறத்தாலும் வெளிவராது, அறத்தையும் மறத்தையும் மறந்து, திறவாது அடைத்த இந்த உறுதியான நிலைபெற்ற கதவின் காவலுக்குள் அடங்கிய இந்தக் கோட்டையில் ஒரு பக்கத்திலே நீ அடங்கியிருப்பது ஆராயுமிடத்து நாணுந் தன்மையுடையதே.''

இக்கருத்தமைந்த செய்யுளை இவர் கூறக் கேட்டதும் நெடுங்கிள்ளி, ஆவூர்க் கோட்டையை விட்டு நலங்கிள்ளி தொடர்ந்து வராமுன்னரே உறையூர் சென்று, அங்குள்ள கோட்டைக்குட் புகுந்து, முன்போல அடைத்துக்கொண்டான் நலங்கிள்ளி தன் படையோடு ஆவூரைப் பற்றிக்கொண்ட பிறகு அங்கு வந்தான்; வந்ததும், நெடுங்கிள்ளியின் செய்தியை அறிந்து அங்கு மிக்க சினத்தோடு முற்றுகை யிட்டான். அருகில் நின்ற கோவூர் கிழார் அரசர் இருவரையும் சமாதானப்படுத்த மனங் கொண்டார்; முன் போலவே கோட்டைக்குட் புகுந்து, நெடுங்கிள்ளியைக் கண்டார். அவனும் அவர் என்ன சொல்லக் கூடும் என்று எதிர்பார்த்தே அவரை வரவேற்றான். கோவூர் கிழார் அவனை

நல்வழிப்படுத்தக் கருதிப் பின்வரும் கருத்தமைந்த செய்யுளைப் பாடினர்:

''ஐய, நெடுங்கிள்ளியே, இப்பொழுது நின்னோடு போர் செய்து அரணுக்குப் புறத்தே முற்றுகை செய்திருப்பவன் பனை மாலே சூடும் சேரர் குலத்தோனல்லன்; வேப்ப மாலை சூடும் பாண்டியர் குடியிற் பிறந்தானு மல்லன். நினது மாலையும் சோழருக்குரிய ஆத்திப் பூவால் ஆகியதே. நும்மிருவருள் ஒருவர் தோற்பினும், தோல்வி பெற்றதாகிய வசை பெறுவது சோழர் குலமாகிய உமது குடியே. இருவரும் ஏக காலத்தில் வெற்றி பெறலாம் என்பது இயற்கையு மன்று. ஆகையால், நீவிர் இப்பொழுது செய்யும் செயல் நுமது குடிக்குப் பெருமையை அளிக்கத்தக்கதொரு செயலன்று; கொடியால் அலங்கரிக்கப்பெற்ற நும் போன்ற அரசராகிய பிறர்க்கு உடம்பு பூரிக்கும் உவகையை விளைப்பதே யாம். ஒரு குடியில் உள்ளார் பகைப்பது அவர் அழிவையே நாடும் பிறருக்கு மகிழ்ச்சியை விளைத்தல் இயல்பே யன்றோ? ஆகையால், நீவிர் இப்பொழுதே இப்போரை நிறுத்தி, அமைதி பூண முயலுமின்.''

நெடுங்கிள்ளி இவ்வறிவுரையைச் செவி யேற்றதும், உறையூர் அரணை நலங்கிள்ளியிடம் விட்டு, வெளியேறிப் போயினன். இந்நெடுங்கிள்ளி உறையூரில் இருந்த காலத்தில் நலங்கிள்ளியிடம் முன்பு பரிசில் பெற்றுப் பயின்ற இளந்தத்தனார் என்ற புலவர், நலங்கிள்ளியைப் போலவே நெடுங்கிள்ளியும் புலவரை ஆதரிப்பான் என்று எண்ணி, அவனிடம் பரிசில் பெற வந்து, சில பாடல்கள் பாடினர். அவர் வந்த உண்மைக் கருத்தை உணர்ந்து கொள்ளாது, நெடுங்கிள்ளி அவர் தன் பகைஞனிடமிருந்து தன்னிடம் ஒற்றுட வந்த

ஒற்றரோவென ஐயுற்று, அருகில் உண்மை தெளிவிப்பார் இன்மையால், ஒற்றரேயாவர் என்று துணிந்து, அவரைக் கொல்லத் துணிந்தான். அவ்வமயத்தில் இச்செய்தியை அறிந்த கோவூர் கிழார், நெடுங்கிள்ளியிடம் ஓடோடி வந்து, முன்னின்று,

"வண்மை சிறந்த புரவலரை நினைந்து, பழுமரத்தைத் தேர்ந்து செல்லும் பறவைபோலப் போக, நெடிய வழி என எண்ணாது கடத்தற்கரிய வழி பலவற்றையும் கடந்து, திருத்தம் பெறாத நாவால் தாம் அறிந்தவளவு பாடி அங்கே பெறும் பரிசிலால் மனம் மகிழ்ந்து, அதனைக் கொண்டு சுற்றத்தாரை உண்பித்துத் தாமும் பொருளைப் போற்றாது உண்டு, உள்ள மலர்ச்சியோடு பிறர்க்கும் வழங்கி, தம்மைப் புரக்கும் வள்ளலரது சிறப்பே காரணமாக வருத்தம் அடையும் இப்பரிசில் வாழ்க்கை பிறர்க்குத் தீங்கு இயற்ற அறியுமோ ? அறியாதே! ஆயினும், நுட்பமான கல்வி யறிவால் எதிர்த்தாரை வென்று பெருமிதம் கொண்டு, அவ்வண்ணமே நன்கு வாழ்வதால் நும்மை யொக்கும் தலைமையு முடையதே."

என்ற கருத்துப்பட ஒரு செய்யுளைப் பாடிப் பரிசில் வாழ்நராகிய புலவர் பிறர்க்குத் தீங்கு செய்யும் எண்ணம் இல்லாதவர் என்ற பொது நெறியையும் புலவர்க்குள்ள இயற்கைப் பெருமையையும் தெரிவித்து, அந்த இளந்தத்தனை நெடுங்கிள்ளி கொல்லா வண்ணம் பாதுகாத்தருளினர். அச்செய்யுள் இங்கு எடுத்துக் காட்டப்படும்:

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்கு பாடிப்

பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே,திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே "

இப்புலவர் பாடிய செய்யுள் ஒவ்வொன்றும் இவரது வரலாற்றிற் சிறந்த சில சந்தர்ப்பங்களை விளக்கவே உதவு மாயினும், அவற்றுள் அத்தியாவசியமாகிய ஒன்றிரண்டு பின்னும் எடுத்துக் காட்டப்படும். இவ்வாறு தன் நண்புரிமை பூண்ட புலவர் அறச் செயல் புரிந்து வரும் அருமையைக் கேள்வியுற்று நலங்கிள்ளி இவரை முன்னிலும் பெரிதும் பாராட்டுவா னாயினன் அது கண்ட புலவரும் அவனது புகழை மேம்படுத்திப் பல பாடல்கள் பாடினர். அவற்றுள் அமைந்த கருத்துக் களின் சுருக்கம் வருமாறு.

"சிறப்புடைய முறைமையாற் பொருளும் இன்பமும் அறத்துக்குப் பின் வரும் தோற்றம் போலச் சேர பாண்டியருடைய இரண்டு குடைகளும் பிற்பட ஓங்கிய நினது வெண் கொற்றக் குடை கலை நிறைந்த திங்கள் போல விளங்கும். நீ போரிலேயே பெருவிருப்புடைய னாதலால், பாசறைக் கண்ணே வாழ்ந்திருப்பாய். நீ நாடு முழுவதும் வென்று வருதல் உண்டாம் என எண்ணி வடநாட்டு வேந்தரும் துயிலா திருப்பர்."

புறநானூறு—செய்யுள், 47.

"பரிசில் வாழ்க்கையுடைய புலவீர்காள், வம்மின்; நலங்கிள்ளி புகழைப் பாடுவோம் வாரீர். அவன் நமக்குப் பரிசிலாக மதுரை நகரையும் வஞ்சிமாநகரையுட தரவல்லவன். இத்தமிழ் நாடெல்லாம் வேட்கோவர் சிறுவர் கையில் எடுத்த மண் போல அவன் எண்ணிய எண்ணம் போல அமையும்."

இவ்வாறு பலபடியாக அவனைப்புகழ்ந்துளர். அவை உரிய சந்தர்ப்பமும் காரணமும் காட்டிச் செய்யுளோடு எடுத்து விவரிக்கக் கூடாத நிலையில் இருத்தலாற் சுருக்கப்பட்டன.

பிறகு இப்புலவர் பெருமான் புகார் நகரிலிருந்து சோணாட்டின் மற்றொரு பகுதியை ஆண்டு வந்த குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்ற சோழவேந்தனிடம் சென்றார். அவனும் இவரது பெருமை யறிந்து, ஏற்றவாறு உபசரித்து, வரவேற்றான். அவனைப் புலவர் புகழ லாயினர்:

"காலனும், தன்னால் உயிர் கொள்ளற்குரிய காலம் வருந்துணையும் பார்த்திருப்பான். அவ்வாறு காலம் பாராது, வேல் தாங்கிய படைஞர் பலர் மாளும் வண்ணம் வேண்டிய இடத்தே வேண்டியபடி கொல்லும் வெல் போர் வேந்தே, எட்டுத் திசையும் எரி கொள்ளி எரிந்துகொண்டே விழவும், பெரிய மரத்தில் இலையின்றி வற்றிய பெருங்கிளைகள் தீப் பற்றி யெரியவும், வெங்கதிரையுடைய ஞாயிறு பலவிடத்தே யிருப்பதாய்த் தோன்றவும், மற்றும், அஞ்சத் தக்க புட்குரல் எழவும், பற்கள் நிலத்தில் விழவும், எண்ணெயை மயிரிலே வார்க்கவும், ஆண் பன்றியின்மேல் ஏறவும், ஆடை களையவும், வெள்ளிய வலிய படைக் கலம் தான் அமர்ந்திருந்த கட்டிலோடு முறியவும் இவ்வாறு பல வகையாய் உள்ள தீக்கனவுகளை நனவிலேயே காணுமாறு போர் செய்யும் வேந்தே, நின்

வருகையைக் கேட்ட பகைஞர் மனமயங்கிக் காவலற்ற நிலையில் இருந்து, தம் குழவியரின் மலர் போன்ற கண்களை முத்தமிட்டுத் தம் மனைவிமார்க்கு மனத்தில் உள்ள வருத்தம் தோன்றாதவண்ணம் மறைப்பர். நினது கோபத்துக்குப் பாத்திரமாக அமைந்த நாடுகள் இவ்வாறு உள."

இவ்வாறு பல வகைத் தீக்கனவுகளையும் ஒன்று சேர்த்து இச்செய்யுளிற் கூறியிருப்பதும், கிள்ளி வளவனது பெருமையை நன்கு பாராட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கன. இங்ஙனம் தன்னைப் புகழ்ந்த புலவரை அவன் நன்கு மதித்து ஆதரித்தான் என்பதில் ஐயமுளதோ? அங்கு இவர் சில நாள் வாழ்ந்திருந்தார். அக்காலத்தில் அவன் ஒரு பெரும்பாவச் செயல் செய்யத் துணிந்தான் அவனது பெருமையைப் பலபடியாகப் புகழ்ந்து பேசிய புலவரேயாயினும், அவனிடம் குறையைக் காணின், மனம் பொறுத்திருப்பரோ? மலையமான் என்பான் ஒரு பெருவள்ளல்; சிறந்தவீரன். அவனுக்கும் இச்சோழனுக்கும் வெகுநாளாய்ப் பெரும் பகை இருந்தது. மலையமானை எவ்வகையாலும் அடக்க வியலாதிருந்த இச்சோழன், எவ்வாறோ சூழ்ச்சிசெய்து அவன் மக்களைச் சிறை செய்வித்தான்; அவ்விளஞ்சிறாரைத் தனது பட்டத்து யானையின் காற்கீழ் இட்டுக் கொன்று, தன் பகைவனது மரபின் வளர்ச்சியை அழிக்கக்கருதினன். புலவர் அச்செய்தியை அறிந்தார்; கிள்ளி வளவன் யானையை நடத்தத் துணிந்திருக்கும் இடத்துக்கு விரைந்து ஓடி வந்தார்; மலையமான் மக்களது துயர் நிலையைக் கண்டார்; தம்மை மறந்து, களிற்றின் கால் அருகிற் சென்று, அவர்களை எடுத்துத்

தழுவிக்கொண்டார்; கிள்ளி வளவன் முகத் தோற்றத்தைப் பார்த்தார்; சினமும் பகையுமே செறிந்திருக்கக் கண்டார்; மனவருத்த மிக்கவராய்ப் பின்வருமாறு பாடினர்:

" நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலனுழு துண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்.
களிறுகண் டழூஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே."*

(இ - ள்) " நீதான் புறவுக்கு வந்த துன்பமும் பிறவும் தீர்த்தசோழன் மரபிற்பிறந்தாய். இவரோ, அறிவான் முயன்று உண்ணும் கற்றோரது வறுமையை அஞ்சித் தம் பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலையுடைய நாட்டின் தலைவர் மரபிற்பிறந்தோர். இவர் இப்பொழுது களிற்றைக் கண்டு, தம் இளமையால், தாம் அஞ்சி அழும் அழுகையும் மறந்த சிறிய தலைகளையுடைய இளங்குழவிகளாவர். இந்த மன்றத்தைச் சுற்றிலும் வெருண்டு பார்க்கும் புதியதொரு வருத்தம் உடையர். நான் சொல்லிய இவற்றை யெல்லாம் கேட்டனையாயின், நீ விரும்பியதுபோற் செய்வாயாக."

இத்துணை அரும்பொருளமைந்த செய்யுளைக் கேட்டும், புறவுக்கும் பசுவுக்கும் முறைசெய்த குடியிற்பிறந்த தோன்றலாகிய கிள்ளி வளவன், தன் குடிப்பெருமை இழக்குமாறு பழி பூண்பனோ? புலவர் விரும்பியவாறே

* புறநானூறு—செய்யுள், 46.

அச்சிறுவரை விடுதலை செய்து, இவர் வசம் அளித்தான். இவரும் அச்சிறுவரை மலையமான் நாட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

பிறகு தம் நண்பனாகிய நலங்கிள்ளியிடம் சென்று வாழ்ந்து வந்தார். அவனிடம் முன்பு பயிலாத ஒரு பாணனை அவனுக்கு அறிமுகப் படுத்துவதுபோல் அமைந்த ஒரு செய்யுள் பாடினார்: அச்செய்யுளில், பின் வருங் கருத்துக்கள் மிகவும் நயமுடையவை:

"உடும்பை உரித்தது போன்ற எலும்பெழுந்த விலாப் பக்கங்களையுடைய நின் சுற்றத்தாரது பசியை ஆற்றும் புரவலரைக் காணாமல் அரும்பணிபுரிய அமைந்தயாமோடு இங்கே என்ன செய்கின்றாய், பாண?"

"ஈன்ற அணிமை நீங்கி இரண்டொரு நாட்களில் குழவிக்கு உதவுமாறு தாய்ப்பால் சுரப்பதுபோலக் காவிரி வெள்ளம் பாயும் சோணாட்டு வேந்தன் ஆண்மைமிக்க தன் வீரரோடு உறையூரின்கண்ணே வாழ்கின்றான். அவனைச்சென்று கண்டு, வேண்டுவன பெற்று வாழ்க"

பின்னர்ச் சில நாட்களில் கிள்ளி வளவனிடம் சென்றார்; அவனைப் பற்றியும் பாணாற்றுப் படையாக ஒரு செய்யுள் செய்தனர் அச்செய்யுளிலும்,

"தைஇத் திங்கட் டண்கயம் போலக்
கோளக் கோளக் குறையாக் கூழுடை வியனகர்
அடுதீ யல்லது சுடுதீ யறியா(து)
இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்
கிள்ளி வளவன் நல்லிசை யுள்ளி
நாற்ற நாட்டத் தறுகாற் பறவை
சிறுவெள் ளாம்பல் ஞாங்கர் ஊதும்
கைவள் ளீகைப் பண்ணன் சிறுகுடிப்

பாதிரி கமழும் ஓதி யோண்ணுதல்
இன்னகை விறலியொடு மென்மெல வியலிச்
செல்வை யாயிற் செல்வை யாகுவை.'' *

என்ற அடிகள் மிகவும் நயம்படப் பொருட் செறிவு பொருந்தியவை. இங்கு, 'தை மாதத்துக் குளிர்ந்த நீர் நிறைந்த பொய்கைபோலக் கொள்ளக் கொள்ளக் குறை யாத சோற்றையுடைய பெருநகரத்திற் சமையலுக்கு உதவும் தீயல்லது வீடு சுடும் தீ அறியாமல் சோறும் நீரும் ஆகிய இருமருந்துகளை விளைக்கும் நல்ல நாட்டு மன்னன் கிள்ளிவளவன் நல்ல இசையை நினைந்து நாற் றமே நாடும் அறுகாற் பறவையாகிய வண்டுகள் சிறிய வெள்ளாம்பலை ஊதும் வளமை மிக்க பண்ணன் சிறு குடிக்கு விறலியொடு மெல்ல நடந்து செல்வாயாயின், வேண்டுவன பெறுவாய்.' என்று அமைந்ததைக் கவனிக் குப்போது, பண்ணன் என்ற ஒரு வள்ளல் சோழநாட் டில் கிள்ளி வளவன் நட்புக்குரியனாய் வாழ்ந்து வந்த தும், அவன் கிள்ளிவளவனிடம் வரும் பாணர்க்கும் புல வர்க்கும் தானம் ஈந்து மகிழும் இயல்புடையனாய் இருந் ததும், சோணாட்டின் வாழ்க்கை நலச்சிறப்பும், பிறவும் விளங்கும். 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய,' என்று இக்கிள்ளி வளவன் வேறொரு செய்யுளிற் பாடி யிருத்தலால், இவ்விருவர்க்கும் இருந்த நட்பின் சிறப்பு நன்கு விளங்கும். இப்புலவரும் பிறிதோரிடத்தில் சிறுர் மன்னன் என்று ஒருவனைப் புகழ்கின்றார். அப் பெயர்க்குரியானும் பண்ணனே போலும்!

* புறநானூறு—செய்யுள், 70.

பிறகு இப்புலவர் பெருமான் சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் என்ற சோழவரசன் போர்க்களத்திலே கொங்கரையும் குடநாட்டாரையும் வென்று மகிழ்ந்திருந்த சமயத்தில், அவனிடம் அடைந்து நீண்டதொரு செய்யுள் பாடிக் களிற்றுப் பரிசில் பெற்றார். இவன் கிள்ளிவளவனுக்கும், நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் நெருங்கிய சுற்றத்தாளுகிய வேறொரு சோழ அரசனுதல் வேண்டும். இவன் வஞ்சிமா நகராகிய கருவூரை வென்றுகொண்ட காலத்திலே, இப்புலவரால் பாடப்பட்டனன். இவ்வாறு பிற இடங்களிற் சஞ்சரித்திருந்த பிறகு, நலங்கிள்ளியிடமே திரும்பினர்.

நலங்கிள்ளி இவரை மனமகிழ்வோடு வரவேற்றான். அது கண்ட புலவர், தம் உள்ளக் கிடக்கையை வெளியிட்டு,

" தண்சோழ நாட்டுப்பொருநன்
அலங்குளை அணியிவுளி
நலங்கிள்ளி நசைப்பொருநரேம்
பிறர்ப்பாடிப் பெறல்வேண்டேம்
அவற்பாடுதும் அவன்றாள் வாழிய *
* * * *
* * * கடமோன் தோன்றல்,
நினதே, முந்நீர் உடுத்தவிவ் வியனுலக(கு) அறிய
எனதே,கிடைக்காழ் அன்ன தெண்கண் மாக்கிணை
கண்ணகத் தியாத்த நுண்ணரிச் சிறுகோல்
எறிதோறும் நுடங்கி யாங்குநின் பகைஞர்
கேட்டோறும் நடுங்க ஏத்துவென்
வென்ற தேர்பிறர் வேத்தவை யானே. "*

புறநானூறு—செய்யுள், 282.

என்று அமைத்த புகழ்ச்சிகள் இவரது நன்றியுடைமையை நம்மனோர்க்கு வெளிப்படுத்தலாற் பாராட்டற்குரியன. இவ்வாறே கிள்ளி வளவனைப்பற்றியும் ஒரு செய்யுள் பாடியுளர். அதன்கண் உள்ள கருத்தும் பெரும்பாலும் இச்செய்யுட் கருத்துக் கொத்ததே. அச்செய்யுட் பொருள் வருமாறு:

"மிக்க நீர் நிறைந்த நீர் நிலைகளில் மழைத்துளி விழுதல் போல நெய் கலந்து வறையும் சூட்டோடு கிழித்த ஊனும் உட்கொள்ளவும், ஊன் கொண்ட வெண்ணிற முள்ள மண்டையில் பசுவின்பாலை ஊற்றி அம்மணம் ஒழிக்கவும் சுடச்சுட உண்டகாரணத்தால் தோன்றும் வியர்ப்பு அல்லாமல் முயற்சியாலும் உழைப்பாலும் தொழிலாலும் வியர்ப்புக் கண்டு அறியாத வாழ்விலே யாம் வாழும் வண்ணம் தனக்கு இசை நிற்கும்படி எமக்கு ஈந்தருளிய எந்தை கிள்ளி வளவன் நாட்டகத்தில் மருத நிலம் நெல்லும் கரும்பும் நிறைந்த பூக்கள் மிக்குளது; முல்லைநிலம் புல்லைத் தின்னும் பல பசுக் கூட்டத்தோடு வில் நிரம்பிய பல சிறு குறும்புகளை உடையது; நெய்தல் நிலம் காற்றின் உதவியால் வந்த மரக் கலங்களை எண்ணுவோர் புன்னை மரத்தின்மேல் ஏறிப் பார்க்கும் இயைபுடையது; உப்பங்கழிகள் சிறிய வெள்ளிய உப்பைக் குவியல் குவியலாய் விற்று உமணர் ஒலிக்கும் இட முடையவை. அன்ன நன்னாட்டுள் வாழும் பொருநர் இனத்தார் யாம் ஆவேம். யாம் போர் செய்யாத பொருநர் வகையினராவேம். கிழக்கிலிருந்து மேற்கிலும், மேற்கிலிருந்து கிழக்கிலும், வடக்கிலிருந்து தெற்கிலும் தெற்கிருந்து வடக்கிலும், நெருங்காது நீளச்செல்லினும், எங்கிருந்து பார்ப்பினும் புலப்படுகின்ற வெள்ளியைப்போல உள்ளவனும் யாம் வேண்டிய பொருள் இன்னவையென உணர்வானும் ஆகிய கிள்ளி வளவன் வலிமையும் முயற்சியும் வாழ்வனவாக."

இதனால், இப்புலவர் பெருமான் நலங்கிள்ளியிடம் கொண்ட அன்பில் ஒரு சிறிதும் குறையாத அன்பைக் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனாகிய இம்மன்னனிடமும் கொண்டிருந்தார் என்பது விளங்கும்.

பின்னும் வேறொரு செய்யுளில் நலங்கிள்ளியின் புகழ் கூறுவாராய்த் தம் வறுமையும் அவன் கொடுக்கும் சிறப்பும் வெளியிட்டுள்ளார். தம் ஆடையைத் 'தொன்றுபடு சிதார்,' என்றது கவனிக்கத் தக்கது.

" தன்பகை தடிதலன்றியும் சேர்ந்தோர்
பசிப்பகை கடிதலும் வல்லன் மாதோ."

என்று இச்செய்யுளில் நலங்கிள்ளியைப் புகழ்ந்துளார். இது புறநானூற்றில் இறுதிச் செய்யுளாம். இவர் பாடிய செய்யுட்களில் நலங்கிள்ளியைப்பற்றிப் பாடியவை ஏழு செய்யுட்களாம். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுக்குரியவை நான்காம். நெடுங்கிள்ளிக்கு ஒன்றும், நெடுங்கிள்ளி நலங்கிள்ளி என்ற இருவர்க்கும் பொதுவாக ஒன்றும் ஆகும் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு ஒன்றும். பண்ணனாயிருக்கலாமோ என ஊகிக்கக் கூடியதும், ஆனால் பெயரின்றி யிருப்பதுமாகிய செய்யுள் ஒன்றும். இவையனைத்தும் புறநானூற்றுச் செய்யுட்களே இவை யொழிய, இவர் பாடிய பிற செய்யுட்களால விளங்கும் செய்திகள் இங்குச் சுருக்கமாகக் குறிக்கப்படும்:

திருக்குறட் சிறப்புப் பாயிரமாய் அமைந்த திருவள்ளுவ மாலையில் இப்புலவர் பாடியதாக ஒரு செய்யுள் உள்ளது. அது வருமாறு:

"அறமுதல் நான்கும் அகலிடத்தோ ரெல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி."

(இ-ள்) "உலகில் வாழ்வார் அனைவரும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களை முறையே தேர்ந்து உணர்ந்து தெளியும் வண்ணம் திருவள்ளுவ தேவர் முப்பாலில் அமைத்துக் குறள் வெண்பாவாலே பாடிய நூலுக்கு முற்காலத்து வாழ்ந்து புகழ் படைத்த பண்டைப் புலவர் மொழியொன்றும் ஒவ்வாது."

இங்கு, 'முன்னை முதுவோர் மொழி,' என்பதற்கு, 'முனிவரும் அறிவரும் பிற பெரியாரும் அருளிச் செய்த மறைக்கொப்பாகிய நூல்கள்,' எனப் பொருள் கொள்வதும், வேதமே என்று பொருள் கொள்வதும் உண்டு. வேதத்தை முதுவோர் மொழியென்று கூறுவது நம் முன்னோர் கொண்ட கொள்கைக்குப் பொருந்தாமையால், வேதத்தின் வேறாகிய சாஸ்திரங்கள் என்று கூறலே பொருத்தமாம்.

இப்புலவர் இயற்றிய நற்றிணைச்செய்யுள் ஒன்றும் குறுந்தொகைச் செய்யுள் ஒன்றும் நயம்பட அகப் பொருட் சுவையை விளக்க அமைந்துள. அவற்றின் உள்ளுறை பொருள் நயத்தை உய்த்துணர்ந்து இன்புறற்குரிய புலவர் பெருமக்கள் அவற்றுள் அமைந்த அழகைப் பெரிதும் பாராட்டியிருக்கின்றனர். இனி இப்புலவர் ஆவூர் மூலங்கிழாரும் சோழன் நலங்கிள்ளியைப் பாடிய பிற புலவரும் வாழ்ந்த காலத்திற் சோழ

நாட்டிலே வாழ்ந்தவர் என்ற அளவில் இவரது காலம் இன்னதென உணரப்படும்.

"சொல்வன்மை யுண்டேனிற் கொன்னே விடுத்தொழி
நல்வினை கோறலின் வேறல்ல." [நல்

என்ற புலவர் கூற்று, கோவூர் கிழார் வாழ்வின் நோக்கத்தை விளக்குவதாம்.

6. மாறோக்கத்து நப்பசலையார்

> உலகம் உவப்ப உண்மை நெறிசொலும்
> மாறோக் கத்துநப் பசலையா ரென்ற
> பெண்மைப் புலவர்சீர் பேசுவம் சிறிதே.

பாண்டிய நாட்டிற் கொற்கை நகரைச் சூழ்ந்த நாடு மாறோக்கம் எனப்படும் என்பர் இந்நாடு மாறோகம் என்றும் கூறப்படும் என்பர். இந்நாட்டிலே நப்பசலை யார் என்ற சிறப்புப் பெயர் வாய்ந்த பெண் புலவர் ஒரு வர் வாழ்ந்து வந்தார். நக்கீரர், நப்பாலத்தனார், நக்கண் ணையார் என்ற பெயர்களிலே அமைந்தது போல, ந என்னும் உரிச் சொல் இங்கும் சிறப்புக் குறிப்பதாம். ஆயின், பசலையார் என்பது இவரது இயற் பெயரோ எனில், அவ்வாறும் துணிதற் கில்லை. ஏனெனில், இப் புலவர் தாம் பாடிய நற்றிணைச்செய்யுளில், “மணிமிடை பொன்னின் மாமை சாயவென் அணிநிறம் சிதைக்கு மார் பசலை” என்று பசலையின் இயற்கையை விளக்கிக் கூறுவதாற் பசலையார் எனப்பட்டார். அதுவே பின் னர், ‘ந’ என்ற சிறப்புணர்த்தும் உரிச் சொல் சேர்ந்து, நப்பசலையார் என்றாகி, இவர் நாட்டோடு சேர்ந்து, மாறோக்கத்து நப்பசலையார் என வழங்கப்படுகிறது.

எட்டுத் தொகை நூல்களிலே செய்யுட் செய்த பெண் புலவர் பிறரும் உளராயினும், அவருள் இந்நல்

லிசைப் புலமை மெல்லியலார் வரலாறு சிறிது விளக்கிக் கூறத் தக்க ஆதாரங்களை உடையதாய் இருத்தலால், இங்கு எழுதப்படுகிறது. இவர் பாடிய செய்யுட்களாய் இக்காலம் வரையில் வழங்குபவை நற்றிணையில் ஒன்றும், புறநானூற்றில் எழுமாக உள்ள எட்டுப் பாடல்களேயாம். இவற்றால், இவர் பாண்டிய நாட்டவரேயாயினும், பிற நாடுகளிலும் சஞ்சரித்தவர் என்பது நன்கு விளங்கும். அகநானூற்றிலே செய்யுள் செய்த புலவர், ஒருவர் மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார் எனப்படுவர். அவரும் இப்புலவர் வாழ்ந்த நாட்டிலே வாழ்ந்தவர் போலும்.

இப்புலவர் நற்றிணையிற் பாடிய செய்யுள் மிகவும் சுவையுடையதாம். அதை முதற்கண் எடுத்துக் காட்டிப் பிறகு பிற செய்யுட்களைக் கொண்டு இவர் வரலாற்றை ஆராய்வோம் :

“ வாரல் மென்றினைப் புலவுக்குரல் மாந்திச்
சாரல் வரைய கிளையுடன் குழீஇ
வளியேறி வயிரிற் கிளிவிளி பயிற்றும்
நளியிருஞ் சிலம்பின் நன்மலை நாடன்
புணரிற் புணருமார் எழிலே பிரியின்
மணிமிடை பொன்னின் மாமை சாயவென்
அணிநலஞ் சிதைக்குமார் பசலை யதனால்
அசுணங் கொல்பவர் கைபோல் நன்றும்
இன்பமுந் துன்பமும் உடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே.” *

* நற்றிணை—செய்யுள், 304.

(இ - ள்) "கிளிகள் மலைச் சாரலில் உள்ள தம் கிளைகளோடு கூடித் தாம் கொள்ளையிடுதற்குரிய மெல்லிய தினையின் மணமிக்க கதிரைக் கொய்து தின்ற, காற்றால் ஒலி எழும்பும் குழலொலி போல ஒன்றையொன்று அழைத்து மகிழுட நெருங்கிய பக்க மலைகளையுடைய நல்ல மலை நாடனாகிய தலைவன் வந்து என்னோடு சேர்ந்திருந்த காலம் எல்லாம் எனக்கு நல்ல அழகு உண்டாகாநிற்கும். அவன் என்னைப் பிரிந்ததும் நீல மணி யிடையிட்ட பொன்போல எனது மெய்யின் அழகு கெடப் பசலை தோன்றி, என் நலங் குலைக்கும் ஆதலின், தண்மையும நறுமணமும உடைய மாலைகளை யணிந்த என் காதலன் மார்பு இசையின்பம அறிந்து துய்க்கும் விலங்காகிய அசுண மாவினைக் கொல்பவர் கைபோல இன்பமும் துன்பமும உள்ளதாய் இருக்கின்றது."

'பறைபட வாழா அசுணமா,' என்பாராதலால், அசுணமா என்னும் விலங்கைக் கொல்ல விரும்புவோர், முதற்கண் அதனை யாழிசை கேட்பித்துப் பின்னர் அது கேட்கப் பொறாத பறை முழக்கத்தை எழுப்பிக் கொல்வர். அவர் கையகத்தே அவ்விலங்கிற்கு இன்பமும் துன்பமும இருப்பது உடனுறை காலத்து இன்பம் வளர்த்துப் பிரியும் காலத்துத் துன்பம் தரும் தலைவன் மார்புக்கு ஒப்பாய் இருப்பதாக எடுத்துரைக்கப்பட்டது. இச்செய்யுளில் வந்துள்ள அழகிய அகப்பொருட் கருத்துக்களிற் 'புணரிற்புணருமார் எழிலே பிரியின்என் அணி நலம் சிதைக்குமார் பசலை,' என்பது மிகவும் சிறந்ததாகையால், இப்புலவர்க்குச் சிறப்புப் பெயர் கொடுத்தது.

இனி இப்புலவர் புறநானூற்றிலே பாடியுள்ள பாடல்களால் விளங்கும் வரலாற்றுக் குறிப்புக்களை

எடுத்தெழுதுவோம் அவற்றுள் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பற்றிப் பாடியவை மூன்று செய்யுட்கள்; மலையமான் திருமுடிக்காரியைப் பற்றிப் பாடியது ஒன்று; அவன் மகனாகிய மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணனைப்பாடியது ஒன்று; இன்ன புரவலரைப் பாடியவை என அறியப்படாத செய்யுட்கள் இரண்டாம். இவை யாவும் சொற்பொருள் நயம் மிகவும் பொருந்தியவை

இப்புலவர் பெண்பாலராதலால், பெண்டிர் மனநிலையை ஆடவரைக்காட்டிலும் நன்கு உணர்ந்து பாட வல்லவர் என்பது வெளிப்படை. புரவலர் பலரையும் இவர் பாடிப் பரிசில் பெறப் புறப்பட்ட காலம் கல்வியும் அறிவும் நிரம்பி உலக அனுபவமும் சிறப்பப் பெற்றுப் பேரிளம்பெண் பருவத்துக்கு மேற்பட்ட காலமேயாம் என்பது இவர் வாக்கில் வரும் சில குறிப்புக்களால் விளங்கும். அந்நாளிலே பெண்டிர் புலமை நலம் பெற்றதோடு அமையாமல், புரவலர் பலரைப் பாடிப் பரிசிலும் பெற்றார் என்பது இவர்போன்ற பெண்புலவர் வரலாறுகளால் அறியலாம். ஔவையாரைப்பற்றி முன்பே குறித்திருக்கிறோம். அவர் முதுமைப் பருவம் பெற்ற பிறகே புரவலரைப் புகழ்ந்து பாடச் சென்றார். அவரைப்போல நப்பசலையாரும் புறப்பட்டார். ஆனால், பெருங்கோழி நாய்கன் மகளாராகிய நக்கண்ணையார் என்ற புலவர் இளம்பருவத்திலேயே பாடல் செய்தார் என்பது அவர் பாடல்களால் விளங்கும். வெண்ணிக் குயத்தியார், வெள்ளி வீதியார் முதலிய பெண்டிர் இளம் பருவத்திலேயே பாடல் செய்தவர் என்பது அவர் வாக்

கால் அறியப்படும். இவற்றால் புலமை பெற்றவர் ஆட வரேயாயினும், பெண்டிரேயாயினும், அந்நாளில் நன்கு மதிக்கப் பெற்றனர் என்ற செய்தி அறியப்படும்.

மாறோக்கத்து நப்பசலையார் பாண்டிய நாட்டுப் புலவர் என்பதை முன்னமே குறித்தோம். இவர் சோழ நாட்டுப் புலவர் பலர்க்குப் புரவலனாகித் தானும் நல்லிசைப்புலமை படைத்தவனாகியிருந்த சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனிடம் சென்றார். அவன் போர் செய்வதிற் பெருவிருப்புடையான் என்பதும் ஆண்மையும் வீரமும் மிகப் படைத்தவன் என்பதும் கோவூர் கிழார் பாடல்களாலும் விளங்கும். அவனிடம் சென்று நகைமுக வரவேற்றுப் பெற்ற மாறோக்கத்து நப்பசலையார், பின் வரும் கருத்தமைந்ததொரு செய்யுளைப் பாடினார்:

"நஞ்சு உடைய வெண்மையான பற்களையுடைய கோபம் மிக்க ஐந்தலை நாகம் வந்ததாக வானத்திலே தீப்பிறக்கும் வண்ணம் பெரியதொரு மலை முழையிலே இடியேறு மோதினாற் போலப் புறா அடைந்த துயரத்தைப் போக்கிய வெள் வேல் தாங்கிய சினஞ் சிறந்த செம்பியர் மரபிற் பிறந்த வேந்தே, முதலைகள் பாய்ந்தோடும் குழிந்த இடங்களையுடைய அகழியையும் ஊர் காவலர் விளக்கின் வெளிச்சம் விழுகின்ற இருண்ட இடங்களையுடைய முதலை வாழும் மடுவினையும் செம்பு போன்ற மதிலையும் உடைய தலைமை சிறந்த பழைய வூரின்கண்ணே கச்சை அணிந்த யானையையுடைய அரசு உண்டு. ஆகையால், அவற்றை நல்லவை என்று எண்ணாது, போரின்கண் அழித்தல் வல்லையாய் இருந்தாய்பெருந்தகாய்!"

இங்குப் பகைவர் நாடுகளில் உள்ள கொடிய அரசர்களை மலைப் பிளவுகளிற் புகுந்த கொடிய நஞ்சுடைய

ஐந்தலை நாகங்களுக்கு நிகராகவும், மலை முழைகளில் நுழையும் இடியேறுகட்கு நிகராகவும் கூறி, அவ்வேந்தரை நீ போரிலே அழிப்பாய் என்று சோழனைப் புகழ்ந்ததும், அவன் அவ்வாறு செய்தல் அவனது பரம்பரைக் கடமையே என்பது தோன்றப் 'புறவின் துயரம் தீர்த்த குடியிற் பிறந்தாய்,' என்று விளித்து, 'எளியாரை வாட்டி இறைமைக் குணம் இல்லாராய் இருக்கும் வலியரை அடக்குதல் செய்வாய்;' என அவனுக்கு அரசியல் அறிவித்ததும் கவனிக்கத் தக்கன. இவ்வாறு கூறியதைக் கேட்டு அவன் நப்பசலையாரைப் பெரிதும் பாராட்டினன்.

மற்றும் ஒரு முறை அவனையே புகழ்ந்து பாடுவாராய்ப் பின் வரும் கருத்தமைத்துப் பாடினர்:

" புறவுக்கு நேர்ந்த வருத்தத்தைப் போக்க வேண்டி. யானைக் கொம்பால் கடைந்து அமைத்த வெண்மையான கடையையுடைய கோலாகிய துலாக்கோலில் தான் ஏறிநின்ற சிபி என்ற செம்பியன் மரபிலே பிறந்தாயாகையால், இரந்து வந்தோர்க்கு ஈவது நினக்கு இயல்பேயன்றிச் சிறப்பாகாது. அசுரர்க்குப்பகைவராகிய தேவர்கள் கிட்டுதற்கரிய மிக்க வலிமையுடைய ஆகாயத்துத் தூங்கெயிலை அழித்த நின் முன்னோரை நினைப்பின், ஈண்டு எதிர்த்த பகைவரை அடக்கிக்கொல்லுதல் உன்புகழுமன்று. கேடின்றி மனம் பொருந்திய சோழரது உறையூர்க்கண் நியாய சபையிலே அறம் நின்று நிலைத்ததாகையால், முறைமை செய்தல் நின் புகழுமன்று. ஆதலால், மறம்மிக்கு எழுந்த போரை வென்று, திண்ணிய தோளையும் கண்ணுக்கினிய ஆத்தி மாலையையும் மணம் செருக்கிய குதிரையையுமுடைய வளவ, ஓங்கிய எல்லை அளந்தறியப்படாத பொன் சிகரங்களையுடைய இமயமலையிற் சூட்டிய காவலாகிய

விற்பொறியையும் சிறந்த தொழிற்பாடு பெற்ற தேரையும் உடைய சேரன் அழிய, அவனது அழிவற்ற கருவூரை அழிக்கும் நினது பெருமை மிக்க வலிய முயற்சியைப் பாடுங்கால், யான் யாங்ஙனம் பாடுகேன் !''

அச்செய்யுள் வருமாறு:

''புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோல்நிறை துலாஅம் புக்கோன் மருக,
ஈதல்நின் புகழு மன்றே; சார்தல்
ஒன்னார் உட்கும் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர் நினைப்பின்
அடுதல்நின் புகழும் அன்றே; கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை யவையத்
தறநின்று நிலையிற் றாகலின், அதனால்,
முறைமைநின் புகழு மன்றே மறமிக்(கு)
எழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள்
கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ,
யாங்கனம் மொழிகோ யானே! ஓங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்(டு)
இமயஞ் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டும்நின்
பீடுகெழு நோன்றாள் பாடுங் காலே.'' *

இச்செய்யுளில் அமைந்த சில செய்திகள் இப்புலவரது பெருமையை விளக்குவது காணலாம். யானைக் கொம்பினால் கடை அமைத்துத் துலாக்கோல்

* புறநானூறு—செய்யுள், 39.

செய்வது பண்டையர் வழக்கம் என்பதும், சோழர் குலத்திலே முன் ஒருவன் விண்ணிலே திரியும் எயில் மூன்றை அழித்தான் என்பதும், உறையூரில் அறங் கூரவையம் ஒன்று சிறந்திருந்தது என்பதும், இமயமலை யில் பொற் சிகரம் இருந்தது என்பதும், சேரர் தம் வெற்றிக்கறிகுறியாக அங்கு விற்பொறி பொறித்திருந் தார் என்பதும், அதனைக் கிள்ளி வளவன் அழித்து வஞ்சி நகரைக் கைப்பற்றி இமயத்திற் புலிப் பொறி பொறித்தான் என்பதும், பிறவும் அறியப்படும்.

'தூங்கெயில் மூன்றெறிந்தசோழன்கா ணம்மானே' என்பர் இளங்கோவடிகள். இச்சோழன் இந்திரனை வணங்கி, அனுமதி பெற்று, இந்திர விழாத் தொடங்கி னன் என்பர் கூல வாணிகன் சாத்தனார்.

"வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல் விசும் பிற் றூங்கும் எயிலும் தொலைத்தல்," என்ற செய்தி யைப் பழமொழி பாடிய முன்றுறை யரையனாரும் கூறுவர். இவற்றால், இச்செய்தி சோழர் குடியைப் பற்றிய ஓர் உண்மை வரலாறேயாம் என விளங்கும். இவ்வாறே உறையூர்ப் பேரவையைப் பற்றிய செய்தி பிற புலவரால் அகத்திலும் பாடப்பட்டுள்ளது.

இச்செய்யுள் பிற்காலத்துப் பெரும்புலவர் பலர்க் கும் பலவாறாகத் தம்கருத்துக்களை அழகுபட அமைக்க உதவியாயிற்றென்பது கம்ப ராமாயணம், வில்லி பாரதம் முதலிய காவியங்களால் அறியப்படும்.

மேலே காட்டியவாறு இப்புலவர் புகழ்ந்த கிள்ளி வளவன் குளமுற்றத்திலே துஞ்சினன். அச்செய்தியை அறிந்ததும் இவர் அங்கு வந்து புலம்பிப் பாடினர் :

"சேற்றன் ருயினும் செயிர்த்தன் ருயினும்
உற்றன் ருயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இரந்தன் ருகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே." *

இதன் கருத்து வருமாறு:

"கிள்ளி வளவனைக் கைக்கொண்ட கூற்றுத் தன் மனத்துள்ளே கறுவு கொண்டதாயினும், வெளிப்பட நின்று வெகுண்டதாயினும், உற்று நின்று கையொடு மெய் தீண்டி உயிர் வாங்கத் துணிந்திருக்கு மாயினும், உயிரோடு வாழ்வு பெற்றிராது. பாடும் புலவர் போலக் கை தொழுது வாழ்த்தி இரந்து உயிருண்டதாக வேண்டும்."

இதனால், கூற்றுவனும் அஞ்சும் வலிமை படைத்தவன் என்று தம்மைப் புரந்த புரவலனை இவர் புகழ்ந்ததும், இரந்தார்க்கு உயிரையும் தர வல்ல இறைவனுகையால் கூற்று அவனை இரந்து உயிர் பெற்றிருத்தல் வேண்டும் என்று கூற்றுவனை இகழ்ந்ததும் விளங்கும். இவ்வாறு இறந்த நாளிலும் புகழும் புலவரை ஆதரித்த தாலன்றோ, அந்நாளிலிருந்த புரவலர் இன்னார் என இன்றும் யாம் அறியும் நிலைமையில் உள்ளோம்?

பின்னர் இப்புலவர் மலையமானிடம் சென்ருர். மலையமான் திருமுடிக்காரி தன்னிடம் இருப்பதைப் புலவர்க்குப் பகுத்துக் கொடுத்து உண்டு வாழும் வள்ளல் எனக் கோவூர் கிழார் புகழ்வதால் அறிவோம். அவன் பெண்ணையாற்றங்கரையில் இருந்த சிறியதொரு

* புறநானூறு—செய்யுள், 226.

நாட்டுக்குத் தலைவனாய் இருந்தான். கபிலரும் பிற பெரும்புலவரும் புகழ்ந்து பாடும் பெருமை படைத்த அவனைக் கண்ட இப்புலவர் இனிய மொழிகள் பல வற்றை அழகுற அடுக்கிப் பின் வரும் செய்யுளைப் பாடினர்:

" ஒன்னார் யானை யோடைப்பொன் கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
ஓடாப் பூட்கை யுரவோன் மருக,
வல்லேம் அல்லேம் ஆயினும் வல்லே
நின்வயிற் கிளக்குவம் ஆயிற் கங்குல்
துயில்மடிந் தன்ன தூங்கிருள் இறும்பிற்
பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந,
தெறலரு மரபினின் கிளையொடும் பொலிய
நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன் அதற்கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலஞ் செல்கலா தனையேம் அத்தை
இன்மை துரப்ப இசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தனம் யாமே முள்ளெயிற்
றரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப
அண்ணல் யானையொடு வேந்துகளத் தொழிய
அருஞ்சமந் ததையத் தாக்கி நன்று

நண்ணாத் தெவ்வர்த் தாங்கும்
பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே.''*

இதன் கருத்து வருமாறு:

"முட்போன்ற நச்சுப் பற்களையுடைய பாம்புகளைக் கொல்லும் இடியேற்றின் முழக்கம்போல முரசு எழுந்து முழங்கப் பெருமை சிறந்த யானைகளோடு வேந்தர் போர்க் களத்திலே அழியப் பெரும்போர் செய்து பகைவரைத் தடுக்கும் பெண்ணையாற்றங்கரையில் உள்ள நாட்டின் தலைவனே, பகைவர் யானையின் முகப்பட்டத்தில் உள்ள பொன்னைக் கொண்டு பாணர் சென்னியில் பொற்றாமரை மலர் சூட்டிய வள்ளல் வழியில் வந்தோய், யாம் ஆற்றல் இல்லாதிருப்பினும் இயன்றவளவு நின்னிடம் கூறுவோமாயின், உயர்ந்த சிறப்புச் செய்வாய். ஆயினும், கபிலர் என்ற புலவர் பெருமான் இனி எம்போல்வார் பாட இடமின்றி நின் இசையெல்லாம் அளந்து பாடிவிட்டனர். மேற்கடலிலே சேரர்க்குரிய பொன் பெறும் நாவாய் போய பிறகு பிற நாவாய்கள் போக இயலாதவாறு போல யாம் அப்புலவர் பாடிய பிறகு பாடவியலாதிருக்கின்றோம். எமது வறுமை தூண்டலால், உனது வண்மையைப் புகழக்கருதி இயன்றவளவு பாடுகின்றோம். எமது பாடலையும் ஏற்றுக்கொள்க.''

இச்செய்யுளிற் கபிலரைப் புகழ்ந்து கூறிய அடிகளும், அவர் பாடலுக்கும் பிற புலவர் பாடலுக்கும் உள்ள தாரதம்மியம் தோன்றக் கூறிய உவமையும் இப்புலவரது பெருந்தகைமையை நன்கு விளக்கும்.

பொலந்தரு நாவாய் கபிலர் பாட்டுக்கும், பிற கலம் பிற புலவர் பாட்டுக்கும் நிகர் எனக் காட்டப்பட்டன.

* புறநானூறு—செய்யுள், 126.

"நிலமிசைப் பரந்த மக்கட் கினியிட னின்றிப்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசேல் மாக்கட் கேல்லாம்
பரந்திசை நிற்கப் பாடினன்."

எனும் இவ்வடிகள் கபிலரிடத்து இப்புலவர் கொண்டிருந்த சிறந்த மரியாதையைத் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மலையமான் திருமுடிக் காரியைப் புகழ்ந்து பாடி, அவன் செய்த சிறப்புக்களைப் பெற்றுக் கொண்டு, அவன் நாட்டிற் சில நாள் இருந்தார். பின் தம் ஊர்க்குச் சென்றார். சில ஆண்டுகள் அமைதியாய் வாழ்ந்த பிறகு மறுமுறை அவனைப் பார்க்கக் கருதி வந்த காலத்திலே அவன் மகன் சோழிய வேனாதி திருக்கண்ணன் தலைமை பூண்டிருந்தான். மலையமான் சிவபதம் சேர்ந்தனன். திருக்கண்ணன் சோழ நாட்டுப் படைத் தலைவனாய் அமர்ந்து, அரசரால் அளிக்கப் பெற்ற ஏனாதி என்ற பட்டமும் அதற்குரிய பொற்பூவும் பெற்று, வாழ்ந்து வந்தான். அந்நாளிற் சோழ நாட்டிற் பெரும்போர்கள் பல நிகழ்ந்தன. அவற்றிலெல்லாம் தன்னை ஆதரிக்கும் சோழ வேந்தர்க்குப் பெருமையே மிகுமாறு திருக்கண்ணன் வேண்டுவன செய்தான் இவற்றை அறிந்த நம் புலவர் அவனை மனமாரப் புகழ்ந்து வாழ்த்துவா ராயினர். அவ்வாழ்த்து அரச வாகையைக் குறிப்பதாய் அமைந்தது.

"பிறரை வருத்தும் அச்சந் தரும் அசுரர் கூட்டத்தார் கொண்டு போய் மறைத்ததனால், செய்மைக்கண் விளங்கும் தலைமை சான்ற ஞாயிற்றைக் காணாமல் உலகத்தார் கண்களை இருள் மறைக்க, இவ்வாறு நேர்ந்த துன்பம் உலகத்தை விட்டு

நீங்குமாறு வலிமை சிறந்த அஞ்சன மேனியனாகிய திருமால் அந்த ஞாயிற்றைக் கொண்டு வந்து எங்கும் பரவிய அந்த காரம் அழிய நிறுத்தியவாறு போலப் பகையரசரோடு போர் செய்து தோற்றுப்போனதால் தம் மன்னனை இழந்து வருந்தும் துன்பக் காலத்தில் கோயிலகத்தும் காவிரி பாயும் சோணாட்டகத்தும் பரவிய துயர் நீங்கும் வண்ணம் பொய் யாத நாவினையுடைய கபிலரால் புகழ்ந்துபாடப்பட்ட முள்ளூர் மலையின் உச்சியில் பிறரால் காண்பதற்கரிய இடத்தில் இருந்த சோழனது திங்கள் போன்ற வெண்குடையைத் தோற்றுவித்து, அக்குடையைப் புதுமையாக நிலை பெறுவித்த புகழ்பெற்ற போர்த்தலைவனே, மலைமுழையில் வாழும் புலியை எழுதிய கொடியை யுடைய கோட்டையையும் ஒளி மிக்க அணிகலங்களையும் வண்டு படு கண்ணியையும் பெரும்புகழை யும் உடைய நின் முன்னோ னாகிய தந்தை இவ்வுலகத்திற் செய்த நல்ல அறத்தின் பயனைத் தேவ லோகத்திற் போய் நுகர வேண்டிப் போயினான். ஆகையால், துன்ப முற்றார்க் கெல்லாம் இன்பம் பெருகுமாறு நீ வந்து தோன்றினாய். நினது தோற்றம் மலை பொடியக் காடு தீப்பறக்க நீர் நிலைகள் வற்றி வறள இவ்வாறு கோடை நீடிய பசுமையற்ற காலத் திலே நிலங் குழியப் பெருமழை பொழிந்ததுபோலாம்.''

இச்செய்யுட் கருத்தை உற்று நோக்கும்போது ஒன்று விளங்கும்: கிள்ளி வளவன் யானைக் காலின்கீழ் இட்டுக் கொல்லக் கருதிய மலையமான் மக்களுள் மூத்த வனாகிய இத்திருக்கண்ணன், அச்சோழர் குலத்துக்கே அழிவு நேரும்படி பின்னே நேர்ந்ததொரு பெரும் போரிலே சிறந்த உதவி செய்து, அக்குலத்தார் இழந்த முடியும் குடையும் அரசும் அவரே திரும்பப்பெறுமாறு அளித்தான் என்பதாம். கிள்ளிவளவன் சேரரையும் பிற

ரையும் வென்றான் என்று கூறப்படுவதால், அவன் பின் தோன்றல்களுள் ஒருவனுக்கே இத்திருக்கண்ணன் உதவி செய்திருத்தல் வேண்டும். தேவாசுர யுத்தம் ஒன்றில் தேவர் கண் கெட்டு மயங்கும்படி அசுரர் சூரியனை மறைத்தார் என்றும், அவ்வமயத்தில் திருமால் தேவர் வேண்ட மறைந்த ஞாயிற்றை மறுபடியும் விண்ணிலே தோன்றச்செய்தார் என்றும் உரையாசிரியர் ஒரு கதை கூறுவர். இஃது எப்புராணத்தில் உள்ளதோ. தெரியவில்லை.

இச்செய்யுளில் வந்துள்ள உவமை மிகவும் நயமுடையது. சோழர் குடி அழிவெய்த அவர் குடைமறைய நேர்ந்த பெருந்துயரை அவுணர் ஞாயிறு மறைத்ததற்கும், திருக்கண்ணன் முள்ளூர் மலைமேல் அக்குடையைப் புதுமையாக மறு முறையும் பிடித்ததைத் திருமால் அஞ்ஞாயிற்றைத் திருப்பக் கொணர்ந்தளித்ததற்கும் நிகராக்கியது கவனிக்கத் தக்கது. சூரிய வமிசத்தார் ஆகையால், அவர் குடை சூரியனுக்கு நிகர் எனப்பட்டதும், அக்குடையை மலைமேல் உயர்த்தியவன் திருக்கண்ணனே யாகையால், ஞாயிற்றை உதயகிரியில் உயர்த்த வல்ல திருக்கண்ணனுக்கு அவன் நிகராம் என்றதும் நினைத்து இன்புறற்குரியனவேயாம். இவ்வாறு சொல்லும் பொருளும் பொருந்த உவமை அமைக்கும் ஆற்றல் இப்புலவர்க்கு அமைந்தது மிகவும் பாராட்டத் தக்க தொன்றன்றோ?

இச்செய்யுளினும் இவர் கபிலரைப் புகழ்வாராய்,

"பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடுவரை."

என்று அமைத்தார்

"ஈண்டுச் செய்வினை ஆண்டுச்சென் றுணீஇயர்
உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தனன்."

என்று மலையமான் திருமுடிக்காரியைப்பற்றி இவர் கூறுதலால், வைதிக மதத்தில் நம்பிக்கையுள்ளவர் என்பது விளங்கும்.

இவ்வாறு இப்புலவர் வீரரது வீரமும் வள்ளலாரது வள்ளன்மையும் புரவலரது சிறந்த குணங்களும் பிறவும் விளங்கப் பாடிய பாடல்கள் மூலம் விளங்கும் இவரது வரலாற்றுக் குறிப்புக்கள் நமக்கு இன்னாரது புலமையும் தலைமையும் நிலைமையும் விளக்கும்.

இவர் பாடிய வேறு இரண்டு செய்யுட்கள் உள. அவை இன்னவரைப்பற்றியவை என அறியப்படவில்லை. ஒன்று ஆனந்தப் பையுள் என்ற துறை பற்றியது. அதில்,

"மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதா முடுத்த வம்பகைத் தெரியல்
சிறுவெள் ளாம்பல் அல்லி யுண்ணும்
கழிகல மகளிர்."

என்று கைம்பெண்களது துயர் நிலை இவரால் சித்திரத்தில் சித்திரித்ததுபோல விளக்கப்பட்டுள்ளது. மற்றொரு செய்யுளில் மெல்லிய ஆடை யொன்றைப்பற்றி,

"பாம்புரி யன்ன வடிவின காம்பின்
கழைபடு சோலியின் இழையணி வாரா
ஒண்பூங் கலிங்கம்."

என்று விவரித்திருக்கின்றார். பாம்பின் சட்டையைப்

போலவும் மூங்கிலுள் அமைந்த வெள்ளிய தோல் போலவும் நுண்ணிய இழைகளால் மெல்லியவையாய் நூற்கப்பட்ட ஆடைகள் அக்காலத்தில் உண்டென் பதை இங்குக் குறிப்பிட்டது கவனிக்கத் தக்கது. அச் செய்யுளிற் 'கான்கெழு நாடன் கடுந்தேர் அவியன் என்ற ஒருவனை யுடையேன்' என்பராதலால், அவியன் என்ற ஒரு தலைவனைப் புகழ்ந்து, சில நாள் அவன் சிறப்புச் செய்ய வாழ்ந்தார் என்பதும் அறியப்படும். இவர் பெரும்பொருள்கள் பலவற்றைச் சிலவாகிய சொற் களாலமைந்த சிறிய செய்யுட்களில் அடக்கும் ஆற்றல் வாய்ந்தவர் என்பது மேலே காட்டிய பல செய்யுட்க ளால் விளங்கும். அகத்திலே அவியனைப் பாடிய காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்க்கும், கோவூர் கிழார் க்கும் ஆலூர் மூலங்கிழார்க்கும்,பெருந்தலைச் சாத்தனார்க் கும் இப்புலவர் ஒத்த காலத்தவர் என்பது மேற்காட்டிய செய்திகளால் நன்கு தெளியப்படும்.

7. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

ஆயண்டி ரன்புகழ் அணியுறப் பாடிய
உறையூர் ஏணிச் சேரிமுட மோசியார்
பெரும்புகழ் எடுத்துப் பேசுவம் சிறிதே.

மோசி என்ற பெயர் வாய்ந்த புலவர் பலர். ஒவ்வொருவரையும் தனித்தனியே பிரித்தறியும் பொருட்டு, அவ்வவர்க்கமைந்த சிறப்பியல்பு காரணமாக வெவ்வேறு அடை மொழிகள் வழங்குகின்றன. அவருள் இவ்வரலாற்றுக்குரியார் பிறப்பி லிருந்தே முடவரா யிருந்த காரணத்தால் முட மோசியார் எனப்பட்டார். மோசி என்னும் பெயர் இவர் பிறந்த வூர் காரணமாக இவர்க்கு அமைந்த பெயர் என்பர். அந்துவன், சாத்தன் முதலிய பெயர்கள் பல பெரும்புலவர்க்கு அமைந்திருத்தல்போல மோசி என்ற பெயரும் இயற்பெயராய்ப் பலர்க்கும் அமைந்திருக்கலாம். அவ்வாறன்றி இக்காலத்து அறிவுடையார் சிலர் கருதுமாறு போல, ஊர்ப்பெயராய் இருப்பினும் இருக்கலாம். இவ்விரண்டு கொள்கைகளில் எஃது உண்மை, எது பொய்ம்மை என்று கூறத் தக்க ஆதரவுகள் இந்நாள்வரை ஒன்றும் கிடைக்கவில்லை. இவர் பெயர்க்கு முன்னுள்ள உறையூர் ஏணிச் சேரி என்ற அடைமொழிகளால் இப்பெரியார் உறையூர் நகர்க்கருகில் அந்நாளி லிருந்த ஏணிச்

சேரி என்ற ஒரு சிற்றூரில் பிறந்து வாழ்ந்தவராவர் என்று ஊகிக்கலாம். ஏணிச் சேரி என்பது உறையூர் நகரில் அக்காலத்தில் இருந்த ஒரு பகுதியாய் இருப்பினும் இருக்கலாம். இக்கொள்கையை ஏற்றுக்கொள்வோமாயின், இப்புலவர் சோழ நாட்டிலே உறையூரிலே வாழ்ந்தவர் என்பது உறுதியாம். மோசி என்பது ஊர்ப்பெயர் என்று கருதுவார் கொள்கைக் கிணங்குவோமாயின், அகநானூற்றுப் புலவருள் ஒருவராகிய மோசிக்கரையனார் பிறந்தவூர் மோசிக்கரை என்றும், அதனால் அவர் அப்பெயர் பெற்றார் என்றும் கூறும் அறிஞரது கருத்துக்கேற்ப, இப்புலவரும் அவ்வூரிலே பிறந்தவரோ என ஊகிக்க நேரிடும். இக்காலத்திலே வழங்குகின்ற சிற்றூர்ப் பெயர்கள் ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்கு முன்பும் இவ்வாறே இருந்தன என்று முழுவதும் நம்பிவிடுதலும் பொருத்த மாகாது. ஆகையால், சேது நாட்டில் உள்ள மோசி குடி என்ற வூரிலே இப்புலவர் பிறந்தவராய் இருக்கலாம் என்று இக்காலத்தார் சிலர் துணிந்திருப்பது எவ்வாறு உறுதியுறுமோ என்பது விளங்கவில்லை. சில காலம் போய்ச் சோழ நாட்டிலே சோழன் ஆதரவிலே வாழ்ந்து வந்ததால், உறையூர் ஏணிச் சேரி என்ற அடைமொழிகள் இவர் பெயர்க்கு முன வந்தனவென்றல் பண்டைப்புலவர் வரலாறுகளை ஆராய்வோர்க்குப் பொருத்தமாகத் தோன்றுது. இப்புலவர் சோணாட்டிற் பிறந்தவராயிருப்பதாற் பாண்டி நாட்டவர்க்குத் தம் நாட்டவராகவில்லையே யென்ற மனக்குறை தோன்றற் கேதுவில்லை. எந்நாட்டவராயினும், தமிழ்த் தெய்வத்தின் தொண்ட

ருட் பெரியார் என்று கருதுவதே நமக்கு மன வமைதிக்கும் பெருமைக்கும் தக்கதாகும் இப்புலவர் அந்தணர் குலத்தவர் என்பர் பேராசிரியர். அவரது கருத்தை அறிஞர் பலரும் ஏற்றுக்கொள்வர்

சோழ நாட்டிலே பிறந்தவர் என்றே துணிந்து இவ்வரலாறு எழுதப்படுகின்றது. இவர் பாடிய செய்யுட்களாய் இந்நாள்காறும் வழங்குபவை புறநானூற்றில் உள்ள பதின்மூன்று பாடல்களேயாம. எட்டுத் தொகை நூல்களிலே வேறு எந்நூலிலும் இவர் செய்யுள் காணப்படவில்லை. பெயர் இன்றியுள்ள செய்யுட்களிற் சில இவர் இயற்றியனவாயிருப்பினும் இருக்கலாம் அவ்விஷயம் தமிழ் வரலாறு இப்பொழுது உள்ள நிலையில் ஒன்றும் உறுதி செய்தற்கில்லை புறநானூற்றில் சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளிக்கு நன்மை விளக்கும்பொருட்டு இவர் சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய செய்யுள் ஒன்று. மற்றவையெல்லாம் இப்புலவரால் நல்லிசை நிறுத்தப் பெற்ற ஆயைப் பாடியவை அதிகமான் நெடுமான் அஞ்சி யென்ற வள்ளலுக்கு ஔவையாரும் வேள்பாரி என்ற வள்ளலுக்குக் கபிலரும் புலவராய் வாய்த்தது போல, இப்புலவர் ஆய் அண்டிரன் என்ற வேளிர் தலைவனுக்குப் புகழ்மேம்படுத்தும் புலவர் தலைவராய் இருந்தனர் என்பது இச்செய்யுட்களால் அறியப்படும். இனி அச்செய்யுட்களைக்கொண்டு இவர் வரலாற்றை ஆராய்வோம்:

உறையூர் ஏணிச் சேரி முடமோசியார் என்ற இப் புலவர் பெருமான் கற்ற கேட்ட பெரியோர் பலரோடு

அளவளாவிப் பயின்று, இளமைப் பருவத்தை உறையூரிலே கழித்தார். அக்காலத்திலே அங்கு அரசு பூண்டிருந்தவன் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி யென்பானுவன். புலவர் பெருமான் அவனிடம் சிறந்த நண்பு பூண்டு, அவன் விருப்பிற்கிணங்கப் பல நாளும் அவன் அரண்மனைக்குச் சென்று, அவனைப் புகழ்ந்து வாழ்த்தி வருவாராயினர். பிறகு அயல் நாடுகட்கும் சென்று, தம் புலமையைப் பிறர் அறியச் செய்ய வேண்டும் என்ற எண்ணங் கொண்டார்; அவ்வெண்ணத்தை நிறைவேற்றத் துணிந்து, சோழனிடம் பிரியா விடை பெற்றுச் சேர நாடு சேர்ந்தார்.

அக்காலத்தில் சேர நாட்டிலே தலைமைபூண்டிருந்தவன் சேரமான் அந்துவஞ்சேர லிரும்பொறை என்பான் ஆவன். அவன் மோசியாரை முக மலர்ச்சியோடு வரவேற்றான்; அவர் பாடிய பாடல்களைத் தன் தோளிலே புனைந்துகொண்டான்; மிக்க அன்போடும் ஆதரவோடும் புலவரைத் தன்னருகிருத்தி உபசரிக்கலாயினன். அவன் கருவூரில் வேண்மாடம் என்றதோர் அரண்மனையிலே ஒரு நாள் இப்புலவரோடு அளவளாவியிருந்தான். இருவரும் இயற்றமிழின் இன்பம் பருகித் தம்மை மறந்திருக்கையில், அவர் கண்ணெதிரே, முன்னேயிருந்த பெருந்தெருவில்மதங்கொண்டகளிறொன்று ஓடி வந்தது. அதனைப் பிணிக்குங் கருத்தோடு வாள் வீரர் பலர் அதனைப் பின் தொடர்ந்து வந்தனர். களிற்றின் பிடரில் முக மலர்ச்சியோடு சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி வீற்றிருந்தான். களிறு மதங் கொண்டதாயின், கரிகாற் பெருவளத்தான் குடியிலே

பிறந்த தோன்றல் அதற்கஞ்சிப் பின்னிடைவனே? அத்தகைய ஆபத்தான நிலைமையிலும் அவன் மனத் துணிவை இழவாமல், அங்கு வந்தான். அவனைப் புலவருங் கண்டார்; சேரனும் கண்டான். புலவர்க்குத் தம் நண்பனாகிய சோழ மன்னன் பகை நாட்டிற் புகுந்தமையாற் பரிபவம் ஒன்றும் நேரிடாது திரும்பவேண்டுமே என்ற எண்ணம் உண்டாயிற்று. சேரனுக்கோ, 'நம் பகைவனாகிய இவன் இங்கு எவ்வண்ணம் வந்தான்? நம்மை அவமதிக்கும் கருத்தாலன்றோ நம் கண் முன்னே இவ்வாறு தோன்றுகின்றான்!' என்ற எண்ணம் உண்டாயிற்று. அவன் உள்ளத்தில் அவ்வெண்ணம் எழுந்ததை அவனது முகக் குறியால் உணர்ந்த மோசியார், அவன் முகநோக்கிப் பின் வரும் பாடலைப் பாடினர்:

" இவனியார் என்குவை யாயின் இவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே.
களிறே, முந்நீர் வழங்கும் நாவாய் போலவும்
பன்மீன் நாப்பட் டிங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே.
நோயில னாகிப் பெயர்கதில் அம்ம;
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே."*

* புறநானூறு—செய்யுள், 13.

இதன் கருத்து :—' இவன் யார் ?' என்று வினவுவாயாயின், இவன் புலித் தோலாற் செய்த கவசம் அணிந்து, அம்புகள் துளைத்த மார்பினையுடையான். மறலியைப் போலத் தோன்றும் களிற்றின்மேல் அமர்ந்துளான். அக்களிறும் கடல் நடுவில் வழியறியாது ஓடும் மரக்கலம் போலவும், பல மீன்களின் நடுவே செல்லும் மதியம்போலவும், சுறுமீன்கள்போல வாண்மறவர் தொடர்ந்து சூழ்ந்து வரத் தன்னைக் காவல் செய்தற்குரிய பாகரை அறியாது, மதங் கொண்டுளது. இச்சோழ மன்னவன் கோயின்றிப் பெயர்வானாக. இவன் நீர் வளம் நில வளம் மிக்க சோழ நாட்டு மன்னன் ஆவன் !''

இவ்வாறு மோசியார் கூறியதும், இவரது அன்பை அருப்பெறற் பொருளாகப் பெற்ற சேரன் சோழனைப் பிணிப்பதும் சிறை செய்வதுமாகிய எண்ணத்தைவிட்டு விட்டான். சோழனும் தன் ஊர்க்குச் சென்றனன். புலவர் தம் எண்ணம் நிறைவேறியதால், மிகவும் மகிழ்ந்து, சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையைப் புகழ்ந்து பாடினர். பின்னும் சில நாள் அங்கு வாழ்ந்திருந்தனர். வேறு சில நாடுகளையும் புரவலர்களையும் கண்டு பாட வேண்டும் என்ற எண்ணம் உண்டாதலும், அவனிடம் விடை பெற்றுப் பாண்டிய நாடு நோக்கிப் புறப்பட்டார்.

பாண்டிய நாட்டிலே அரசு செலுத்தியிருந்த பாண்டிய மன்னனையும் பிற தலைவர்களையும் புகழ்ந்து, சில நாள் மதுரை நகரில் இருந்தார். பின் பாண்டிய நாட்டின் தென்கோட்டில் உள்ள ஒரு சிறு நாட்டின் தலைவனும் பெருங்கொடையாளியுமாகிய ஆய் அண்டிரன் என்ற வேளிர் தலைவனைக் கண்டார். அவனிடம் அமைந்திருந்த குணமாண்பு தாம் பிறர் வாய்க் கேட்டதைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கக் கண்டார்.

ஆய் அண்டிரன் தன்னிடம் இருக்கும் செல்வத்தையெல்லாம் இரவலர்க்கு ஈந்து, அதனால் வறுமை வாழ்வுற்றிருந்தான். அவன் மனைத் தலைவியும் திருமங்கலியம் ஒன்று தவிர, மற்ற ஆபரணம் ஒன்றும் இல்லாதவளாயிருந்தாள். இந்நிலையில் அவ்வள்ளலைக் கண்ட நம் புலவர் மனமுருகி,

"ஆயினது அரண்மனை கொடுத்தற்குரிய எல்லாப் பொருள்களையும் இரவலர்க்குக் கொடுத்து, அவ்வாறு கொடுக்கத் தகாத திருமங்கலியம் ஒன்றேயுடைய அவன் மனைத்தலைவியர் வாழ்வதால் அழகிழந்தது என்று கருதுவர் சிலர். சுவைத்தற் கினிதாகிய தாளிப்பின் மணம்மிக்க உணவைப் பிறர்க்கு ஈயாது தம் வயிற்றையே நிரப்பும் புகழ் இழந்த பிற புரவலர் நகர் அடையும் இழிவை, ஆயின் அரண்மனையடையுமோ?"

என்று கூறினார். பின்னும்,

"பாணரும் விறலியரும் நெருங்குதற்கு எளியதாய் இருக்குமே அல்லது, போர் விரும்பி வருவோர்க்கு ஆயின் குன்றம் குறுகற்கு அரிதே."

என்று அவனது ஆண்மை வீரம் மனவுரன் முதலிய குணங்களைப் புகழ்ந்தார். மற்றும் ஒருமுறை பரிசில் பெறும்கருத்தோடு வருவார்க்கு அவன் யானைப் பரிசில் ஈயும் சிறப்பைப்புகழ்ந்து, "பலாப்பழம் மிக்க மரங்களையுடைய மலைக்குரியனாகிய ஆய் அண்டிரன் இரவலர்க்குக்கொடுத்த யானைகளின் தொகைக்கு நிகராக வேண்டுமாயின், வானத்திலே வெற்றிடம் சிறிது மின்றி எங்கும் தாரகைகளால் வெண்மையே விளங்கத் தோன்றுமாயின், அந்த உடுக்கூட்டம் நிகர்த்தலாம்; வேறொன்றும் ஒவ்வாது," என்ற கருத்தமையப் பாடினர்.

த-பு-ப-3. பா-8.

இதே கருத்தை வேறொரு முறையில் அமைத்து இப்புலவர்,

" விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய், நின்னாட்டு
இளம்பிடி ஒருசூல் பத்(து)ஈ னும்மோ
நின்னும்நின் மலையும் பாடி வருநர்க்(கு)
இன்முகம் கரவா(து) உவந்துநீ அளித்த
அண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகடல் ஓட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே. "*

இச்செய்யுளின் இறுதி இரண்டடிகளால் ஆய் என்ற வள்ளல் கொங்கரை மேற்கடற்கரையிலே எதிர்த்துப் பொருது, அவர் புறங் காட்டி யோடச் செய்து, அவர் படைஞர் கையிலிருந்து பல்லாயிரக் கணக்கான வேல்களை வெற்றிக் குறியாய்ப் பற்றிக் கொண்டான் என்பது விளங்கும். இச்செய்தியை அறிந்த நம்புலவர், அவன் இரவலர்க்கீயும் களிறுகளின் தொகை அவன் கொங்கப் போரிலே கைக்கொண்ட வேல்களின் தொகையைக் காட்டிலும் அதிகமாம் என்று கூறிப் புகழ்ந்து, அவன் நாட்டுப் பிடிகள் ஒரு சூலுக்குப் பத்துக் குட்டிகளை ஈனுமோ? என்றதொரு வினாவையும் எழுப்பினர். பின்னும் ஒரு செய்யுளில் விறலியாற்றுப்படை பாடு வாராய்,

" மாரி யன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே."

என்று பாடினர்.

---

* புறநானூறு - செய்யுள், 130.

ஆயினது கொடைச் சிறப்பைப்பற்றிப் பின்னும் கூறுவாராய்,

" இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன் பிறருஞ்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே."*

என்று பாடினர் இதனால், இப்புலவர், இப்பிறப்பிலே அறஞ் செய்தது மறு பிறப்பிலே இன்பம் அனுபவிப்பதற்கு உதவும் என எண்ணி ஈவோர் அறிவிற் சிறந்தார் அல்லர் என்றும், அவர் அறத்தை விற்கும் வணிகரே ஆவர் என்றும் கூறி யிருப்பதும், அக்கருத்தின்றி அறம் புரிவது சான்றோர் சென்ற நெறி யென்று கருதி ஆய் ஈவன் என்று அவனைப் புகழ்ந்திருப்பதும் அறியப் படும்.

மற்றுமொரு செய்யுளில், "யானைப் பரிசில் பெறுதற்கன்று; ஆய் வேளே, நின்னைக் கண்டு போகவே வந்தனன்," என்று தம் ஆதரவு தோன்றக் கூறினர். வேறொரு செய்யுள், இப்புலவர் ஆயின் குணங்களை உள்ளவாறு அறிந்ததன்மேல், 'முன்னே இங்கு வர அறியாதிருந்தேனே!' என்று கழிவிரக்கம் தோன்றப் பாடியதாம். அச்செய்யுள் வருமாறு:

" முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளி னேனே
ஆழ்கென் னுள்ளம் போழ்கென் னாவே
பாழூர்க் கிணற்றிற் றூர்கஎன் செவியே
* * * *
* * * *

* புறநானூறு - செய்யுள், 134.

வடதிசை யதுவே வான்றோய் இமயம்
தென்றிசை ஆஅய் குடிஇன் றாயின்
பிறழ்வது மன்னோஇம் மலர்தலை யுலகே.''*

இச்செய்யுளில் உலகம் நிலைநிற்க வடதிசைக்கண் இமயமும் தென்றிசைக்கண் (பொதியமலை) ஆய்குடியும் வேண்டப்படுவன என்றது மிகவும் பாராட்டத் தக்கது. இளங்கோவடிகள் பொதியிலாயினும், இமயமாயினும், புகாராயினும் என்று மங்களவாழ்த்துக் கூறியது இங்கு நினைக்கத் தக்கது. இமயத்தில் தேவர் வாழ்வதுபோலப் பொதியிலகத்தும் ஆய் குடியிலும் சான்றோர் வாழ்வர் ஆதலால், உலகம் நிலைநிற்கும் என்பது இப்புலவர் கருத்தாம்.

ஆய் குடியைச் சேர்ந்த காட்டிலே யானைகள் பல வற்றைக் கண்டு மன மகிழ்ந்து, 'இக்காடு அண்டிரனைப் பாடி யானைப்பரிசில் பெற்றதோ?' என்று புகழ்ந்துளர். பின்னும், தம்மைப் பாணர்போல உபசரித்து இவர்பாடியுள்ள இரண்டு செய்யுட்களில் பின் வரும் அடிகள் மிகவும் நயமுடையவை:

'' விருந்திறை நல்கும் நாடன் எங்கோன்
கழறொடி ஆஅய் அண்டிரன் போல
வண்மையும் உடையையோ ஞாயிறு,
கொன்விளங் குதியால் விசும்பி னானே.''†

'' பெருமழை கடற்பரந் தாஅங் கியானும்
ஒருநின் னுள்ளி வந்தனென் அதனால்

* புறநானூறு - செய்யுள், 132.

† புறநானூறு - செய்யுள், 374.

புலவர் புக்கில் ஆகி நிலவரை
நிலீஇயர் அத்தை நீயே ஒன்றே
நின்னின்று வறுவி தாகிய வுலகத்து
நிலவன் மாரோ புரவலர் துன்னிப்
பெரிய வோதினுஞ் சிறிய வுணராப்
பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே.''*

இவற்றுள் முன்னதன் கருத்து வெளிப்படை; பின்னதன் கருத்து வருமாறு:

''மேகம் கடலிடம் போயது போல யான் நின்னிடம் வந்தேன்; ஆகையால், ஆய் வேளே, நீ புலவர் புகும் இடமாகி, இவ்வுலகில் எப்பொழுதும் வாழ்வாயாக. நீ இன்மையால் வறுவிதாகிய இவ்வுலகிற் பிறர் வாழ்ந்தும் பயனிலராவர் பெரும்பொருள்களை அரிய சொற்களால் அமைத்துப் பாடிப் புகழ்ந்தாலும் சிறிதேனும் உணரும் அறிவற்றவர்களாய் இருக்கும் சிறப்பின்றி வளர்ந்த செல்வத்தையுடைய பெருமையற்ற மன்னரை எம்மவர் பாடாது ஒழிவாராக.''

இவ்வாறு பல படியாக அவனைப் புகழ்ந்த மோசியார், அவனிடம் பெரிதும் சிறப்புப் பெற்றுப் பல நாள் ஆய் குடியிலேயே வாழ்ந்திருந்தார் என்று துணியலாம். சில நாள் தம் ஊர்க்கும் சென்று வர விரும்பி, அவனிடம் விடை பெற்றுச்சென்றார். திரும்பி ஆய்குடிக்கு வந்து, பொதிய மலையையும் அவனது வள்ளன்மையையும் புகழக் கருதி அவன் அரண்மனைக்கருகில் நெருங்கினார்; எங்கும் துயர்க் கோலமாய் இருக்கக் கண்டார். அருகிலிருந்தார் சிலர் ஆய் அண்டிரனை அந்தகன் கைக்கொண்ட செய்தியைத் தெரிவித்தனர். அது கேட்ட

* புறநானூறு - செய்யுள், 375.

தும், மயங்கித் தம்மையே இழந்தார் போலப் பெரிதும் புலம்பினர்; தம்மைப்போலவே குட்டுவன் கீரனார் என்ற புலவர் ஆய் அண்டிரனை இழந்து வருந்துவதைக் கண்டார். அப்புலவர் தம் துயர் தரியாது கையறு நிலை பாடி,

" ஆடுநடைப் புரவியும் களிறும் தேரும்
வாடா யாணர் நாடும் ஊரும்
பாடுநர்க் கருகா ஆஅய் அண்டிரன்
* * * *
காலன் என்னும் கண்ணிலி உய்ப்ப
மேலோர் உலகம் எய்தினன் எனாஅப்
* * * *
புல்லென் கண்ணர் புரவலர்க் காணாது
கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்
வாடிய பசியர் ஆகிப்பிறர்
நாடுபடு செலவினர் ஆயினர் இனியே "*

என்று ஆயைப் புகழ்ந்து அவனை யிழந்ததால் வருந்தியது தம் மனப்போக்குக்கும் ஒத்திருக்கக் கண்டார்.

இவர் மனம் இருண்டது போல வானகம் எல்லாம் இருண்டது. மேகங்கள் குமுறின பொருந்த இடி முழக்கம் கேட்டது. "இந்நாள்வரை எம்மை வென்று அடக்கியிருந்த ஆய் மாண்டனன். இனி எம் புகழும் உலகத்திற் பரவும்," என்று மேகங்கள் கூறுவது போலத் தோன்றியது. ஆயினும், அவ்விடி முழக்கம் அவர் உள்ளத்தில் வேறு ஒரு கருத்தையும் தோற்றுவித்தது: தேவேந்திரன் தன் நகர்க்கு ஆய் அண்டிரன் வந்ததனால், அவனை வரவேற்கும்பொருட்டு முரசு

* புறநானூறு—செய்யுள், 240.

முழங்கிய முழக்கமோ என எண்ணினர். அக்கருத்தை யமைத்து உடனே பாடினர் :

“ திண்டேர் இரவலர்க்(கு) ஈத்த தண்டார்
அண்டிரன் வரூஉம் என்ன ஒண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்
போர்ப்புறு முரசங் கறங்க
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே.” *

இங்ஙனம் பல பாடல்களால் ஆய் அண்டிரன் பெரும்புகழை உலகறியச் செய்த இப்பெரும்புலவர், இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் என்னும் கொள்கையைத் தெரிவித்தலால், வைதிக மதத்தவரே யாவர். வடதிசையில் இமயமும் தென்றிசையில் பொதியிலும் உலகை நிலை நிறுத்துவன என்று இவர் கூறியது அகத்தியனைப்பற்றி வழங்கும் புராண கதையைக் குறிப்பதாகலாம் என்று அறிஞர் சிலர் கருதுவா ராதலால், இவர் சைவமத அபிமானம் உடையராய் இருக்கலாம். இவரது காலம், கபிலரும் பரணரும் பிற பெரியாரும் வாழ்ந்திருந்த கி. பி. இரண்டாம் நூற்றாண்டே என்பது பல காரணங்களால் அறியப்படும்.

* புறநானூறு—செய்யுள், 241.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
63	19	புல்வரை	புரவலரை
68	13	அதன்	அதனை
78	8	நும்மிருவரும் என்பதற்கு முன்பு	

"நின்னோடு போர்செய்வோன் மாலையும் ஆத்திப் பூவால் ஆகியதே" என்பதைச் சேர்க்க

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
88	19	ஆதும்	ஆகும்
,,	23	செய்புட்களை	செய்யுட்களை
95	12	வரவேற்ற	வரவேற்பு
96	24	உரையூர்	உறையூர்